549

25 OCT 1923

உ

பரமபதிதுணை.

# காமன் பண்டிகை

## எரிந்த கட்சி

# மன்மதன் லாவணி



மதுரைமாநகர் ஸ்ரீமத்

...ங்குமாரு சுவாமி அவர்கள்

இயற்றியது.

1923. [விலை அணா 8.

O-, 8MPL4, K
N23

தமிழ்நாடெங்கும் புகழ்பெற்றுள்ள மஹாவித்வான்,

## ஸ்ரீமான், சங்கரதாஸ் சுவாமிகள்

மாணாக்கர்களிலொருவரான,

சந்தச்சரபம், ஷண்முகதாஸரவர்களியற்றிய,

# பக்தி ஆனந்தக்கேலிப் பதங்கள்.

நண்பர்களே! கவனியுங்கள் ! கவனியுங்கள்!! இது ஒரு புதுமுறையான தமாஷ்! தமாஷ்!! எல்லாம் தமாஷானபாடல்கள். இதுவே நிந்தாஸ்துதிக் கீர்த்தனங்கள். முத்தியை வேண்டிப் பக்தி புரிவார்க்கு முதன்மையான பாடல்கள். ஆலோல வள்ளி கோலாகலமாய் வேலவனோடு ஊசலாடுகையில் ஏசல் பாடுவது போல் காலநாகரிகத்திற்குச் சாலவும் பொருத்தமாய்ச் சிரித்துக் கொண்டு, சிவன் விளையாட்டை விரித்துக் கூறும் விநோதப் பாடல்கள். "பக்கத்திருப்பவர் கெக்கெக்கென்று சிரிக்கச்செய் விகடக்கற்கண்டெனும்" விகடமே நிறைந்த விசித்திரப்பாடல் கள். சிந்தைக்கினிய செந்தமிழ்கமழும்சந்தப்பாடல்கள் நிறைந்த இப் பக்தி ஆனந்தக்கேலிப் பதங்கள் படிப்பாருள்ளம் பரவசமாகவும், கேட்பாருள்ளம் கிளர்ச்சிமிகுக்கவும் ஒருங்குதிரட்டிப் புதிதாயச்சிட்டு வெளிவந் திருக்கின்றன. படிக்கப் படிக்கத் திகட்டாது திரும்பத்திரும்பப் படிப்பதன்றிக் கீழேவைக்க மனம் வாராதென்பது திண்ணம்! திண்ணம்.!! சொற்பக்காப்பிகளே தயாரில் இருக்கின்றன. விலை அணா 5.

---

சிவசுப்பிரமணியக் கடவுள் திருவருள் பெற்ற

அருணகிரி நாதசுவாமிகளருளிச் செய்த

## திருப்புகழ் பெரிது.

பக்தசிரோமணிகள் பலரும் விரும்பியவண்ணம் பல பழைய ஏட்டுப்பிரதிகளை ஆராய்ந்து, மதுரம் பழுத்துத் தேன்துளிக்கும் சந்தச்சுவை வாய்ந்து,படிப்பாருள்ளத்தையும், கேட்பாருள்ளத்தையும் பரவசப்படுத்திப் பேரானந்தப் பெருக்கிலாழ்த்தச்செய்யுஞ் சிறப்பு வாய்ந்த பாடல்களுடன் வெளியிட்ட சுத்தப்பதிப்பு.

சந்தக்குழிப்பும் அரும்பதப்பொருளும் சேர்ந்துள்ளன.

(64?) பாடல்கள் முதற்பாகம் 2—8—0
(614, ,, இரண்டாம் பாகம் 2—8—0

---

காந்தி மஹான் முதலிய தேசாபிமானிகள் தியானம், மதுவிலக்கு, அன்னிய ஆடையை அறவே ஒழித்தல் விலை அணா 0 1 0

உ

பரமபதி துணை.

காமன் பண்டிகை

எரிந்த கட்சி

# மன்மதன் லாவணி.

இஃது
துவாதசாந்த ஸ்தலமாகிய
மதுரைமாநகர், ஸ்ரீமத்
பழநிக்குமாரு சுவாமி அவர்கள்
இயற்றியது.

மதுரை, வடக்காவணிமூலவீதி,
இ. ராமசாமிக் கோனாரால்,
மதுரை எக்ஸெல்ஸியர் பிரஸில்,
பதிப்பிக்கப்பெற்றது.

ரிஜிஸ்தர் செய்தது.] 1923. விலை அணு 8.

எக்ஸெல்ஸியர் பிரஸ், மதுரை.

25 OCT 1923 MADRAS

உ

பரமபதி துணை.

துவாத சாந்த ஸ்தலமாகிய

மதுரைமாநகர், ஸ்ரீமத்

# பழநிக்குமாருசாமி அவர்கள்

இயற்றிய,

## காமன்பண்டிகை, எரிந்தகட்சி

# மன்மதன் லாவணி.

### விநாயகர் துதி விருத்தம்.

அருவுருவா யகண்டபா வெளியாய் வேத
மனைத்தினுக்கு மெட்டாத அமலமாகிக்
குருவுருவா யாதியந்த மில்லாஞானக்
குஞ்சரமாய்ப் பிரணவஓங் காரவட்டக்
கருவுருவாய்ச் சித்திமுத்தி கொடுக்குந்தெய்வக்
கற்பகமா யற்புதமாய்க் கமலமேவுந்
திருவுருவாய் விளங்குகண பதியின்பாதந்
தினந்தோறும் யாம்பணிந்து சிந்தைசெய்வாம்.

## விநாயகர் துதி லாவணி.

ஜப்தகலந்தரு என்ற ஹிந்துஸ்தான் வர்ண மெட்டு.

### கண்ணிகள்.

(1) ஆதிஓம் பிரணவ சோதிசின் மயமான
ஆகுவாகனநாதா என்சரணம்
அங்கசன் கதைதன்னை மங்களமாகப்பாட
அருளதுபுரிகுவா யிதுதருணம்
ஓதினேன்ஞானவழி ஓங்காரமூலனே
பாதிப்பிறையணி பரமேசன்பாலனே
பாதபங்கயம் போற்றினேன்
தோதுடன் மலர் தூற்றினேன்
மேதினியில் சாதனம்நீ மாதிரமுகா
ஆதிசற்குருவான சோதிசின்மயமான (ஆகு)

(2) தொந்திமா வயிற்றோனே செந்தமிழுக்குகந்த
சுத்தசைதன்யமே மலர்ப்பாதா
சுக்லாம்பரதர சுப்ரமண்யசோதர
தூயமெய்ப் பக்தர்க்கருள் தாநாதா
கந்தம்புனுகுசவ் வாதணிந்தசீமானே
தந்திமுன்வந்த தாமோதரன் மருகோனே
பந்தமாகவே பணிந்தேன்
சந்ததஞ் செப்பத்துணிந்தேன்
இந்திரனுடன்தரர் குபேந்திரன்முதல்
அந்தமுடன் கொண்டாடும் அங்குசபாசத்தோனே (ஆகு)

(3) வல்லபையைத்தொடையில் உல்லாசமாகவைத்த
மஹாதவத்தோர்கள் புகழ்ந்திடும்பொருளே

மாசில்லாமணியான கோசிகமுனிமகிழ்
மௌனதயாபர நல்லருளே
செல்வம்பெறவேபணிந்து செப்பினேனின்று
கல்விக்கடல்நீந்திக் கரைகண்டுமுயன்று
அல்லும்பகலும் போற்றியே
சொல்லித்துதித்தேன் ஏற்றியே
இல்லறத்தின் நல்லவர்க ளெல்லவர்கட்கும்
அல்லலகற்றிமகிழ்வாய் வல்லபமுடன்காக்கும்(ஆகு)

(4) தேசமெங்குஞ்சிறந்த ராஜராஜர் மெச்சிடுந்
தென்பாண்டிப் பூமிதனில்ஸ்திரமாகச்
செந்தமிழ் நாவலரைச் சிந்தையுறப் பணிந்து
சிறியன் கவிதொடுத்தேன் மகிழ்வாக
வாசவன்முனிவர்களு மாசபைகூட
தாசனும்பழனிக்குமார் தண்டமிழ்ப்பாட
நேசமாய்க் கல்விபெருக
பாசமார் பாங்குவருக
மாசிப்பிறை காசினியில் சாஸ்வீதமாக
ஆசையுடன் யாவரு மகரக்கொடிநாட்டிட (ஆகு)

---

## முருகர் துதி விருத்தம்.

சீராரும் நவமணிபோல் மதன்கதையை
ஜெகமதனிற் கீர்த்திபெறச் செப்புதற்கு
ஏராரும் இப்பெரிய சபையதனில்
இன்பமாய் டேப்பெடுத்துச் சாப்கொடுத்துப்
பேராருஞ் சரபமுகத் தந்தனுமீட்டிப்
பிரபல்ய மகரக்கொடி நாட்டிப்பாடத்
தீராதவினை தீர்க்கும் பரங்குன்றாரான்
திருப்பழனிக் குமாருபதஞ் சிரமேல்வைப்பாம்.

## முருகர் துதி லாவணி.

மானிலம்புகழ்கவிச்சிங்கமே என்ற மெட்டு.

கண்ணிகள்.

(1) ஆதிசற்குருவான சோதிப்ரகாசமுள்ள
ஆறுமுகனின்பாதம் போற்றிபோற்றி
அரனார்விழியினாலே அனலாயெரிந்தெழுந்த
அங்கசன் மெய்க்கதையைச் சாற்றிசாற்றி
நீதியாய் நின்றிலங்கும் நிஸ்களானந்தவஸ்தை
நேர்மையுடனிருகை யேற்றி யேற்றி
நெடுமால் மருகாமனத் திடமாகவேஎப்போதும்
நின்னடிக்கு மாமலர் தூற்றி தூற்றி

உத்தார்

பாதிப்பிறையணிந்த பரமன்றன்மகனே
பக்திவழிசிறக்கப் பாடினேன்குகனே
ஆதிஅடியார்கட்கு னருள்தாநற்சுகனே (ஆறு)

(2) அமராவதியரசன் புதல்விதனைக்கல்யாணம்
அன்றேசெய்திருக்கையில் ஐயா ஐயா
அருங்கோலன்நாரதமா முனிவன்வார்த்தையைநம்பி
அழகான படம்பார்த்து மெய்யா மெய்யா
சமமாகவேநினைத்து வேடர்குலத்திற்சென்று
தானேதினைப்புனத்தில் துய்யா துய்யா
சங்கைதெரிந்திருந்து மங்கை வள்ளியம்மையைச்
சிமர்த்தாய்க்கொணர்ந்தமுருகையாகையா

உத்தார்

சமராயுதவேல்கொண்டு தானுமேவிளங்க
தருதியில்தேன்தினைமா தருவதுதுலங்க
அமராங்கனைப்பெண்களும் அதிரூபமுழங்க (ஆறு)

(3) சித்தர்முனிவர்களும் முத்தர்களும் கொண்டாடுந்
தேவாதி தேவனேயுன் பாதம் பாதம்
செண்பகமல்லிமுல்லை பன்பாய்மருக்கொழுந்து
சிவந்திப்பூ ரோஜாவில்வம் வீதம் வீதம்
பக்தியுடனேசொரிந் தர்ச்சனை செய்யுந்தொண்டர்
பாவலர் நாவலரும் வேதம் வேதம்
பாங்குடனேதானோத ஓங்கிமுழங்கவிந்தப்
பாரிற்சங்குசேகண்டி நாதம் நாதம்

உத்தார்

கத்தியே சூரர்கள்மாளக் கண்டித்தநாதா
கடவுட்கேமந்த்ரஞ்சொல்லிக் காட்டியபோதா
அத்திமுகனுக்கிளமை யானபொற்பாதா(ஆ)

(4) வண்டர்கருவறுத்துக் கொண்டு பரங்குன்றார்வாழ்
மாசரஹண முரு கோனே கோனே
மத்தளம்தம்பூர்பிட்டில் கைத்தாளம் டேப்துந்தண
வாலிபர்கள் பாடவே தானே தானே
அண்டரண்டக்கொடியைச் செண்டாவுடனேசேர்த்து
அன்பாகக் காமன்மேடை நாட்டநாட்ட
ஆனந்தமாகச்சூடன் தேங்காய் பழம்புஷ்பமும்
அன்பாய் நெய்வேத்யஞ்செய்து சூட்டசூட்ட

உத்தார்

சண்டமாருதக்கவி பொழிபவர்சேஷன்
தனயன்பழனிக்குமார் ஸாமிநந்நேசன்
அண்டர் முதலவரும் அகமகிழ்வாசன் (ஆறு)

## சரஸ்வதி தோத்திரம்.

### விருத்தம்.

நாரணனுந்திபூத்த நான்முகற் கினியதேவி
தோரண கமலவாணி தொல்கலை வீணைகான
ஆரணரூபி எந்தாய் அடிமையென் னுவில்நின்று
காரணமதனமாரன் கதைசொல அருள்செய்வாயே.

## சரஸ்வதி துதி லாவணி.

இஸ்கேபுரா ஸஞ்சால் என்ற டான்ஸ் வர்ண மெட்டு.

### கண்ணிகள்.

(1) சரணமென் சரஸ்வதியே உந்தன் பாதம்
சந்ததமுங்கொண்டாடி அந்தமுடனே நாடி
செந்தமிழ்தன்னைத்தேடி
சுந்தரமாகப்பாடி சிந்தித்தேன் (சர)

(2) திரமாயாவருங்கூடிச் சித்தசன்கதைகோடி
தருணமாமலர்சூடிச் சாற்றினேம்நாடி (சர)

(3) வெள்ளைக்கமலமத்தி வீற்றிருக்கின்றசத்தி
வெள்ளைப்பணிகள்பூண்ட தாயுனை வேண்ட (சர)

(4) அன்னையே எந்தன்நாவில் அருளவாவிந்தப்பூவில்
நன்னயமாகமேவி நான்முகன்தேவி (சர)

(5) வேதியர் வேதமோத வித்வர்களுமேகீத
நீதியாகவேபுகழ நித்தம்மகிழ (சர)

(6) பாலன்பழனிக்குமார் பகரும் பதமதற்குச்
சீலமிகத்தருவாய் தினம் வருவாய் (சர)

## சபைவணக்க விருத்தம்.

தமிழென்று மூவெழுத்தைத் தனைபிரிக்கத்
தான்தெரியாத் தனயனிங்கு தைபிர்யமாக
உமதுமலர்ப் பாதமதைத் ததிபணிந்தேன்
உலகமதில் அசையிசைக ளறிந்தாப்போலும்
சமயமதில் மன்மதவேள் கதையைப்பாடத்
ததியுதவி தான்புரிய வேண்டுகின்றேன்
விமலனுட் திருவருளால் எவருங்கேட்க
வேதாந்த சாரமதை விளம்புவேனே.

## சபைவணக்க லாவணி.

பெண்ரதிமாதேயின்று என்ற வர்ண மெட்டு.

### கண்ணிகள்.

(1) வேதசார முந்தக்க நீதமுங் கற்றுணர்ந்த
வித்வகனவான்களைத் தினம்போற்றி
வேள்மாரன் கதைதன்னைக் கேள்வியுடனேநாளும்
விளம்பிடுதற்குத்ததி மனந்தேற்றி
பூதலத்திலோர்சர்ப்பம் படமெடுத்தாடக்கண்டு
புகழாயாடும் நாக்கலாம் பூச்சிபோலும்
பூவிலாடுமயிலை மேவிக்கண்டவான்கோழி
புகழ்ந்துநின்றுடிய கதைபோலும்

(2) அகராதி கைவல்லியம் இலக்கணமிலக்கியம்
அநேகபுராணசாஸ்திரம் அறிந்தவர்முன்
அசையிசைமுச்சீர் பிற்சீர் எதுகைமோனையுங்கூட
அறியாதயானுமெத்த அறிந்தவன்போல்
சுகமுடன்சபையோர்கள் அகமகிழ்ந்திடவின்றே
சொல்லும்பதமதற்குச் சரியெனவே

சுத்தமில்லாக்கவியை மெய்த்துக்கொண்டாடும்படி
சூட்டினேன்சிறுவன்யான் முதலெனவே

(3) பத்திரண்டுந்தெரியாப் பாலனுரைத்தவாக்கைப்
பாரிலுள்ளோர்களுந் தான்பார்த்து
பண்புடனாதரித்து அன்பாய்மனமகிழ்ந்து
பச்சமுடன்மைந்தனைத் தான்சேர்த்து
குற்றமிதிலனேகங் கோடியிருந்திடினுங்
கொண்டு பொறுத்திடவே என்சரணம்
குவலயத்தில்மைந்தனை நயமாகவேயெப்போதுங்
குறையெதுஞ் சொல்லாமலேயிது தருணம்

(4) துந்தனுடேப்புப்பிட்டில் தம்பூர்வீணைமோர்சங்கு
டோலக்கு சாலருடன் சுதிசேர்த்து
துலங்குகல்விப்பெரியோர் சபைதனிலேநன்றாய்
ஜொலிக்கமகரக்கொடி தனைப்பார்த்து
சந்ததமும்பழனிக் குமாருஸாமிதமிழைச்
சகலருமேகளிக்க நனிபாடி
சரணஞ்சரணமென்று சபையோர்களைப்பணிந்து
தாழ்ந்து வணங்குகின்றோம் நயந்தேடி.

---

## அஷ்டதேவதைகளின் துதி.

### அகவல் விருத்தம்.

தாரணிதனிலேயின்று சீருடனுரைத்தேனன்று
தனைசேர்தவறினும் பிழைகளிதிலிருந்தாலும்
தயவாகவேபொறுத்து நயமாகஆதரித்து
தற்காக்கவேணுமென்று முக்கியவாக்குகின்று
தருகவேவேதசாஸ்திரம் தெரிவிக்கஞாயசூஸ்திரம்
சாமிகளேயென்சரணம் பூமிதனிலித்தருணம்

## 6. அஷ்டதேவதைகளின் ஆதி லாவணி.

அஷ்டதேவதைகட்கு இஷ்டமுடனிங்கு ஆஜராகுவாசரணம் என்ற மெட்டு.

1. அஷ்டதேவாதிதேவா ஆங்காரமதுரைவீரா
அன்புடனேயென்சரணம் அடியனுவிற்
குடியிருந்தே இத்தருணம்
துஷ்டநொண்டிக்கருப்பே மாரனெரியானென்றோர்
தோளதனிலுட்கார்ந்து எந்தன்முன்பாகத்
துரிதமுடனே சினந்து

உத்தார்.

சிஷ்டபரிபாலனஞ்செய்யநீயே - வந்து
சிறப்பாகவேயிருப் பாயே
இஷ்டமாய்ச்சங்கிலியை யெடுத்தவர்களைக்கட்டி
இன்றுகொண்டுவாசரணம் அடியனுவில்
இருந்து காப்பாய்தருணம்

2. ஆசையுடனேநாளும் சோணைசப்பாணிநொண்டி
ஐயனே யுந்தனுக்கு அனுதினமும்
பூசைபோடுவேன்கணக்கு
கூசாமற்கஞ்சாவபின் பிராந்திஜின்னெயினுடன்
குறிப்பாய்ச்சாராயப்பெட்டியும் சமைத்துவைத்தே
கோழிக்கறியும் ரொட்டியும்

உத்தார்.

ரோஜாமல்லிகை முல்லையாரஞ்சூட்ட
நுண்மையுடனே யாவருங்கண்டுபோற்ற
மாசானங்காத்தஇருளே சாமத்தில்விளையாடும்
மாயாண்டியேஎன்சரணம் அடியனுவில்
மகிழ்ந்துவருவாய்தருணம்

3. கட்டுக்கடங்கிடாத காவலுக்கதிகாரா
காளைவயிரவனே பாவலர்களைக்
கண்பார்நீதேவதேவனே
மொட்டைமுனியாண்டியே திட்டமுடனே வா வா
முனியீஸ்வராஇப்போது ஜெயம்பெறவே
முயற்சிதா தப்பாது

உத்தார்.

நிஷ்டையிலமர்ந்த தேவதேவா
துஷ்டரைவதைப்பவனே வாவா
அட்டியில்லாமல்வந்து அனுமந்தாவாலைக்கொண்டு
அடக்கிக்கட்டுவாய்சரணம் அடியனுவில்
அகலாதிருப்பாய் தருணம்

4. தாரணிதனிலேதான் வீரியமாய்த்திரியுஞ்
சண்டிமுண்டமேயிருளி சபையதனிற்
சாற்றினேன்திரு சூலி
நேரந்தெரிந்திடாம லுருண்டுகொடுத்துத்தானே
நெஞ்சைப்பிளக்குங்காளி கொடியவரை
நிமிசத்திற்கொல்லும் நீலி

உத்தார்.

பூரணமாய்ப்பிணந்தின்னும் வனப்பேச்சி
புஸ்டித்தரத்தமதைப் புசித்திடுமாச்சி
ஆரவாரமாய்வந்த வீரியக்கவிஞேரை
அடுத்து ஜெயிக்கச் சரணம் அடியேனுவில்
அமர்ந்திருப்பாய் தருணம்

5. காமனெரியானென்ற வீமர்களையொடுக்குங்
கல்விப்ரசங்கவாசன் யாவருங்கேட்கக்
கவிபாடுகின்றநேசன்

க்ஷேமந்தனைக்கொடுக்குந் திருப்பழனிக்குமாரன்
செங்கைவடி வேலெடுத்து எரியானென்று
செப்புவோர்வாயைக்கிழித்து

உத்தார்.

நேமமுடனீராறு கூராய்வைத்து
நிமிசமதிலபயமென்றுலுஞ்சேர்த்துப்

பூமிதனிலாட்கொளும் தேவதைகளையெல்லாம்
போற்றித் துதித்தேன்சரணம் அடியேனுவில்
புகழ்ச்சி தருவாய்தருணம்

## கொட்டகைச் சிங்கார விருத்தம்.

கொட்டகையின் சிங்காரஞ் சகலர் கேட்கக்
கூறுகின்றேன் அத்வீத சாரம்பார்த்து
வட்டாரு மதுரைநகர் தலத்தில்வாழும்
மதலையான் கவிதொடுத்த மார்க்கந்தன்னை
இட்டமுட னிலக்கணநூல் பார்த்துணர்ந்தோர்
என்னுவில் கோடிகுற்ற மிருந்திட்டாலும்
பட்டணஞ்சேர் பெரியோர்கள் ஆதரிக்கப்
பழனிக்குமார் விருத்தமதைப் பகர்ந்திட்டேனே.

## கொட்டகைச் சிங்கார லாவணி.

கண்ணிகள்.

பலேபலேஇதுவெகு விச்சித்திரமானநல்லவேலை கண்ணுற்
பார்க்கப்பார்க்க இன்னுந்திகட்டுதில்லையே தானிக்காலே
கலைபாடவாழைத் தோரணஞ் சாஞ்சரமாயிருக்கக்—கண்
டானந்தமாகக்கொட்டகைச் சிங்காரஞ்சொல்வேன்சிறக்க

சிலநுகர்மாதே யிதற்கிணையெங்குங் கிடையாது - அந்தத்
தேவர்முனிவர்களுந் தானே புகந்திடமுடியாது

உலகங்களெல்லா மதிக்குதே உயர்ந்தசாலர்வேலை - ஒரு
கோடி ரசக்குண்டு பஞ்சவர்ணங்கள் முன்னாலே

உத்தார்.

ஜலஜல ஜலவெனநீ பாரு
ஜதைஜதையாக சிகுனதேரு
உதயமேலேபாரடி விச்சித்திரமான நல்லவேலை (கண்ணற்)

அந்தந்தத்தூணுக்குத்தூணந்தமாகநற்கமான்வகுத்து அதி
லணியணியாய்ச் சந்திரக்காந்திச் சட்டங்கள் தொகுத்து

விந்தையாய்மேருகிரித்தென்றல்வருகுஞ்சன்னல்விடுத்து
விநோதமாக ரத்னக்கண்ணாடிகளெங்கெங்குந்தொடுத்து

அந்தமாய் வால்ச்சேட்டு லஸ்தர்குலோப்புகளுஞ்சொலிக்க
அலங்காரமாகவேதான் ஜோரான சிட்டுகளும் பறக்க

சந்ததந் தமாஸாய் கிரேபாஸந்தர்க ளடிக்க
சரியான குமுரிலோட்டன் அங்கங்கே துடிதுடிக்க

உத்தார்.

சிந்தைதெளிந்து கொண்டாட
சிறப்புடன்லக்கா மகிழ்ந்தாட
சென்றிடலாமேஎந்தன் கண்மணியேபுவிமேலே(கண்ணற்)

குயில்தாராவுடனன்னங் கூடிக்குலாவுதென்னஜோராய்
கோலவர்ணக்கிளிமைனா தாளம்போடுதேவெகுசீராய்

ஒயிலுடனடனமாடுதே மயிலொடுவானம்பாடி
ஒருகோடி அன்றெண்டப்பட்சி ராகம்பாடுதேதோடி

சுயம்பாடுதேகதுவாலிகள் பாராய்சீமாட்டி
துரிதமாகவே ஐப்க்ஷாசக்க ரடிக்குதே கண்ணாட்டி

நயமிகுங்காடைகள் வீணைமீட்டுதே இப்போதே
நன்றாகச் செங்கருடன் பேசுதடியே ரதிமாதே

உத்தார்.

ஜெயம்ஜெயமென்று தம்பூர்மீட்டி
சிறந்த லட்சணக்கலி சூட்டி
மயங்காதேகண்டுநீமானே அன்னமேபுவிமேலே(கண்ணூற்)

4. இங்கிதமாகவுஞ் சபாசெலவே சபை முன்னே
இருந்துசிறியன் ஒருகோடி சரணஞ்செய்துமின்னே

தங்காழிமுகப்புத்துந்தனு வுங்கரத்திற்பிடித்து
சாலராக்கோர்த்தரவுன்டேப்பை யெடுத்துஷாப்கொடுத்து

சங்கம்புக்குழ மீனாட்சி சுந்தரரைப் பணிந்து
சபைதனில்லாவணி பலவகைபாடவே துணிந்து

எங்கள்பழனிக்குமார்தமிழ் மதுரமாங்கற்கண்டு
இலக்கணமிலக்கிய ஞானரஸக்கரும்புத்துண்டு

உத்தார்.

எங்கும்பிரபல்ய வாக்கு
இயம்பினேன் வெகுஸோக்கு
மங்களமாகநாம் பார்த்துவருவோம் புவிமேலே(கண்)

## பந்தல்சிங்கார விருத்தம்.

பந்தலதி னலங்காரஞ் சகலர்கேட்கப்
பகருகின்றேன் வேதாந்த நூலாராய்ந்து
சந்ததமும் சபையிலுள்ள பெரியோர்கட்குத்
தாம்பூலம் சந்தனம்பூ ஆரமீந்து
மைந்தர்மொழி குளறுமொழி யாகிலுந்தான்
மற்றவர்க்கங் கமுதெனவே வழங்குமாபோல்
அந்தமுள்ள அசையிசைகள் தவறினும்
ஆதரிக்க ஆசியளித் தாட்கொள்வீரே

## பந்தல் சிங்காரம் லாவணி.

கண்மணியே நல்லபெண்மணியே என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

அருமைரதியே பெருமைமதியே
அன்னமேபாரிந்நேரம் அற்புதப்பந்தல்சிங்காரம்
அறைகுவேன் கேளடியென் அன்பின்ரஞ்சிதமே
அங்கமேலாபரண மணிந்தகுஞ்சிதமே
ஆதிசேடனாவிலும் அடங்கவொண்ணா
அற்புதவேலையைச் செப்புகிறேனிந்நாள்
அவனிமீதிதுதானே அழகமைந்ததுதேனே(அ)

விந்தையாய்ச்சன்னலின் அந்தரமானநல்
மேருகிரித்தென்றல்வீச வேடிக்கைக்கிள்ளைகள்பேச
சந்ததமுங்குமரியுடன் சப்கூஷாக்குமாய்க்க
கிரேபாஸ்ந்தரடிக்க லோட்டன்களுடாய்க்க
லெக்காச் சக்கரடிக்க
சரியைகிரியை யோகஞான
தவத்தோர்க்குரியரான மோனர்
சஞ்சரிக்குமிடந்தானே தளரிடைமடமானே(அ)

பத்திக்குப் பத்தியாய் அத்வீதத்தாற்செய்த
ரத்னசிம்மாசனமேடை பன்னீர்சவ்வாதுகள்வாடை

பகட்டுதே பளிங்கிக்கண்ணுடியின் சீன்கள்
பார்க்கஆயிரங்கண்கள் வேணும் ஆயிரங்கண்கள்

பாவையே ஆவலாய் மேவியேகேளடி
பார்க்கமகிழ்ச்சி தருமிந்தநாளடி
பாரிலிதற்கிணையேது பார்த்ததில்லைஇப்புவிமீது(அ)

கூடகோபுரமும் மாடமாளிகையில்
கொஞ்சும்அன்னப்பட்சிவாக்கு கூடிச்குலாவுதே ஸோக்கு

தேடக்கிடையாதபட்டுத் திரைகளுமிருக்க
நற்குயில் மயில்சிறக்க பூஞ்சிட்டுகள்பறக்க

புஸ்பாரங்கள்திறக்கத்

திறமாய்என்னொடு தருணங்கண்டிட
விரைவுடன்வாஇந்நேரம் விண்டிட
விச்சித்திரமடமானே விகசிதம்பாராய்தேனே(அ)

லஸ்தர் குலோப்புடன் வால்சேட்டு கியாஸ்லைட்டு
நன்றாய்ப்பளீர்பளீரென்ன ஸ்டாண்டுதீபங்களுமின்ன

மத்தியாய்ப் பதினெட்டு வாத்தியமுழங்க
வாழைதோரணமிலங்க இந்திரன்பதிகலங்க

செய்தவேலைகள்துலங்க

ஊக்கமதாய்ப்பார்த்து ஆக்கமுடனேநாம்
சோக்காய்வருகுவோம் நீக்கமில்லாமலே
சுந்தரமதிமுகமாதே சந்ததமுங்கேளிப்போதே(அ)

வானுலகரம்பை ஊர்வசிமேனகை
வந்துநடனமுமாட மாபழனிக்குமார்பாட
சீனிசெந்தேனே கன்னலோதித்திக்கும்ரைட்டு
மேன்மைவெறிக்ளாட்டு தமிழ்நாவலர்பாட்டு
பிர்மானந்தங்கேட்டுத்
திகட்டுதில்லேயே மகிமையிதனின்
திகழலங்காரம் புகழலங்காரம்
தேன்மொழியேநீபாராய் சிந்தைமகிழவேசீராய்(அ)

## மால்சிங்காரவிருத்தம்.

நன்ருகச் சிற்பசாஸ் திரங்கள்பார்த்து
நாற்சவுக்க முள்ளளிட மிதுகுறித்து
இன்பமாய் முகூர்த்தம்வைத்துப் பவுன்டேஷன்தான்
எப்போதும் வாழ்ந்திடவே தானுந்தோண்டித்
தந்திரமாய் வரியெடுத்துச் சமர்த்தாய்நாளும்
சன்னல்கிலேக் கதவதனேச் சரியாய்வைத்து
அந்தரமாய்ச் சிமிண்டியினு லார்ச்சும் ஊன்றி
அன்னமே முடித்தவகை அறைவேன்மாதே

## லாவணி.

மானேமரகதமே மயிலேகுயிலே என்ற மெட்டு.

## கண்ணிகள்.

தேனேதிரவியமே தெவிட்டாதசெங்கரும்பேவஞ்சி-இத்
தேசந்தனிலேமால் சிங்காரஞ்சொல்வேனுனேக் கொஞ்சி
மானே மரகதமே மயிலேகுயிலேரதிமாதே-மன
மகிழ்ச்சியுடனேபார்நீவன்னக்கிளியே புவிமீதே

வானவர்முனிவர்களிதற்கிணைதான்சொல்லக்கூடாது-இங்கு
வந்தாதிசேடன்பிர்மாவகுத்துக்கணக்கிடவொண்ணாது

நானெங்குங் கண்டதில்லை நாற்சவுக்கின் அலங்காரம்-நாம்
நன்றாகப்பார்த்துவருவோம் நாயகமேவெகுதீரம்

உத்தார்.

ஞானமேகுடிகொண்டமாதே ரதிமாதே
நன்றாகப் பாரடியிப் போதே ரதிமாதே
தேனொழுகும்வாக்காலே செப்புமொழிகேளாய்வஞ்சி (இ)

ஆசையுடனேபாராய் அமிர்தவசனமுள்ளபெண்ணே-வெகு
அலங்காரமானநாற் காலிகளின்சிறப்பைக்கண்ணே

கூசாமலேரவுண் டேப்பில்களில்வெகுஜோராய்
குணமானதுரையவர்கள் பேசும்வார்த்தைவெகுசீராய்

நேசரதியேயிந்த நாடகசாலையின்நேர்த்தி-எந்தத்
தேசத்தினிலுமில்லை இந்தக்கட்டடத்தின்சீர்த்தி

மாசில்லாமணியே வானுறுங்கட்டடச்சூட்சி-இந்த
மாநிலந்தனிலே கானத்தகுந்தகண்காட்சி

உத்தார்.

ரோஜாமல்லிகையணிமாதே ரதிமாதே
கூசாமல்பாரடி இப்போதே . இப்போதே
தேசுலாவுந்தெவிட்டாத செங்கரும்பேவஞ்சி (இ)

தொட்டிமுத்தத்தில்தானே சிட்டுப்பறக்குதேவிநோதம்
சுகமாகப்பஞ்சவர்ணக் கிள்ளைபாடுதேசங்கீதம்

காட்டுப்புறுக்கள்வந்து கூட்டம்கூடுவதின்ஜோக்கு
கதுவாலிகாடையுடன் கருத்தாயடைவதையும்நோக்கு

2

முட்டையிட்டுக் குஞ்சுகளும் பொரிக்குதேபூஞ்சிட்டு
மூர்க்கமாய்ப்பேசுதடி தூக்கணத்தான் ஜோடியெட்டு
கட்டைக்கால்போதிகைவளைவிற்கொடியின் சுதைவேலை
கஸ்தூரிமாம்புள்ளி ரோஜா செடிகளு முன்னாலே

உத்தார்.

மட்டில்லாசன்னல்பின்னல்டோங்கு முன்னால்டோங்கும்
வந்துபார்சிம்மம் யாளியெங்கும் கூண்டிலெங்கும்
திட்டிபடுதலாகும்கேட்டைக்கடந்து போவோம்வஞ்சி(இ)

மங்களர்தியேகூண்டி லிங்கிதமான கெடியாரம்
மதுரையோர்செவியிற்கேட்கவே மணியடிக்கும்நேரம்
சங்கம்புகழுஞ்சப் கோர்ட்டின் வழக்கைப்பாருபாயம்
சட்ஜிகொடுக்கல்வாங்கல் தீர்ப்புகள்செய்கின்றார்ஞாயம்
அஞ்சொல்அனங்கேள்பழம் பாக்குவெற்றிலைநீர்மோரும்
அதோபாருவாங்கிப் பசியாற்றுகின்றார்பலபேரும்
மங்களமாகக்கேள்நீ மன்னன் பழனிக்குமார்வாக்கு
வந்தேயானந்தமாய்ப்பார் மாதுரதியேவெகுஜோக்கு

உத்தார்.

எங்குந்தானிதற்கிணையேது இணையேது
எவராலுஞ்செப்பமுடியாது முடியாது
திங்கட்குடையோன்சொன்னசெந்தமிழைக்கேளடிவஞ்சி()

இந்தவனச் சிங்காரம் என்ற மெட்டு.

கண்ணிகள்.

பூங்காவனச்சிங்காரம் புதுமையைப்பார்-நல்ல (பூங்)
தேங்குபுரசுபுன்னை தேக்குநாரத்தைகொன்னை
கோங்குலாவுநெல்லி கொய்யாமாதுளைவனச் (சிங்)

மல்லிகைபாரிசாதம் மருவும்ரோஜாவிநோதம்
முல்லைகஸ்தூரிபன்னீர் மோகசெண்பகவனச் (சிங்)

மரகதமாமாணிக்க வச்சிரக்கல்லாலிழைத்த
பரிமளவாசந்தரும் படித்துறைகளும்வனச் (சிங்)

கூட்கோபுரமுதல் மாடமாளிகையுடன்
சேடனுற்செப்பமுடி யாதரத்னமண்டபச் (சிங்)

மயிலன்னங் கிளிகது வாலிபருந்துகாடை
குயில்கருடன்செம்போத்து கொக்கன்றில்புறாவனச் (சிங்)

சிங்கங்கரடிபுலி செந்நாய்நரிபரிமா
அங்கைஒட்டகமுதல் அடர்ந்தவானரவனச் (சிங்)

ஸாமிபழனிக்குமார் தமிழைநாமிருபேரும்
நேமமுடன்படித்துப் பார்த்துவருவோம்வனச் (சிங்)

---

## மன்மதன் பிறப்பின் விருத்தம்.

ஜெகத்தினிலன்புடன்வாழும் மகத்துவமுள்ளோரேகேளும்
சிறந்தவேதாகமசாஸ்த்ரம் நிறைந்தநற்சுருதிகள்மாத்ரம்
தேடியாராய்வதுபுண்யம் நாடிவந்தீரிதுகண்யம்
தேன்மாரிகவிபொழிந்திரே யானுரைத்தேனறிவீரே
சித்தசனுருடவரலாறு சுத்தமுடன்கேட்பதுசீரு
டேப்பொடுதுந்தனபலவாத்யம் ஆர்ப்பத்துடன்முறைகள
தெரிவித்தேனதிகவுசார் தரணிதனில்மவுன்பஜார்[சாத்யம்
செப்புவேன்மதன்பிறந்தனுயம் ஒப்பிடுவீர்நீருபாயம்

## மன்மதன்பிறப்பு லாவணி.

### பரம்பொருளென ஓம் என்ற மெட்டு.

### கண்ணிகள்.

மானிலம்புகழ்கவிச்சிங்கமென்போர்நீராலல்
வந்துஇச்சபைதனிற்கேளும்கேளும்
மாரன்பிறந்தசங்கை தாரணிதனில்யானும்
வகுத்துரைக்கின்றேனிந்தநாளும்நாளும்

ஆனமுன்னாளாதியிற் சத்தியானவள்தோன்றி
ஆனந்தரூபியாக நின்றுநின்று
அரியயனும்பரம சிவனையுமுண்டாக்கினாள்
ஆக்கக்காக்கவழிக்க நன்றுநன்று

தானேமூன்றுபேருக்கு முத்தொழிலேகொடுக்கச்
சத்தியுந்தன்மனதி லெண்ணியெண்ணி
சகலாண்டபிண்டங்களும் சராசரங்களனைத்தும்
தட்சணத்தினிலுண்டு பண்ணிபண்ணி

வானைந்துபூதவழி யெழுவகைத்தோற்றங்களை
மாய்கையினிற்படைக்கச் செய்தாள்செய்தாள்
மறைமுதலாகமங்கள் இலக்கணவிலக்கியம்
வழுத்தியேமெய்க்கருணை பெய்தாள்பெய்தாள்

### உத்தார்.

கானகத்திலரிக்கு மாயையொடுசொந்தமாய்க்
காமவிர்த்தித்தொழிலை மேவியேபின்தந்தாள்
தானவருமத்தொழில் நடத்தியேவந்தார்
சாரங்கபாணிமகா விஷ்ணுவுமுகந்தார்
மானிலமதுதனிற் கேளும்கேளும் (மா)

தாரணிதனில்மஹா விஷ்ணுவுக்கத்தொழிலைத்
தானேநடத்தமுடி யாமல் யாமல்
சங்கரன்தனைநோக்கி ஸ்ரீஹரிபெருமானுந்
தவமதுசெய்தாரேயந் நாளில்நாளில்

பாரினில்தவமது விஷ்ணுவுந்தான்செய்து
பாலகன்றன்கொடுக்க வேணும்வேணும்
பரமனேகாமவிர்த்தித் தொழிலதைத்தான்செய்து
பாங்காகவேநடத்தத் தானும்தானும்

காரணமிதுதானென்னப் பரமசிவனும்அந்நாள்
கருத்தாகவேமனதி லெண்ணிஎண்ணி
காசினியில்மானதன் மகனுயவதரித்துக்
கவனமு ன்வளரப் பண்ணிபண்ணி

மாரவேளைப்படைத்தங் கருளிச்செய்ததைச்சத்தி
மாஞானதிருஷ்டியினற் கண்டுகண்டு
மனத்தினிலேமிகவும் வருத்தமதாய்யோசித்து
வைகுந்தன்மேற்கோபங் கொண்டுகொண்டு

உத்தார்.

வீரமுடன்விஷ்ணுவை யான்படைத்திருக்க
விமலனைநோக்கித்தவஞ்செய்தாரேமெய்க்க
மாரனென்றசுதனை வாங்கியேசிறக்க
மாதாவானசத்தியை மாயனும்பகைக்க
வந்தகனவான்களே கேளும்கேளும் (மா)

சத்தியானவளுந்தான் சித்தத்திற்சினங்கொண்டு
ததியில்மாரனெரிந்து போக போக

சாபமிட்டாளேயன்று யோகநிஷ்டையுடையாள்
சங்கரிவீரியமெய் யாகஆக

அத்ததிலெட்சுமியாள் ஞானதிருஷ்டியினால்
அறிந்தேசிந்தைமிகவும் நொந்துநொந்து
அரியிடஞ்சென்றேசொல்லி நிமிலையைநோக்கித்தவம்
. அருமையாய்ச்செய்யச்சொன்னாள் வந்துவந்து

வெற்றிபெறவேமாதுஞ் சத்தியைநினைத்துத்தான்
வேண்டித்தவம்புரியக் கண்டு கண்டு
விமலனால் மாரனெரிந் தரூபியு மாவானென
விடைகொடுத் தனுப்பினான் அன்று அன்று

சத்தீஸ்வரனுஞ் சன காதிமுனிவருக்காய்த்
தவமது செய்திடுநா ஊயா ஐயா
சங்கரன்நிஷ்டைசெய்யத் தேவர்முனிவர்க்கெல்லாந்
தணற்பறக்கிறதென்று மெய்யா மெய்யா

உத்தார.

உத்தியாய்த்தேவரெல்லாங் கூடியேஆலோசித்து
உண்மையாய்வாசவனிடம் திருபமொன்றுமுடித்து
மத்திபத்துதர்வசம் மாரனுக்கேகொடுத்து
வாங்கிதிருபமதை வாசித்துத்தானுரைத்து
வரவிடுத்தாரையா கேளும்கேளும் (மார)

மங்களமாகவே மாரவேளுக்குத்தானே
மன்மதனென்றுநாம மிட்டார் இட்டார்
மாரனைத்தானெரித்த மஹாதேவனுமேயின்னால்
வழுத்தினாரனங்கனென்று பாட்டால் பாட்டால்

தங்கள்கேள்விக்கிங்கிது சரியான ஆன்சர்தாரு
தர்க்கவாதிகளேயிப் போது போது
சரியாயில்லையாவென்று சாற்றுவீரிக்ஷணத்தில்
சங்கப்புலவரேதப் பாது பாது

அங்கசன்சங்கைகேட்டீர் எங்களிடத்தில்நாங்கள்
அறிவித்தோம்கண்டுமன தாற்றி யாற்றி
அற்புதமாய்ச்சபையோர் நற்பதமேவணங்கி
அரனடியைச்சிந்திப்பீர் போற்றி போற்றி

பொங்குங்கல்விக்கடலைப் பொசித்துஎப்பமிடும்
பூலோகச்சக்ரவர்த்தி தொண்டன்தொண்டன்
புகழ்பெற்றிடுமீனாட்சி சுந்தரதாஸனையே
போற்றிசெய்யும்ஞானவுத் தண்டன் தண்டன்

உத்தார்.

எங்கள்பழனிக்குமார் ஸாமியின் வாக்கு
இந்தச்சணமும் விடை ஏற்கும்பராக்கு
சங்கமிஃதறியச் சாற்றினேன் ஜோக்கு
சமயமறிவதுவே சாரத்தின்போக்கு
மங்களமாய்ச் செப்பினேன் கேளும்கேளும். (மா)

## இரதி பிறப்பு விருத்தம்.

ஆதியிலே திருமாலும் அரனுங்கூடி
அமரர்கள்தம் இடரதனை அகற்றவேண்டி
மாதிறமந் திரகிரியோர் மத்தாயூன்றி
வாகுபெறச் சேடனைநீள் வடமாய்ப்பூண்டு

நீதியுடன் பாற்கடலைக் கடைந்தகாலம்
நின்றதனிற் பிறந்தபலர் நிகழ்ச்சியாவும்
ஓதிவைத்த பாரதத்தின் உண்மைகண்டு
உரைத்திடுவேன் சருக்கமுறை உணர்வீர்மாதோ.

## லாவணி.

ஆகமபுராணவகை ஏகமாய்க் கற்றுணர்ந்த
அறிவுள்ள பெரியோரே வாரும் வாரும்
ஆராய்ந்தெது கேட்பினும் நேராயதற்குரிய
ஆதார மின்னதெனத் தேரும் தேரும்

சங்கையுடனேவந்து மங்கை ரதிபிறந்த
சரித்திரமென்ன வெனக் கேட்டீர் கேட்டீர்
தக்கவிதமுரைப்பேன் மிக்கவே தாமறிந்தால்
தற்கமெதும் புரிய மாட்டீர் மாட்டீர்

வேதவியாசரிதை நீதமுடன் வகுத்தார்
விபரம் மஹாபாரதம் பார்ப்பீர் பார்ப்பீர்
விளம்பாத நாலுமுண்டா உளதெனிலிச்சபைமுன்
விரைவாகக் கொண்டுவந்து சேர்ப்பீர் சேர்ப்பீர்

நஞ்சுண்ட மூர்த்தியென்று செஞ்சடை யீசனுக்கு
நாமகரணமொன்று முண்டு உண்டு
நாமமதையாலோசித்தால் தாமாகவே விளங்கும்
நானுவிதகாரணங் கொண்டு கொண்டு

தேவருக்குற்றதுயர் யாவுமேதீர்த்தருளத்
திருமாலும் சிவனுமே சேர்ந்து சேர்ந்து
சென்றுமுன் பாற்கடலை நின்று கடைந்தாரெனச்
சேதியறிந்திருப்பீர் சார்ந்து சார்ந்து

அந்தத்தருணத்திலே நொந்துமிகக் கக்கினன்
ஆதிசேடன் விஷத்தை யாங்கு ஆங்கு
அண்டர் பிழைப்பதற்காய்க் கொண்டல் வண்ணனதனை
அரன்புசித்திடச்செய்தார் பாங்கு பாங்கு

ஐந்தருகற்பகமும் சிந்தாமணியும் நல்ல
அருமைக்காம தேனிவை முன்னும் முன்னும்
ஐராவதம் வெண்பரி மெய்யார் பதுமநிதி
அமுதுசங்கநிதிகள் பின்னும் பின்னும்

அக்கணந்தேவமாதர் லக்குமியிந்திராணி
ஆரணங்குரதியும் நன்று நன்று
அங்கிருந்துஜனிக்கத் தங்கள்தங்கள் பொருளை
ஆவலுடனடைந்தார் சென்றுசென்று

வானோர்க்கமுதளித்து மானுள்ரதியணங்கை
மன்மதனுக்களித்தார் மாலே மாலே
மகத்துவமுற்றஎங்கள் ஜெகத்மாதா லக்குமியை
வாங்கியணிந்தார் மார்பு மேலே மேலே

மாமதுராபுரியில் காமனெரிந்தானென்று
மகரக்கொடி கட்டினேன் ஜெண்டா ஜெண்டா
வாதாடியேஜெயிக்க ஆதார நூலின்முறை
மார்க்கமுங்கட் கேதேனும் உண்டா உண்டா

தெய்வரதிபிறந்த வைபவத்தைக் கூறினேன்
தெரிந்தாலிதற்கு மாறு செப்பும் செப்பும்
செந்தமிழ்ப் பழகிக்குமார் சந்தப்பாலாவணியைத்
தெளிவா யெடுத்துரைத்தேன் ஒப்பும் ஒப்பும்.

### அகவல் விருத்தம்.

சீர்த்திபெற்ற கனவானே நேர்த்தியுள்ள சீமானே
செந்தமிழுணர்ந்த ஐயா கந்தப்பன்கதைக்கு மெய்யா
தேசமெங்குமேபுகழும் நேசரேநீர் கேளும்
சித்தசன் ஜெனித்தஞாயம் இத்ததிகேட்பீர் நேயம்
தெளிவுடன் தாங்களின்று நளினமாய்ச் செவியுற்றுநன்று
சீக்கிரந்தனிலேயுசார் யோக்கியமாகவேபஜார்
செப்பினேன் கேட்டுநீரும் ஒப்பியேவிடையுந்தாரும்
திருடிநீரிதைப்பார்த்து விரைவாகக்கவிகோர்த்து
திடமாயுரைக்கவந்தீர் அடமாய்ச்சபையிலிருந்தீர்
தேர்ந்தபுராணம்ஒப்பி ஆய்ந்தவர்போல் வீசாதீர்கப்பி
சிறந்தவரேஎதிலாராய்ந்தீர் நிறைந்தவரே வாய்திறந்தீர்
திட்டமுடன்சபையில்தானேவிட்டுரைத்தால்ஒப்புவேனே.

### சவால் லாவணி.

பஞ்சபாதகத்திலோரு பங்குவாங்கி என்ற மெட்டு.

மாரன்பிறந்தசங்கையை'வந்துசபைதனிற்கேட்டாயல்லவா
க்ஷணம்-வகுத்துரைக்கிறேனிதோ புலவா
தாரணியில்வேதாந்தங்கள் சரியாகப்பார்த்திடவில்லையா
நாளுஞ்-சல்தியிற் புகலுவாய் கலையா

### உத்தார்.

கூருடனேசென்று மெஞ்ஞானம்-விளக்கஞானம் அத்தைக்
குணமுடனேயறிந்துதானும் நன்றாய்த்தானும்
மாரனதுசங்கைகளை ஆதாரமாய்க்கேட்டாய்நீயல்லவா(க்ஷ)
மோகனுதியர்விவேகனுதியர் வம்ஸந்தனிற்பரம்பரை
நாளும்-மொழிந்திட்டேனட்டவணை பார்நிரை

யூகமாய்ப்பிர்மத்திஞேடுமாயைகலந்துமன்மதன்பிறந்தான்
தமி-மூணர்ந்து இத்தருணத்திற் சிறந்து

உத்தார்.

ஆகமானதனுக்குத்தானே - கனவானே கேள்நீ
அவர்க்கங்கிரண்டுதாரங்கோனே கனவானே
வாகுடன்பிரவிர்த்தி நிவிர்த்தியாய்க்கேட்டிருப்பீரல்லவா.

அவைகளிற்பிரவிர்த்திதானீன்ற மக்களாண்வழியும்
யான்-அறிந்துசொல்கிறே நல்மொழியும்
கவனமாகவேகேட்பாய் மோகனசங்கரன்காமன்கோபன்
சற்றுக்-கருத்தாய்க்கேள் மச்சரன்மதன்மானன்

உத்தார்.

அவனிதனில் இராஜதன் தாமதன்தானின்றுகேள்நீ
ஆவலுடன்சந்தேகன்சங்கற்பன் நன்றுநன்று
அவருடன்பிறந்தவர்க ளாகப்பதினொன் றுரைத்தேனல்ல
[வா (க்ஷணம்)

நிவிர்த்தியீன்ற மக்களில் விவேகனிருபன் பொறை
சம-னிசப்பாருமே தமன்விராகன் [சந்தோடன்
தவன் சுசீலன் சத்துவன் இயமனியமனும் ஆதனன்
மிகத்-தானே சொல்லுவேனையா இன்னமும்

உத்தார்.

புவனந்தனிற் பிராணுயாமன் பிரத்தியாகாரன்யான்
புகழ்ந்தேன் சமாதிதாரணன் தியானன்
மௌனமாயிராதே அவருடன்பிறந்தோர் பதினெண்பேரல்
[லவா (க்ஷண)

பிரவிர்த்தியீன்ற மக்களில் பெண்களுடைய பெயருமின்று
நாளும்-பேசுவேன்மறைவழி நன்று
தரணிதனில் தீவினைய கீர்த்தியுங்கபடியநீதி
நன்றாய்ச்-சாற்றினேன் நால்வர் தற்கவாதி

உத்தார்.

மரகதநிவிர்த்திக்குப்பாலர் பெண்பாலர்
மைத்திரிகருணையுடன்சீலர் கூடசீலர்
பறந்திடாதேநீதிமுதீதை யபேட்சைஐந்துபெயரல்லவா ()

சங்கம்புகழும் பழனிக்குமாருசாமி தமிழைப்பாடி
இத்-தருணமதிலுரைத்தேனடி
எங்கினும்பெருமைபெற்ற அண்டபகிரண்டக் கொடிநாட்டி
அதற்-கிசைந்தகெண்டாமணிசூட்டி

உத்தார்.

தங்குதாஉன்மனதிற்றானே கனவானே கேள்வி
சவால்பதிலுரை சீமானே கனவானே
மங்களமாய்ப்பறையடியங்கசன்கதையதற்குஅல்லவா (கூ)

## சவால் லாவணி.

அண்டப்புளுகனைப்போல்வீசாதே என்ற மெட்டு.

கண்ணிகள்.

ஜெகப்புளுகனைப்போலே வீசாதே உன்னைத்
தெரிவேன்வாலொடுக்கென்முன் பேசாதே
அகம்மனதினிற்கொண்டு அறியாமற்பாடியின்று
ஜெகமதனிலேபண்டு சித்தசனென்றியானென்று (ஜெ)

பஞ்சாங்கத்திற் காமதகனமென்று இந்தப்
பாரில்முறையிடுதே பாரின்று
பஞ்சாங்கம் பொய்யென்றால் பௌரணையிற்கிராணம்
மிஞ்சிப்பிடிக்கின்றதே மெய்யா பொய்யாநீகேள் (ஜெக)

துந்தனு டேப்புதன்னைக் கரத்தில் வாங்கி
சொகுசாகதம்பூர் பிட்டில்சுரத்தில்
சந்ததமுமேமாரன் தணலாகாதனை யொப்பி
எந்தன் சபையின்முன்பு இயம்பாதே வெறுங்கப்பி (ஜெக)

தென்மதுரைமீனுட்சி சுந்தரேசர் ஈன்ற
திருப்பழனிக் குமார் தாசர்
அன்புடனேவந்து பொன்னடியைப் பணிந்திடாமல்
இன்பமுடனேமார னெரிந்தகட்சி பாடாமல் (ஜெக)

அந்தரங்கம் பல்டிஉல்டி என்ற மெட்டு.

கண்ணிகள்.

அந்தமாய்முன்னந்தர்பந்தர்பின்னந்தர்தம்பஸ்கிசாண்டோ
ஆகாசக்கழைக்கூத்தாடி வந்தீர் வந்தீர்
அங்கசனெரியானென்ற சங்கையைக்காண்பித்திடாமல்
அவனிதனிலேவீணில் நொந்தீர் நொந்தீர்

சந்ததமும்ஆகமங்கள் விந்தையுடனேஎடுத்துச்
சாற்றுவீரிகூஷணமுன்பு தானே தானே
சமத்வந்தெரிந்தவர்போ லெமதிடங்கவிபாடத்
தன்மையுண்டோ தங்களுக்குக் கோனே கோனே

வேதபுராணம்நீதியுடன் ஆதரவாய்ச்சொல்லாமல்
வீணில்டப்பாப்பாடுகின்றீர் நீரும் நீரும்

வெங்தெழுந்தமன்மதனைச் செந்தணலுமாகானென்று
விளம்பவந்தீரேஐயா வாரும் வாரும்

சாதனைகள்செய்வதுந்தான் வாதுக்காகவேநீரென்றுஞ்
சாட்டையில்லாப்பம்பரம்போ லாடி யாடி
சங்கமதிலிங்குவந்து மங்களமாகவேபின்னும்
தர்க்கஞ்செய்ய வந்தீரென்னை நாடி நாடி

நாமிரண்டுகட்சிகளும் காமன்கதைகள்விடிய
நன்றுய்ப்பாடுவதிலென்ன சாரம் சாரம்
நாடியிந்தச்சபைதனிற் கேள்வியும்மைக்கேட்டேனென்று
நயவஞ்சகம்வைக்காதீர் நேரம் நேரம்

ஆமிதுமெய்யாயிருந்தால் நாமிங்குகேட்டகேள்விக்கு
ஆன்சர்களுஞ்செப்பிடுவீர் சிங்கம் சிங்கம்
அத்வீதசாரத்துடனே சுத்தமாய்த்தண்டுமுண்டன்றி
அருமையுடனுரைப்பீர் தங்கம்தங்கம்

சங்கம்புகழெங்கும்பிர சங்கச்சரபமாகவே
தாரணியிற்பெயர்பெற்ற நல்வன்நல்வன்
சமர்த்தாய்ச்சிங்கக்கொடியை சிமிசத்திலிறக்கிட்ட
சத்விஷயத்தில்மிகுந்த செல்வன் செல்வன்

மங்களமாய்நாற்றிசையில் அங்கசன்கதையதற்கு
மகிழ்ந்தேயிஸ்தியார்செய்த யூகன்யூகன்
மானிலத்தோர்கள்கொண்டாடும்ஞானவான்பழனிக்குமார்
வரைந்தேன்மதுரக்கவி யோகன்யோகன்

## சவால் விருத்தம்.

இரண்டுவாரந்தாரே னெணைஜெயிக்க உம்மாலாமா
ஏணையாயிச்சபையில் வாயெடுத்துப்பேசப்போமா

அரண்டென்னமுடியாதென் றழுதாலும்விடுவோமா
ஆசாணையான்சென்றிங் கழைப்பேனென்றாலும்பீமா

திரண்டுமக்குதவியாயுன் சமாவந்தாலுமுடிந்திடுமா
சீக்கிரம்வெளியேபோய் வாரேனென்றால்விடஞாயமா

சுரண்டியென்பாதமதை ஒருவரறியாமற்சுழிக்கலாமா
தொல்லுலகிற்பழனிக்குமார் ஸாமியைத்துதிப்பாய்நீயே

## லாவணி.

செப்பாதீர்தூசனமாய்ச் சிவனைநீருமிகழ்ந்து
திடமானவித்வ முறைசிறந்தோரே

சிவன்செயலன்றியேபின் எவன்செயலாகுமென்று
தெரிவிப்பீர்சபைமீது நிறைந்தோரே

ஒப்பாரிவைத்தழுதாற் போலவேயிங்குவந்து
உலகில்பெரியோர் நாங்களென்றுபாடி

ஒன்றிருக்கவேறொன்றை ஓதுகின்றீரேவீணாய்
ஒழுங்கில்லாமலும் வரலாமோதேடி

உத்தார்.

மையிட்டமாதரைப்போல் வாய்மதம்பேசி
வம்புதும்புகள்செய்யா வழக்கத்தையோசி
இப்போதுநன்றாய்ப்பாடு மென்பிரதர்நேசி
என்னுபோதித்தாலுந்தான் இனிப்பிரவேசி
சிப்பாயிகைத்துப்பாக்கி தப்பாதெடுத்துவந்தே
கைப்பொருள் செலவுகள்செய்தீரே(சிவ)

ஆதியில்வேதவியாசர் அறிந்துரைத்தபுராணம்
அத்தனையும்பொய்யென்றீர் கனவானே
அன்றோரதிபிறந்த காரணம்எந்தன்முன்பு
யாதுவகை புகல்வீர் தனவானே
நீதியாகவேமாரன் ஆதிசிவன்விழியால்
நீராகவில்லையென்றீர் வெகுயோக்யம்
நேசமிகும்பிராண நேசரேயுங்கருத்தில்
நினைவுகள்மறந்ததே வெகுசிலாக்யம்

உத்தார்.

சீதையால்படுகளத்தில் ராவணனிறந்ததும்
தேவேந்த்ரனால்சித்தசன் தீயாயெரிந்ததும்
நீதில்லாத்ரௌபதையால் கீசகன்சென்றதும்
ஜெயசூரபத்மனிந்தி ராணியாற்போனதும்
சூதாகக்காசிப ரிஷிபுத்ரன் காமத்தாலே
தொலைந்ததுந்தெரிந்துநற் சிறந்தோரே (சிவ)

ஆகமத்தின்படியே யூகமுள்ள பஞ்சாங்கம்
அதிலேகணிக்கப்பட்ட விதியதனை
அம்மாவாசைகார்த்திகை யேகாதசிபௌர்ணமி
ஆனகிராணஞ் சூர்ய சந்திரனை
சேகரமாகவேகேள் மாசம்வருடமென்று
செப்புகின்றதைக்கண்டு நீர்பாடும்
திறமில்லாமலேவேறு வழியுஞ்சொல்லாதீர் ஐயா
ஜெகப்புளுகனைப்போலவே நீர்நாடும்

உத்தார்.

மோகமுள்ளமதனைத் தெய்வமென்றுரைத்து
மூர்க்கரேபாடவந்தி ரிதுவென்னசமர்த்து
வேகமாய்க்கச்சிசேர்த்து வந்திரேகருத்து
விவேகசிந்தாமணியைப் பார்க்காமல்மிகுத்து
தேகமெலிந்துவந்தீர் யூகசரபமிருக்கச்
சிங்கமே பெரிதென்ற சிறந்தோரே. (சிவ)

மண்டலமெங்கும்புகழ் கொண்டயருஞ்செல்வனாய்
வந்துதித்தவாசவ ராஜவம்ஸம்
மவன்றேட்டதுதனிலே கவனமுடனேதெற்கு
மாசிவீதிதேரோடுஞ் சுகஅம்சம்
பண்டிகையிஃதென்று அண்டருலகத்தோர்கள்
பார்த்துச்சேடன் பிர்மாவுமனமகிழ்ந்து
பஞ்சாமிருதமென ரஞ்சிதமாய்க்குடித்துப்
பாரினில்யேப்பமிட்டுச் சுகம்புரிந்து

உத்தார்.

தண்டமிழ்ச்சக்ரவர்த்தி தன்னைக்கொண்டாடி
சண்டமாருதக்கவி பொழிந்திடும்நீடி
விண்டுரைசரபமாம் வித்வானைக்கூடி
மேதினியில்யாவரும் விரைவுடன்பாடி
தெண்டமுஞ்செய்தேளங்கள் திருப்பழனிக்குமாரின்
திருவடிபணிகுவீர் சிறந்தோரே (சிவ)

## கேள்வி விருத்தம்.

அங்கசனைப்பிர்மமென்று அறைவதற்குஆதாரமுண்டா
அனங்கனைஎறியானென்றபாடுதற்காண்மையுண்டா

சங்கரன்விழியால்மதனெரிந்ததற்குத் தடைவேறுண்டா
தாரணியில்மதனெரியாச்சுட்சிபாடச்சாஸ்திரமுண்டா

உங்களுடலாவணியைச்செப்புதற்கு உறுதியுண்டா
உலகமதில்சபையோர்கள் கேட்கவும்ஞாயமுண்டா

எங்கள் குருபழனிக்குமார் தமிழ்ப்பாடஎதிரியுண்டா
இச்சணத்தி லென்னிடத்தி லியம்புதற் கியல்புமுண்டா

அஞ்சனாதேவிபெற்றஅனுமானறைந்ததுபோல் என்றமெட்டு.

சங்கம்புகழுங்கவிச் சிங்கமெனச்சபையிற்
சரித்திரமறிந்தோரே பாடவந்தீரே-எந்தன்முன்
நேரே-மொழிந்ததற்குச் சரியாயான்சர்சொல்வீரே

அங்குமிங்குமெங்கினுந் தங்கமேபாடினற்போல்
எங்களிடங்கைவீசி-பாடாதேயோசி இராகமுந்தேசி
கம்வழியாக-அறையவந்தாயே கூசி

தங்களைக்கேட்டேனென்று எங்கள்சபையின்முன்பு
தானேயேன்பரிதாபம் கொள்ளாதீர்சோபம்-வீண்
மனஸ்தாபம்-வைத்தாலிப்போது சபையிலெனக்குலாபம்

உத்தார்.

உங்களைக்கேட்ட கேள்வியதற்கு-தாங்கள்
உறுதியாய்ச்செப்ப வேணுமிதற்கு
சங்கீதத்திற்சிறந்த சிங்கமே இச்சபையிற்-(சரித்திரம)

என்னகேள்விகேட்டாலும் மன்னவனையசைக்க
இனியும்மால்முடியாது புவியின்மீது-அவையின்
ஸாது-புத்திகிணைப்பை என்றுந்தள்ளுவீர்நீது

முன்னவன்வரலாறு நன்னயமாகக்கேட்க
மொழிந்தேனே இனியானே நற்கனவானே-என்
புண்யவானே-எடுத்துரைக்க முழிக்கின்றீர்சீமானே
பின்னும்பத்மாசூரன் தன்மையதனைக்கேட்டீர்
பிரியமாயுரைத்தேனே தெரிந்துநானே-கண்டுகொண்
டேனே-மாரவேள்ரதி பிறந்ததையுஞ்சொன்னேனே

உத்தார்.

இன்னுமொருகேள்வி கேட்டேனே-இதற்
கிணைசொல்லத் தெரிந்திடாதேனே
சன்யாசிபோலவேதான் பின்னும் அநேகமான (சரித்தி)
மதன்ரதிகல்யாணம் விதியாய்ச்சீர்வரிசையும்
வாய்திறந்தென்னைக்கேட்டு பாடினீர்பாட்டு இம்மௌன்
லாவணியினுல் வகுத்துரைத்தேனிச்சீட்டு [ரோட்டு
ரதிமதனும்பிறந்த மாசம்வருடம்லக்னக்
தான்கொட்டக்கழியுடனே பேய்க்கரும்புடனே ஆமணக்
கிபரமுடன் சல்திசொன்னேன் திடனே [குடனே
ததியில்மதனெரிந்த சாஸ்திரந்தன்னைக்கேட்கச்
சபையிலெடுத்துரைக்க யாவருமதிக்க யாங்களுஞ்ஜெயிக்க
கைதட்டினார்கள் தங்களைப்பார்ப்பவர் சிரிக்க

உத்தார்.

இதுதெரியாமலே வந்தீரே-இனி
என்னகேள்விகளுங் கேட்பீரே
அதுவிபரம்உரைப்பீர் பதியிலநேகபுராணஞ் (சரித்திர)
பாரெங்கும்பேர்முழங்க வாதிநெஞ்சங்கலங்க
பண்டிகைதனில்தழுக்கு நீங்களுங்குழுக்கு வந்தாலும்உம
தண்டுமுண்டாகப்பாடுவதையே அழுக்கு [க்கு

சீராருந் தென்மதுரைத் தாராருமாலையணி
ஜெயம்ஜெயமென்றுதுலங்க பேரிகைமுழங்க நம்மனங்
அன்றெண்டக்கொடி தெளிவாய்நாட்டியேயிலங்க [கலங்க

தீராவினைகளதை நேராகவேதான்தீர்க்குந்
திருப்பழனிக்குமாரன் சிறந்தஐய்யாரன் யார்க்குமுபகா
மாரன்கதைக்குச் சீர்த்திபெற்றிடுதீரன் [ரன்

உத்தார்.

ஓரானை அரியைக்கொன்ற—கதை
ஒத்தேதகனவுகளுங்கண்ட
சரியாய்ப்பாடத்தெரிந்தோர் வரமாட்டாரித்தருணம் (சரி)

---

## சவால் விருத்தம்.

பைந்தமிழைக்கற்றவர்போ லெந்தமக்குப்பகரவில்லை
படைமாரன்கதையதனைப் படித்தவர்போல்தோணவில்லை
உந்தனையின்றோர்எவரோ உந்தனுக்கோர்உறுதியில்லை
உபதேசமோதிவைக்கக் குருவுந்தானுதவியில்லை
எந்தன்முன்னெதிர்த்துத்தான் பாடவுமேதிறமுமில்லை.
எரியானூலிச்சபையில் இயம்புதற்குவெட்கமில்லை
சந்ததமும்பழனிக்குமார் தமிழ்க்குவேறுதானுமில்லை
தாரணியில்யானுரைத்தேன் வாதிகளேயும்முன்னாலே.

வேதசாரவழிபாடும் வித்வகனவானே என்ற மெட்டு.

நீதிசாரவழிநிகழ்த்தவந்தபுண்யவானே
நின்னுடற்குள்மாரனெரிந் திருக்கின்றான்கனவானே
ஆதியிற்பத்மாசூரன் அரனைநோக்கித்தவஞ்செய்தன்று
ஆர்சிரசிற்கரம் வைத்தாலுமவர் அழியவென்று

ஓதியேகேட்டவர்க்குச் சிவனும்உபகாரஞ்செய்தார்
உடனேசூரன்சிவன் சிரசிற்கைவைக்கவந்தான்
கோதில்லாமாயனுமே மோகினிரூபமாகவந்தே
கொன்றேசூரன்தனையே அப்போதுதான்சினந்தே
நீதியுபகாரஞ்செய்தவர்க் கபகாரந்தானே (நின்னுடற்)

## அகவல் விருத்தம்.

தனியானவேடன்அன்று துணிவானபுலியைக்கண்டு
தான்பயந்தோர்விருக்ஷமேறி வானரத்திடம்பசியாறி [ள்ள
தற்காத்தகுரங்கைப்புலிதள்ளென நித்திரையிற்கீழதைத்த
சண்டாளன்குரங்கைக்கொன்றான் நின்றபுலியதனைத்தின்ற
தன்மையைநன்மைசெய்தவர்க்குஉண்மையிலாக்கெடுதிவந்தவர்க்கு
தரணியிலற்பர்க்குச்செய்யுபகாரந் திரமாகவந்ததேயபகாரம்
தானேபத்மாசூரனட்சணம் மாநிலத்தில்வரங்கேட்கச்சிவனிடம்
தான்கேட்டவரந்தனைக்கொண்டது ஞானவான்களேபார்கண்டது

## லாவணி.

மாரனுக்குத்தந்தைதா யாரென்றுகேட்டீரே
மனமகிழ்ந்துவேதாந்த வழியுரைத்தேனேரே
தாரணியிலோதினேனே புராணம்நேர்த்தி
தானுரைத்தேன்மானதன் பிரவிர்த்திநிவிர்த்தி
பூரணந்தானுபுவன சபையிற்சொல்வீரே
பொய்யென்றால்புது மண்டபந்தனில்பார்ப்பீரே
நீருந்தானே அறிந்தும் நிகழ்த்தவந்தீர்கோனே (நின்னுடற்)

## அகவல் விருத்தம்.

மன்மதன்ஆதியென்றீரையாதன்மையைச்சொல்லுமெய்யா
மதனுக்குத்திருவாலயமுண்டா ததியிருந்தாலேகொண்டா

மதனைநோக்கித்தவஞ்செய்ததாரு கவனமுடனெனக்கதுகூறு
மாரன்முத்தியாருக்குத்தந்தான் தாரணியிலுமக்கேதெரிந்தால்
மௌனமாயிராதேயின்று நவமணியாயுரைப்பாய்நன்று
மதன்தனக்குச்சடலமுண்டா விதியிருந்தாலெடுத்துக்கொண்டா

## லாவணி.

சிவன்சத்திநாதவிந்துசெப்பினேன் ஆதியிற்சிவன்தான்-இத்
தேசந்தனில்யாவர்க்குந் தெரியச்சொன்னேன்யான்
அவனியில்மதனுக்குச்சடல மேதுகாண் கனவானே
ஆலயஞ்சிவனரனுக்குத் தானுண்டுபார்சீமானே
அவரைநோக்கித்தவஞ்செய் தவர்க்கருள் தந்தாரே
அந்தச்சிவனுக்கழிவில்லை எக்காலத்திலும்நேரே
நீர்கவனிப்பாயுரைப்பீர் புண்யவானே (நின்னுடற்)

## அகவல் விருத்தம்.

அறுபத்துநான்குதிருவிளையாடல் புரிந்தவத்தோர்க்குக்கூடல்
ஆதிசிவன்தந்தஞாயமுண்டு மேதினியிலுரைத்தேன்விண்டு
ஆறுஞ்சொன்னேனின்று வாணசூரன்மகளொன்று
அதிரூபமானகாமன்மகன்பதியிலுசாவெனும்பெண்புருடன்
அப்பாலகனுடையநாமம் செப்பினேன்பார்க்ஷேமம்
அழகாகவந்தபுத்ரன் நலமானஅனிருத்ரன் [கண்டு
அங்கசனைநினைத்தவர்க்கழிவுண்டு மங்களமாய்வகுத்தேன்
அரனுக்கழிவில்லைஎன்றே திறமாய்ச்செப்பினேனின்றே

## லாவணி.

தேசத்திற்சிவனைமறவாத்தேவர்க்குமோட்சம்-அச்
சிவனைநினைப்பவர்க்குத்தானே கேள்சாயுட்சியம்

ஆசையுடன்நீரும் தில்தம் வைக்கும்போது
அரகராசிவாஎன்கவில்லை யோபுவிமீது
காசினியில்மன்மதாவெனக் கருதுவாருண்டோ-அக்
கருமகாண்டம் உந்தனைவிட்டு நீங்குமோகண்டாய்
நேசனும்பழனிக்குமாரு சொல்த்தானே (நின்னுடற்)

## கேள்வி விருத்தம்.

சித்தசவேள் சிவன்கண்ணு லெரிந்தானென்று
செப்புதே வெகுசாஸ்திரந்தானே நன்று
இத்ததியிலரிச்சந்திர புராணமொன்று
இயம்புதே இருபத்தியேழாம்பாட்டு மின்று
பித்தர்களேஎரிந்திடவுமில்லை யென்று
பேசுவது ஞாயமல்ல கேளும் நின்று
சுத்தமுடன் திருப்பழனிக்குமாரை யென்றுந்
துதித்துமேபணிந்தால் சாயூக்ஷயமாவீரின்று

அச்சாபலேபாவேன்று அகப்பட்டுக்கொண்டீரே லேகுவா
என்ற மெட்டு.

## லாவணி.

சகலகலையுணர்ந்த சுகமுடையவேதாந்தத்
தமிழ்ச்சாரமுணர்ந்தோரே மிகவல்லோரே
மாசபைநேரே கேட்டகேள்விக்குத்
ததியிற்சவால் சொல்வீரே

அகமகிழ்ந்திகபரசுகங்கொடுக்கும் நகரில் அசையிசை
தவறுமல்-பேசாதிராமல் குற்றம்வராமல் மன்மதன்
கதை-அறியச்சொல் நினையாமல்

உத்தார்.

ஜெகம்புகழ் கவிச்சிங்கம் நீரே-மஹா
தெளிந்தசீமானே கவிஞோரே
சதகண்டமறிந்தவர்போல் செப்பவந்தீரே(தமிழ்ச்சாரம்)

எண்பத்திநான்குலட்சஜீவ பேதத்திற்குள்ளே
எதுமுதல்ரண்டென்று எந்தன்முன்னின்று
பதிலும்நன்று-நல்லோரே சொல்வீர்-இதுசமையமின்று

உத்தார்.

தன்மை தெரியாமலே அரட்ட-உம்மைச்
சபையோர்சபாஸெண விரட்ட
சன்மார்க்கமுமில்லாது துன்மார்க்கமாகவந்து(தமிழ்சாரம்)

கனகன் கனகக்கொடி யோனென்ற காரணத்தைக்
கண்டுரைசகபாஸே இல்லாமல்மாசு பாடுவீர்பேசு
நாற்கவிக்கர்த்தங் கருத்துரைநீ தமாசு

சனகன் மனசன்பனசம் வனசமலைதயுமினித்
தவறுமற்சொல்யோக்யம் வெகுசிலாக்யம் - அதுவே
பாக்யம் பிழையன்றியே தருவீரே நல்வாக்யம்

உத்தார்.

மூனமேசொன்ன கேள்விக்குத்தானே-சவால்
மொழிந்திடத்தெரியாச் சீமானே
தனலாகவில்லையென்றுங் காமனைப்பிர்மமென்றுங் (தமிழ்)

சிங்கம்பெரிதென்றதைப் போலவேநீர்விழித்தீர்
ஜெகமதிலென்முன்னாலே பின்னுமிக்காலே-துந்தனு
மேலே-டேப்பெடுத்துசாப் தெளிவுடன்கொடுவேலை

சங்கமெங்கும் நால்திசை மங்களமாகஇஸ்தியார்
தனையடிக்கச்செய்நேசன் ஞானப்ரகாசன்-ஜெயித்
தவாசன்-பழனிக்குமார் சாற்றியபதம் போசன்

உத்தார்.

இங்கு அன்றெண்டக் கொடிநாட்டி-கவி
இயற்றினேன் வெற்றி மாலை சூட்டி
தங்கமெடலதையே அங்கியாகத்தரித்து (தமிழ்ச்சாரம்)

## கேள்வி விருத்தம்.

காசினியில் துருப்பென்ற பாராசாரிக்குதிரைதன்னைக்
கணக்காய்முகப்பட்டாக் கடிவாளம்வாயில்மாட்டி
நேசர்களேசீனிவைத்து நினைவுடனேயேறியுட்கார்ந்து
நிமிசமோர்கரம்லகான்பிடித்து அங்குவாடியையமிதித்து
ஆசையுடன்மேகமதுபறந்தாற்போல அரைமினிட்டின்
ஆசான்பழனிக்குமார் தமிழ்க்கவி சாட்டையாற்சுழற்றி[பில்
தேசத்தோரறிந்திடவேமாரோ வென்றேயடித்துகியாளப்
தீருந்தன்வாயில்னுரை தள்ள அடிப்பேன் தினமுமுசார்

## சவால் லாவணி.

மாரோமாரோதடாக்கா லாவணிவந்துபாடுலோக்கா

சாராயங்கஞ்சாமதங் குடிப்பதற்கோரடி
தண்டுமுண்டாகப்பாட்டு படிப்பதற்கோரடி
வீராகயெந்தன் முன் தமிழ் விளம்பினதற்கோரடி
வேள்மதனெரியானென்று வீசினதற்கோரடி (மாரோ)

சிவனையேதூசித்துச் செப்பினதற்கோரடி
ஜெகப்புளுகனைப்போலே தினஞ்சொன்னதற்கோரடி
புவனத்திற்புராணத்தைப் பொய்யென்றதற்கோரடி
புத்தியில்லாமல்வந்து புலம்பினதற்கோரடி (மாரோ)

கலைமுழுதுமேகற்ற கவியைப்போல்மெலிக்கி
கணக்கில்லாமற்சபையிற் பாடாதேகுலிக்கி
தலையறுபட்டுப்போகாதே நீ கலிக்கி
தானேமேலையசைத்துச் சாற்றுதேதலிக்கி (மாரோ)

சந்ததமும்பழனிக் குமார்ஸாமிவாக்கு
தானும்பதிலிதற்குச் சல்தியாய்நோக்கு
அந்தமாய்யாவர்முன்பு அண்ணுவேஜோக்கு
அனங்கனெரியானென்று அறையவந்தோர்க்கு (மாரோ)

கண்மணியே இன்னுந்தூக்கமா என்றமெட்டு.

வாருங்கவிராஜசிங்கமே ஞானத்தங்கமே (வா)
சேருடனேதானிக்காலேசிறந்தவருய்டம்மைப்போலே
பேருமில்லையேபுவிமேலே காணேன் கண்ணாலே (வா)

சிங்கக்கொடியைப்பிடித்து ஜெயபேரிகையடித்து
சங்கையிற்பெரிதெனப்படித்துச் சாற்றினீர் துடித்து (வா)

சிங்கத்தின்முதுமேற்பாய்ந்து சீறுஞ்சரபமுட்கார்ந்து
பங்கஞ்செய்தடித்துமேபிளந்து சங்கைதெரிந்து (வா)

அங்கசனைத்தெய்வமென ஆணுவமாகவேநின்று
எங்களிடம்பாடவுமின்று வந்தீரேநன்று (வா)

அனங்கனுந்தெய்வமென்றால் ஆலயமவனுக்குண்டா
அனங்கனைநோக்கியேநன்றாய்த் தவஞ்செய்ததுண்டா (வா)

மாரனைநோக்கியேதவம் மானிலத்தில்தானேதினந்
தாரணியிற்செய்தாராசுகம் அருள்தந்தாராமதன் (வா)

எங்கும்பருத்திவிதைத்தாற்போ லிங்குமேவிதைக்கலாமா
எங்களிடங்காசுசெல்லாது ஐயாஇப்போது (வா)

மண்டலத்திற்கல்விப்ரசண்டன்மன்னன்பழனிக்குமாருத்தண்டன்
முண்டர்கட்குப்பொல்லாதவண்டன் தொண்டர்க்குத்தொண்டன்

## கேள்விக்குச் சவால்லாவணி.

ஓதுமுமதுடையஆதார மிருந்தாலிப்போது-நாளும்
உறுதியுடனெடுத்து உரைத்திடுவீர்புவிமீது
ஏதுமாரனெரியானு லிருந்தாலெடுத்துவாரும்
இருபெருஞ்சபைதனி லியற்றிடலாமேஉட்காரும்

உத்தார்.

நீதிவழியறிந்துதானே - நீர்
நிகழ்த்தவந்தீரேகனவானே
ஒதிவைத்தகுருவையுடனே கூட்டிவாருமிப்போது(நாளும்)

முன்னேதிவகாரத்திற்காமதகன னென்றுதானே-இனி
முறையிடுதேயத்தைப் பார்க்கவில்லையோதனவானே
இன்னுங்கலியநாயனர்புராணம் நாலாம்பாட்டு-அதில்
இயம்பிடுதேநன்றுயெடுத்துப் பார்த்திடாமல்விட்டு

உத்தார்.

மன்னன்மடியவில்லை என்று-இங்கு
வந்தீர்மனக்கெருவங் கொண்டு
உன்னுலெடுத்துச்சொல்ல உண்மைதெரியாமலிப்போது ()

பாலகாண்டமதைப் பார்க்கவில்லையோபுண்யவானே
பகருதேவேதாந்தவழி அறியவில்லையோதனவானே
ஆலமுண்டோன்விழியால் அனங்கனெரிந்திருக்கத்தானே-நீர்
அதையுமறிந்திடாமல் அதட்டிப்பாடவந்தீரேவீணே.

உத்தார்.

காலனையுதைத்தோன் கண்ணாலே-அந்தக்
காமனெரிந்திருக்க மேலே
ஓலமிட்டநரியைப்போலே உகந்திடாதிப்போது (நாளும்)

சங்கம்புகழுமன்னன்ஸாமி பழனிக்குமார்வாக்கு-மிகத்
தானேசிங்கத்தைப்பங்கஞ்செய்த சர்பக்கொடிதூக்கு
அங்கசன்பிர்மமென்ற அஞ்ஞானக்குறைதனைநீக்கு
ஆனந்தமாய்த்தந்தனை கரத்தில்வாங்கிப்பாடுலோக்கு

உத்தார்.

எங்கும்பருத்திவிதைக் காதே-நீ
இச்சபைதனிலுரைக் காதே
உங்களுடையகாசு எங்களிடஞ்செல்லாதிப்போது (நாளும்)

---

## சவால் விருத்தம்.

ஆட்டுவலிப்பதற்குச் சூட்டுக்கோல்தனையெடுத்து
அறிவிப்பேனிச்சபையிற் கவ்னமுசார்
கேட்டகேள்விக்கினித்தான் ஆன்சர்களுரையாமலே
கீழ்தலைகுனிந்துநீ பாடாதேகேள்
ஒட்டமதுஓடப்பாதை பார்க்காதேயின்றென்முன்
உளறுதேதேர்ந்தவித்வ சிங்கமேநீ
சாட்டையில்லாப்பம்பரம்போல் பாடவந்தாய்
தமிழ்மாரிசரம்பொழிவேன் ஜகத்தின்மாதோ.

## சவால் லாவணி.

சிங்கமேனச்சபையில் என்றமெட்டில் மகுடம்.

என்னுடன் பாடவுமக்கென்ன தெரியுந்தற்கவாதி
உரையும்புவிமீதில் தமிழாற் சொல்லுஞ்சேதி-ஞான
இன்பவேதக்கடலே இயற்றுகின்றேனொருநீதி
கன்னல்வில்மதனரு-கணையேது தென்றல்படையேது
கொடியுந்தானுமேது சாஸ்திரவழியோது-அந்தக்
காமனெரிந்தவிடங்-கழறும் உளறுமேதப்பாது

உத்தார்.

மன்மதன் தந்தைதாய்பெயரும் நீர்கூறும்-அன்று
மணமுடித்ததெவ்வூருந்தேரும் விடைதாரும்
இன்னுமியற்றுகின்றே னிந்தக்ஷணமேதற்கவாதி (ஞான)

மாரன்கூடவேஜெனித்த பெயரெத்தனைசொல்லும்
சென்றிடாமல்நில்லும் முன்பு
வந்தவரலாறுதனைச்சந்ததமே புகழ்ந்துசெல்லும்

பாரினிலெந்தவாரம் அந்தநாளதனைத்தெரிவீர்
மணியதனைஉரைப்பீர் அத்தைப்
பாங்குடன்சபைவந்து பக்ஷமுடனெனக்குப்புல்லும்

உத்தார்.

சீருடன்வேறுமுரைக்காதே உரைக்காதே
சிறந்திடும்பெரியோர் சபைமீதே சபைமீதே
ஏறுங்கிளிவாகனம்குடையுங் கடல்முரசும்சேதி (ஞான)

அந்தர்மின்னலொளி ஆகாயம்வந்தவகைகண்டு
வகையுடனேகொண்டு அந்த
அண்டபிண்டசராசர மானதையும்விண்டு

அந்தநாளினிலாதிசேஷன் பூலோகத்தைத்தாங்கும்
வழியினுடபாங்கும் இத்தை
அருமையுடனெனக்கு அண்ணாவேசொல்லிப்
பெய ரோங்கும்

உத்தார்.

செந்தமிழுமுண்டானதோது சொல்இப்போது
சார்ந்த-சித்தர்களுமேவந்தகூது சொல்இப்போது
எந்தமட்டிலும்பாடிஎன்னை அசையுந்தற்கவாதி (ஞான)

துஷ்டர்களையடக்கும்மீனாட்சி சுந்தரதாஸன்
புகழ்ந்தேன் விசுவாசன் மிகு
தொண்டர்க்குத்தொண்டன் பொல்லாமுண்டர்க்கு
வண்டனவர்சீஷன்

அஷ்டதிசையும்பெயர்பெற்ற பழனிக்குமார்ஸாமி
அன்புடன்வாழுஞ்க்ஷேமி இனி
ஆனந்தமாயெனக்கு அருமையுடனேகுணவாமி

உத்தார்.

பஷ்டாகயானுந்தனை மதித்தே ஷைவிஹுதித்தேன்
பலேபொதரென்று நெஞ்சிற்பதித்தேன்
சபையிலெதிர்த்தேன்
இஷ்டமாயானுங்கேட்டகேள்வியதற்குத்தற்கவாதி(ஞான)

## கேள்வி விருத்தம்.

சிங்கமதுசரபமதை ஜெயித்திடத்தான் திறமையுண்டா
சிறுகொசுவுமெப்பொழுதும் பருந்தைவெல்ல ஜீவனுண்டா
சங்கமதில்எலிபூனை தனையடிக்கச் சத்தியுண்டா
சரியானபுலியைப்பசு மாடடிக்கத் தைர்யமுண்டா

உங்கள்முன்புநாயைவந்து நரியடிக்க உக்ரமுண்டா
உலகமதிற்சிங்ராவைச் சிட்டடிக்க உறுதியுண்டா
திங்களணிசிவன் மதனை எரித்ததற்குத் தடைவேறுண்டா
திருப்பழனிக்குமாரர்தனைத் தினம்பணிந்தால் முத்தியுண்டே.

காராணையோடுபூனை போராடினது என்ற மெட்டு.

## கேள்வி லாவணி.

திண்டாட்டமாகவேநீ கொண்டாட்டம்போட்டுக்கொண்டு
செண்டாநாட்டினுயல்லவா ஆனாலும்நல்லவா
வந்தாயேபலேபா-கேட்டகேள்விக்குத் திரமுடனுன்சர்சொல்லிவா

அண்டாதவரேநீங்கள் பிண்டாசன்றன்னைப்போலே
கொண்டேகாலமும் போக்கி-நீளுதல்தூக்கி
எங்கினுஞ்ஜோக்கி-உனையுஎந்தி. ஆண்டர்கிசமுமாக்கி

உண்டானகண்டத்தைப்போல் திண்டார்புஜமுமான
சண்டாரந்தன்னைப்போட்டு விண்மதிகேட்டு-எங்கினும்
ரோட்டு-தெருத்தெருவாய் ஊளூதேநீயிப்பாட்டு

வண்டாலனைப்போலவே நன்றாகஇச்சபைமுன்
நின்றேபாடிவந்தீரே மாகவிஞோரே-வேதாந்தக்
கூரே-மறைவழியாய் வகுத்திடுவீரென்னேரே

உத்தார்.

அண்டையில்வந்தே உட்காரும்-யான்
அறையுங்கேள்விகட்கு நீரும்
கண்டானந்தம்பெருக வாரும்-நாற்
கவிக்கினிவிடையது தாரும்

திண்டாடுதலாயின்றவண்டாருஞ்செண்டதைப்போல்(செ)

சித்தர்முனிவர்களும் எத்தனைபேர் தனியாய்
செப்புவாயேயிப்போது ஆனாலுந்தீது-வாராமலோது
நல்விதமாகத்-தெளிவுடனே சொல்லாது

பக்தியாய்வேதவியாசர் சித்தத்திலொழியாமல்
இத்ததிதனிற்சொல்லும் சரியாகநில்லும்-பகலும் அல்லும்
அத்வீதசாரம் பார்த்திங்கெனைவெல்லும்

சித்தமதில்நினைத்து மெத்தவும்வேதவியாசர்
எத்தனைபாடல்சொன்னார் இச்சங்கமுன்னால்-வாய்திறந்
திந்நாள்-யோசியாமலே சீக்கிரஞ்சொல்மன்னா

சப்தகன்னியரென்றபத்தினிமாதர்நாமம்-தனித்தனியாகத்
தானே-செப்புஞ் சீமானே-ஒபுண்யவானே
கசடறக்கற்ற-தர்கவாதி எங்கோனே

உத்தார்.

சத்தம்போட்டுப்பாடாதே ஐயா-வேத
சாரமுமறிந்தோரே மெய்யா

நத்திவந்தீரேயிங்கு துய்யா-நன்றாய்
நடுவினில்விழிப்ப தேனையா.

சித்ரக்கவிக்கருத்தம் வித்தகாதெரியாமல் (செண்டா)

பிரபந்தமென்பதென்ன விரைவுடனெந்தனுக்குப்
பெரியோரேஉளறாமல் நீகழறாமல்-சீர் தவறாமல்
கணக்கெத்தனைபே ரொன்றுங்குறையாமல்

தரணியிலிந்திரனுக் குறுதியாயெத்தனைபேர்-சாஸ்
வீதமுமுள்ளோரே மஹாவல்லோரே-ஆகாநல்லோரே
புராணவழி தயவுடன்சொல்வீரே

திருமாலுக்கெத்தனைபேர் நிறைவானஅவதாரம்
செய்கையென்செய்தாரென்று ஒவ்வொன்றுயின்று
பேசுவீர்நன்று-தவறிடாமல் திடமாயுரைப்பீர்நின்று

திருமாலாயுதமுமேகுறையா மலேபுகல்வாய்-ஜென்மப்
பிறப்பைக்கண்டு-ஒழியாமல் விண்டு-மொழிவாய்
குண்டு-பலேபேசென்று திறமாய்ப்பாடுவீர்நின்று

குறுமுனிக்குத்தாய்தந்தை யாரே அவர்மணமும்
கொண்டேசெய்தவள்பேரு பேசுவீர்சிரு
இப்போதுநீரும்ஞானமார்க்கமாய்க்குறிப்புடனுரைதாரும்

உத்தார்.

இரகசியங்கேட்டதற்குச் சிங்கம்-க்ஷணம்
இடரதுவராமலிப் பங்கம்
அருமையுடனுரைப்பீர் தங்கம்-இந்த
அவையோர்களிருக்கின்ற சங்கம்
திரிபுரம்தஞ்சைநகர் உறுதியுடனேஎண்ணி (செண்டா)

வண்டர்கருவறுத்து துண்டந்துண்டமாய்ப்போடும்
வல்லபந்தெரிந்தோரே நற்கவிராயா-நிறைந்தசாயா
வெளுத்துப்போச்சுன் வாக்குக்கவியால்நேயா

அண்டபிண்டமதரச் சண்ட மாருதத்தமிழ் விண்டுபொழி
யும்நேசன்-எங்கினும் போசன்-ஞானப்ரகா
சன்-நால்திசைஇஸ்தியார் அறைந்துஜெயித்தராசன்

அண்டருலகத்தோர்கள் நன்றுய்ச்சேடன்பிர்மாவும்
பண்டிகையுமேயீது பார்த்துநற்சாது இதற்கிணை
ஏது-எங்கள்நாவினில் ஆய்ந்துசொல்லஒண்ணாது

தொண்டர்க்குத்தொண்டராயும் கண்டவர்கள்வணங்கும்
திருப்பழனிக்குமார்க்கே அர்ச்சனைநோக்கே-செய்திடு
வோர்க்கே-சாயுக்ஷியபதம் சுகமாய்க்கொடுப்பார்வாக்கே

உத்தார்.

செண்டுமல்லிகைப் பூங்காவும்-ரோஜா
சிறந்தமாதளைகள் கொய்யாவும்
கண்டிடத்தென்னைவாழை மேவும்-புரு
காடைமயில்குயில்கள் கூவும்
தெண்டஞ்செய்ததால்எமன் கொண்டுமேபோம்போதினிச்
[செண்டா

## கேள்வி விருத்தம்.

இச்சபையில்யானுமொரு கேள்விகேட்டேன்
இசையசைவல்லின மெல்லினமுங்கேட்டேன்
நிச்சயமாய்டேப்பினுட சங்கைகேட்டேன்
நீகொடுக்கும்சாப்பினுட தாளங்கேட்டேன்
தச்சணமே துந்தனுவின் கணக்கைக்கேட்டேன்
தந்தியின்பேரத்தனையுஞ் சரியாய்க்கேட்டேன்
பச்சமுடன்உபாத்தியாயர் நாமங்கேட்டேன்
பழனிக்குமார்சீஷர்முன்பா டக்கேட்டேனே.

இந்தமட்டிலும்பாடிப் போதுங்கீர்த்தி என்ற மெட்டு.

செந்தமிழ்க்கவிச்சிங்க மெனவேபெயரும்பெற்ற
சிறந்தோரேபாடும்பாடும் கேட்குங்கேள்விக்கு
இனிப்பயன்தான்தேடும் உரைக்காவிடிலும்வாயதை
மூடும்-எழுந்துதானேடும்

எந்தவிதமுங்கற்று எந்தனைத்தானசைக்க-இனியும்மால்
முடியாது செப்புவீர் சரியாகப்புவிமீது-புலவர்களே
பதிலெனக்கினிமீது சொல்லுமிப்போது

உத்தார்.

அந்தமுடனே கேட்டகேள்வி-இதற்
கருத்தமாகச்செப்புவீ ருதவி
தெந்தனுத்தென்பாங்குப் பாட்டைப்போலேபாடாதீர்
சிறந்தோரே பாடும்பாடும்

ஆதியிலேயுதித்தகாரணந் தன்னைநன்றுயன்புடன்
தான்கண்டுசொல் - அண்டபிண்டமானவிபரமதைப்
புல்-ஆகாயத்தின் உயரத்தையுஞ்சொல்லிவெல்
இல்லாதப்புறந்தானே நீ செல்

நீதியாயவ்விடத்தில் இடிஇடுஞ்சத்தமதை
நினைவுடன்பார்த்திந்நாள் - அம்மேர்நிறைகளஞ்சி
எத்தனைமன்னு - அதனளவுசெப்பிடுவீர்முன்னால்
முடியாதுகாண் உன்னால்

உத்தார்.

சேதியதனைத்தா னறிந்து-பதிற்
சீக்கிரந்தனிலுரை சிறந்து
நீதில்லாமலேநட்சத்திரத்தின்தொகையதனை (சிறந்)

ஆகமங்கள்வந்ததும்புவனமதைத்தான்தாங்குவதாரே
ஒப்புலவோரே-ஆதிசேடன் சுமக்கவும்என்னகூரே
அவனையார்தாங்குவ தினிப்பாரே
ஆதாரங்கொண்டா நேரே

மேகங்களாகாயத்தின் அருக்கன்மதியின்வட்டம்
மின்னலொளிவுமென்ன அளவுகளுந்திட்டமும்
தானென்ன-சந்திரன்வந்த காரணந்தனை இந்நாள்
சீக்கிரஞ்சொல் அண்ணா

உத்தார்.

நாகம்படம்விரித்தகதை போல்-உடன்
நாக்கலாம்தங்கியாடுவதைப் போல்
சேகரமாகவந்தீர்கடலின் ஆழமதைச் (சிறந்)

இந்தநேரம்அடிக்கும் டேப்பினளவுஞ்சுத்தும்
இனிஉயரமுங்கண்டு துந்தனுநீளந்தந்திஉயரம்
விண்டு-முக்கோணத்தின் கணக்கதைச்சொல்
நின்று கனவான்களே இன்று

சந்ததமும்பழனிக்குமாரு சாமிநாவலர் சந்தோஷ
வாக்கைப்பாடிச்சபையதனிற் சாற்றுவீர்கொண்டாடி
வேறுவகைபாடாதீர் எனைநாடி
யான்சொன்னதைத் தேடி

உத்தார்.

கந்தருப்பன்கதைபாடுங் கனவான்-நன்றாய்க்
கருத்தாகக்கேளும்நற் குணவான்
செந்தமிழ்க்கவிச்சிங்கமெனவேபெயரும்பெற்றுச் (சி)

## கேள்வி விருத்தம்.

உலகமதில் மானிடஜெனனமா யுதிப்பதுவே மிக அரிது
உண்மையாய்த் தமிழ்ச்சார முணர்வதுதானரிது
இலக்கண இலக்கியமு மியற்றுவதுந்தானரிது
இசைந்தபடி அகராதி கரத்திலெடுப்பதுவுமரிது

புலவர்களே மன்மதவேள் சரித்திரம்புலம்புவதுமேஅரிது
புகழ்ந்தமுன்வழக்கம்விட்டுப் பேசுவதுமேஅரிது
நலமுடன்மதனெரிய வில்லையென்றுரைப்பதேமிகஅரிது
ஞானவான் திருப்பழனிக் குமாரனையும் மறப்பதரிதே

## மன்மதனெரிந்ததற்குப்புராணங்கண்டுரைப்பது.

கண்ணிகள்.

காலனைஉதைத்தவர் காமனைஎரித்ததாய்க்
காட்டுங்காந்த புராணமிந்தாஇந்தா
பாலகாண்டத்திலுமே பிரபுலிங்கலீலையிற்
பக்ஷமுடனேபா ருமிந்தாஇந்தா

கம்பராமாயணத்தி லின்பமாயோராம்பாட்டில்
கருத்துடனேதே ருங்களிந்தாஇந்தா
கும்பமுனியுரைத்த ஒன்பதிலேஇப்போது
கூர்மையுடனறி வீரிந்தாஇந்தா

இச்சணஞ்சூடாமணி நிகண்டுதெய்வப்பெயர்தொகுதி
இருபத்திஐந்தாம் பாட்டுமிந்தாஇந்தா
எச்சமயமும்ஔவை குறளகராதியிலும்
எரிந்தான்மாரனு மேதானிந்தாஇந்தா

வேதாந்தநற்சுருதி யாகியகைவல்யமுப்
வித்வானேநவ நீதமுமிந்தாஇந்தா
நூதனமாய்ச்சந்தேகந் தெளிந்தபடலமதில்
நூற்றிமுப்பத்தாராம் பாட்டிலிந்தாஇந்தா

அருணாசலப்புராணத்தில் திருவவதாரச்சர்க்கப
ஐம்பத்தியெட்டாம் பாட்டிலிந்தாஇந்த
குருமுனியுமுரைத்த புராணமதையெடுத்து
குணமுடனே பார்த்துக்கொள்இந்தாஇந்த

அருமையுடனேபக்தர் மாணிக்கவாசகரும்
அருளிச்செய்தாரே ஐயா இந்தா இந்தா
திருவாசகமிருபத்தி எழாம்பாட்டினிலுமாரன்
செந்தணலாயெரிந்தா ரிந்தாஇந்தா

மூவரம்மானையென்ற பலதிரட்டிலுந்தானே
மூன்றும்பாட்டிலும் பாருமிந்தாஇந்தா
ஆவலாய்த்தாயுமான ருரைத்தஉடல்பொய்யுறவில்
அன்பாய்நாற்பத்தி மூன்றிலிந்தாஇந்தா

வருடாவருடந்தோறும் பஞ்சாங்கந்தனில்தானே
வந்துபார்காமதகன மிந்தாஇந்தா
தரணியில்திவகாரம் உரைக்குதேஎந்தநாளும்
தற்கஞ்செய்யாமற் பாருமிந்தாஇந்தா

சந்ததமுமீனாட்சி சுந்தரர்நெற்றிக்கண்ணால்
தனலாய்மதனெரிந்தா ரிந்தாஇந்தா
இந்தநேரம்பழனிக் குமாருசாமிதமிழால்
இயற்றினேன்சாஸ்திர வழிஇந்தாஇந்தா

## கேள்வி விருத்தம்.

மதனுந்தான்ஜெனன மெங்கே வளர்ந்ததெங்கே
கத்துவமாய்உருவிலிவாழ்ந்த தெங்கேவழுத்துமிங்கே
தியதனில்மாரவேள் தெய்வமென்றீரதுவுமெங்கே
ண்பாயவர்தனைநோக்கித் தவஞ்செய்ததுவுமெங்கே
தியிலவர்தவஞ்செய்தவர்க்கு முத்திதந்ததெங்கே
ரனேயவர்கொடுத்தவிடஞ் சல்திசொல்லிங்கே
தின்விபரமறிந்துரையா விடில்தானிங்கே
ன்னிடத்தில்சபையதனி லிராமலெழுந்தோடுவீரே.

## கேள்வி லாவணி.

வேள்மாரன்கதைதனை விளம்புகின்றீரேதமிழ்ப்பாடி
வித்வானேஎன்முன்னுடி வந்தீரேஎன்னைத்தேடி
கொக்கதுபோலேவாடி தமிழ்
விரித்திடுவேனிப்போதுபொருந்தக்கேளுங்களெனைநாடி

நாள்தோறுமென்னிடத்தில் மாரனெரியானென்றுஓடி
அனேகம்பெயர்கூடி வாதுக்காய்க்கவிசூடி
ஆனந்தக்கூத்தாடி இனி
நன்றாய்மதனெரிந்த புராணமெடுத்துரைப்பேன்கோடி

உத்தார்.

கேட்குங்கேள்விக்குக்கண்ணை மூடிவிளையாடி
கெவர்தையாய்வந்தீரே எனைச்சாடிநாம்ஜோடி
மீள்புலவீர்நீருமெனைச் செயிக்கவேதமிழ்ப்பாடி (வேள்)

இந்தவேளைதனிலே கைவல்யம்நவநீதம்பாரும்
எந்தவிதமுந்தேரும் இனிசவால்கூறும்
அறிந்துதான்வாரும் இல்லை
என்றால்நம்மிடம்வந்து நன்றாய்த்தெரிந்துரைப்பீர்நீரும்

கந்தருப்பனெரிந்ததைக் கவனமுடனேகண்டுசேரும்
பாட்டினுடசீரும் கருத்தாகவேசாரும்
மாரன்சரிதைக்காரும் நாளும்
காரிகைநன்னூல்குறள் கணக்குடனறிந்துமேஒரும்

உத்தார்.

உந்தனுடவாத்தியார்ஊரும் அவர்பேரும்-மிக
உரைத்துவிடைஎனக்குத் தாரும்நாள்தோறும்
விந்தையுடனேஎன்னை வெல்லமுடியாதினிப்பாடி (வேள்)

எத்தனைபோதித்தாலும் கந்தன்புத்திகவட்டிலென்று
புலவர்களேஒன்று இதென்னஞாயம்நன்று
என்னிடஞ்சொல்லாதீரின்று ஏதேது
உம்மைப்போலிந்தத்தேசத்தில் யாருமில்லைஎன்று

கர்த்தன்விழியால்மாரன் கனலாகவில்லைஎனப்பண்டு
ஓடாதேஎனைக்கண்டு துடிதுடித்துக்கொண்டு
பகர்ந்தேன்யானும்விண்டு ஒரு
காரணந்தெரியாமல் வீரமுடன்மதுவையுண்டு

உத்தார்.

புத்திகலங்கிஎன்முன்னின்று கவிநவின்று-நாளும்
புலம்பாதேமாரன்பிர்மமென்றுசொன்னேன் முயன்று
விந்தையுடனேநன்றுயெனைச்செயித்திடத்தமிழ்ப்பாடி (வி)

எங்கள்முன்னேஇப்போது சிங்கக்கொடியதனைநீக்கு
இல்லாவிட்டால்தடாக்கு அடித்திடுவேன்மேக்கு
சரபக்கொடிதூக்கு சிங்கமென்று
செப்பினுல் தமிழ்வாளா லறுப்பேனுந்தனுக்கு

சங்கம்புகழென்குருசாமி பழனிக்குமார்வாக்கு
தமிழும்வெகுஜோக்கு சல்தியாய்ப்பதில்நோக்கு
விடையிருந்தால்தாக்கு இனி
தஞ்சமென்றுபணிந்து வந்திடுந்தான்புலவோர்க்கு

உத்தார்.

மங்களமாய்மதியுண்டாக்கும் அதுஎல்லோர்க்கும்
மன-மகிழ்ந்துரைத்தேன் யாபேர்க்கும்
அமுதமாக்கும் வெங்கனலானவனை
வேகவில்லையென்று பாடி (வித்வா)

தெம்பாங்கு வர்ணமெட்டு.

பஞ்சலக்ஷணமுங்கற்றுப் படித்துயர்ந்தபாதகரே
செஞ்சொல்மறைபாராமற் சித்தசனைவஸ்துவென்றீர்

லாவணி.

சித்தசனைத்தெய்வமென்று ஜெகமதிற்பாடி
தீரரேசபையிலானந்தமாகக் கொண்டாடி
இத்ததியில்பித்தர்களே ஏகமாகக்கூடி
அத்வீதக்கனவானிடம் அறையாதேநாடி (சி)

தெம்பாங்கு.

சித்தசனுக்காலயங்கள் ஜெகமதிலேதானுண்டா
பித்துப்பிடித்ததுபோல் பேசுகின்றீர்வாதிகளே

லாவணி.

வாதியேசொல்மாரனை நோக்கியார்தவஞ்செய்தார்
மாரனும்யாருக்குவரம் வந்துசுகந்தந்தார்
சோதிதன்னைநீதியுடன் செப்பிடுவீர்நன்றாய்
வாதுக்காகமண்ணைக்கவ்வி மறந்தீர்சிவனுமத்தை

தெம்பாங்கு.

சிவன்தனைப்பெரிதென்று செப்பிடுவீரெப்போதும்
புவனமதில்சிவனன்றிப் பூலோகத்திற்கிடையாது

லாவணி.

ஆதிசிவனுக்காலயம் அவனியிலெங்குமுண்டு
அவரைநோக்கித்தவஞ் செய்தவர்க்குமுத்திநன்று
மேதினியிலீசன்வரம் வேண்டிடுவோர்க்கீவார்
பேதகமன்றியேகேளும் பெரியோரவராவார் (சித்)

தெம்பாங்கு.

பிரியமுடன்யானுந்தமிழ் பேதையரேஓதுகின்றேன்
தெரியாதவர்க்குவிடைதேறுதலாய்ச்செப்புகின்றேன்

லாவணி.

தேசமெங்கும்புகழ் மீனாட்சிசுந்தரதாஸன்
தீரன்திருவடியை எந்நேரம்பணிவாஸன்
ஆசையுடன்-நேசமுடன் அன்பாய்வணங்கும்போசன்
ராசனும்பழனிக்குமார் தாசனிடத்தில்தானே (சித்)

## கேள்வி விருத்தம்.

மன்மதவேள் சரித்திரத்தை வகுக்கவேண்டும்
மறைமுத லாகமங்க ளுணரவேண்டும்
அன்புடனே அரிச்சுவடி படிக்கவேண்டும்
ஆதியிலோதிவைத்த ஆசானை அடுக்கவேண்டும்
நன்மையாய் நீதிவழியாய் நடக்கவேண்டும்
நன்றாகஇலக்கண நூல் நவிலவேண்டும்
இன்பமதாயுலகநீதி இயம்பவேண்டும்
எங்கள்பழனிக்குமார் பதம்பாடுவீரே

உன்னுடன்பாடஎனக் குறுதியாய் என்ற மெட்டு.

மண்டலந்தனிற்கவி தண்டுமுண்டாய்ப்பாடுவதுண்டா-வேள்
மாரன்சங்கையைக்கேட்டால்வாங்காதேகனவானேசெண்டா
எண்டிசைதனில்மார னெரியாதநூலிருந்தாற்கொண்டா-நாம்
இருபேரும்பாடிடலா மிதற்குத்தானேதடைஇரண்டா

உத்தார்.

தண்டமிழ்ப்பாடும் புலவோரே-கேள்வி
சவால்பாடினீர்சபை நேரே
வண்டமிழ்ப்பாடஉந்தன்வாய்வல்லமைதானிங்குண்டா (சி)

சிலருடனேகூடி புலம்பிடாதே அஞ்ஞானப்பாட்டு-அந்தச்
சேட்டையிங்குசெல்லாது வாட்டிடுவேனெருப்பிற்போட்டு
பலபெயர்கள்பாட்டதைப் படித்துவராதேஎன்முன்கேட்டு-நாம்
பைரங்கமாயுட்கார்ந்து ஜெயித்திடலாமுந்தன்கைகாட்டு

உத்தார்.

கலகஞ்செய்யாமல்தானே ஒடும்-நன்ருய்க்
காமன்கதையதனைப் பாடும்
மலமலனவேதமிழ்வகுத்தேனிதற்குப்பயனுண்டா (வே)

அசைவிட்டுஇசைகெட்டு முன்சீர்பின்சீர்களுமிலாது-இங்கு
அறையவந்தீரென்னிடமுந்தன்காசுகள்செல்லாது
திசைபுகழ்லக்கணமிலக்கிய மில்லாமலிப்போது-இனி
செப்பவந்தீர்சபையிலெப்போது முன்கவிஒப்பாது

உத்தார்.

விசைவைப்பேனென்று அறியாயா-வாயை
மென்றுநொந்தீரோகவி ராயா
வசையுற்றகவிதனைமமதையாய்ப்பாடுவதுமுண்டா (வே)

எங்கும்பருத்திவிதைத்தாற் போல்விதைத்தால்முளையாதே-இனி
இச்சபையிலந்தத்தண்ணீருக் கிந்தப்பருப்புகள்வேகாதே
சங்கம்புகழுமெங்கள்சாமி பழனிக்குமார்மீதே-சமத்
தாகச்செல்லாதகாசைச் செலுத்தவந்தீரிங்குசெல்லாதே

உத்தார்.

இங்குகொல்லத்தெருவி லூசி-விசுவாசி
என்னிடத்திற்செல்லாது யோசி-விசுவாசி
மண்குதிரையைநம்பிவைகையிலிறங்குவதுமுண்டா (வேள்)

## கேள்வி விருத்தம்.

ஆனை தனைப்பூனை தின்றகதையதுபோல் அவையதனிற்பா
அரவமதைத்திறமில்லாத்தவளையதுவிழுங்கினாற்போல்தடி
மானதுவைத்தானேஒரு முயலெடுத்துண்டதுமேநாடி
மயிலதுவைக்குயிலெடுத்துமனதாரத் தின்றதுபோற்சாடி
மீனதுவைப்பூராவெடுத்து ஏப்பமிட்டதுபோலொருகோடி.
வெண்கழுகைசெம்போத்தடித்ததாய் வீணிலேவிளம்பிக்கூடி
தானென்றஆணுவத்தைச் சபைதனிற்சாற்றவந்தீரோடி
சற்குணவானிதுவென்ன ஆச்சரியம்சரசக்கூத்தாடி

---

## தேசத்து லாவணி

தேசமெங்கினுங்காம ராஜனுடதேகத்தைச்
சிவனெரித்ததையுங் கண்டுகண்டு

செப்புமெரியானென்றே ரொப்புக்கொள்ளும்படியே
தெரிவிக்கிறேன்யானும் விண்டுவிண்டு

நேசரேநால்திசையில் கள்ளிக்கோட்பாலக்காடு
நீடாமங்கலத்திலு முண்டுஉண்டு

நினைவுடனேகேளும் ஸ்ரீரங்கப்பட்டணம்மைசூர்
நெல்லிப்புத்தூர்தனிலு முண்டுஉண்டு

உத்தார்.

ஓசைபெற்றபெங்குளூர் திருப்பத்தூர்மல்லாபுரம்
உயர்ந்தசேலம்ஈரோடு காவேரிராயபுரம்
தீசகாகோயம்புத்தூர் மதுக்கரைகாஞ்சிபுரம்
சென்னபட்டணத்திலுமுண்டுஉண்டு (செப்புமெரியா)

### விருத்தம்.

தாயுமா னவருரைத்த தமிழுடற் பொய்யுறவில்
ஞாயமாய்த்தற்கவாதிகட்கு நாற்பத்திமூன்றும்பாட்டில்
நேயமாய்ச்சிவனுடைய நெற்றிக்கண்ணலெரிந்தானெனச்
சாயராகேட்கவில்லையோ தற்கவாதிகளேநாளும்

### லாவணி.

திருவள்ளூராற்காடு பிரம்பூருராயர்கோவில்
சீர்காழிசிதம்பரத்தி லுண்டுஉண்டு
திருவாளூர்கொறடாச்சேரி சாலியமங்கலமும்
திருவண்ணமலைதனி லுண்டுஉண்டு
திரிச்சினப்பள்ளிகும்ப கோணம்மாயபுரத்திற்
சித்தூர்வேலூர்தனிலு முண்டுஉண்டு
சிக்கல்நாகபட்டணம் தஞ்சாவூரையம்பேட்டை
சிங்கப்பெருமாள்கோவிலி லுண்டுஉண்டு

### உத்தார்.

திருவடமருதூரு காளாஸ்திரிநெல்லிக்குப்பம்
சிங்காரக்கோட்டைகூடு வாஞ்சேரிஜோளார்குப்பம்
திரமுடன்செஞ்சம்விசாக பட்டணமதிலொப்பும்
செங்கற்பட்கிருஷ்ணவி லுண்டுஉண்டு (செப்புமெரி)

### அகவல் விருத்தம்.

கம்பர்இராமர்யணத்தில் இன்பமாய்ச்செப்புதேக்ஷணத்தில்
கவனித்துப்பார்ஒராம்பாட்டு புவனமதிலுன்மனதில்நாட்டு
கடமுட்னேசூடாமணிகண்டு இனக்தெய்வப்பெயர்தொகுதிகண்டு
கருத்தாகத்தானிதுததியேஇருபத்தைந்தாம்பாட்டுகிதியே

காமனெரிந்தானெனவேபாரும் நேமமுடன்சென்றுநீரும்
கதறுகிறீர்கெருவங்கொண்டு பதராதீர் கேளுமின்று

## லாவணி.

மதுராந்தகம்பட்டாளம் அரக்கோணம்வடகளத்தூர்
வாழ்ந்தகோதாபுரியில் உண்டுஉண்டு
மாங்கரைஐதராபாத் கண்டிகொழும்புசீனு
மக்கம்யாழ்ப்பாணத்திலு முண்டுஉண்டு
புதுச்சேரிதென்னுற்காடு சேத்பட்டுசைதாப்பேட்டை
புதுக்கோட்டைபரங்கிமலையி லுண்டுஉண்டு
புலவனேரெங்கோன்கொச்சி மொகர்மீன்பல்லாரிஇன்னும்
பூமியில்எவ்விடத்தும் உண்டுஉண்டு

## உத்தார்.

அதுவேசரிபுகல்வேன் திண்டுக்கல்வடமதுரை
அம்மயநாயக்கனூர் சோழன்குருவித்துறை
இதுவேதிருநெல்வேலி மலையாளம்அம்பாத்துறை
இசைந்ததூத்துக்குடியி லுண்டுஉண்டு (செப்பும்)

## அகவல் விருத்தம்.

வேதாந்தசுருதியாகியகைவல்யம் நீதியாய்க்கேளும்நவநீதம்
விந்தையுடனேபாருந்திடம் சந்தேகந்தெளிந்தபடலம்
வித்வானேகண்டுகொள்சைட்டுநூற்றிமுப்பத்தாறும்பாட்டு
வேள்மாரனெரிந்ததாகக் கேளுங்களிருந்தன்பாக

## லாவணி.

மண்டலமெங்கும்புகழ் பஞ்சங்களைத்தான்தாங்கும்
மதுரைப்பட்டணந்தனி லுண்டுஉண்டு

மகிழ்சாயக்காரர்தெரு நாயக்கமார்தெருவில்
மன்மதனெரிந்தது முண்டுஉண்டு
கண்டவர்கள்வியக்கக் காமனையெரித்திடுங்
கனவான்மறவர்தெருவி லுண்டுஉண்டு
காசியிராமேஸ்வரம் சிவகெங்கைபார்த்திபனூர்
கருதுமணலூரிலு முண்டுஉண்டு

உத்தார்.

தண்டமிழ்ப்பாடிடுஞ் சற்குருதன்னைநோக்கு
சாமிபழனிக்குமார் சங்கீதமணிவாக்கு
தண்டுமுண்டாகப்பாடி வந்தபுலவோருக்கு
தமிழ்த்தாக்கிதுதருவேன் விண்டுவிண்டு(செப்புமெரி)

## கேள்வி அகவல் விருத்தம்.

அஷ்டதிக்கெங்கும்புகழ் இஷ்டமுடன்எவரும்மகிழ்
ஆனந்தக்கீர்த்திபெற்ற கியானமன்றிவந்தெதிர்த்த
அண்ணுவேசபையிலின்று கண்ணுலேபார்க்கநன்று
ஆதிசிவன்சிறிதென்றும் நீதியில்லாமதன்பெரிதென்றும்
அகஸ்தியருரைத்ததாகச் சகலருங்கேட்கயூகம்
அறிவிப்பீர்உலகில்மெய்க்கச் சிறப்பாயாவருமதிக்க
அகஸ்தியர்சொன்னநூல் சுகமாய்ச்சொல்வேகிந்நாளில்
அறிந்துரைபாட்டிவின்றே தெரிந்துரைத்தேன்சவால்நன்றே
ஐயமில்லாமற்கேளும் வையகமதனில்நாளும்
அவையில்ஒப்புக்கொள்வாயே கவனமதாய்மருமொழிநீயே
எல்லாஞ்சிவன்செயலே எல்லாந்தெரிந்தும்மேலே
ஆகாஇஃதென்னயோக்யம் யூகமில்லாதேசிலாக்யம்
அரனன்றிவேறுமில்லை திரமாயுரைத்தேனிச்சொல்லை
அண்டபுவனந்தெரியக் கண்டவர்களும்அறிய

அறிவித்தேன்ஞானமார்க்கம் நெறியாய்க்கண்டுரைநோக்கம்
ஆறுசாஸ்திரம்நான்குவேதம் வேறுவழிபேசாதீர்வாதம்

---

## கேள்வி லாவணி

ஏகபரம்பொருளே யோகபிரமானந்த
ஈசனைவிளங்கும் இப்போது
ஈசனில்லாவிடில் மதனுக்குப்பெயரேது
இருளேதுபகலேது நீயோது

ஆகமமுணர்ந்தோரே மண்ணேது விண்ணேது
அண்டபிண்டம் ஆகாயமதுமேது
அநேகசங்கதிகட்குத் தலையானபஞ்சாங்கமேது
அத்திதிலக்னம் நட்சத்திரமேது

பாகந்தெரிந்தவரே தொழிலேதுகிலையேது
பாழ்நரகங்கிடைக்கும் ஐயாஐயா
பலவானேமனையேறி தாய்தந்தைமணம்புரிந்து
பாரிற்பிறந்தீரது பொய்யாமெய்யா

ஏகசச்சிதானந்த இகபரமிரண்டிலும்
இருடியானவியாசர் தான்அன்று
இன்னபுராணஞ்செய்தா ரென்றேஇச்சபையில்
எடுத்துரைத்திடுங் கனவானேநன்று

யூகமுடனேஇந்தச் சங்கைதெரிந்தென்னிடம்
உகந்துநீருஞ்சொல்லாமற் பொய்யென்று
உற்றுப்பார்த்திடாமலே முற்றுமுணர்ந்தவர்போல்
உரைக்கவந்தீரேஐயா மெய்யென்று

## அகவல் விருத்தம்.

ஆதலால்அரிச்சுவடி பதினெட்டுஅச்சரத்தில்
வேதஅம்ஸத்தில் விதித்தாரே அகஸ்தியர்
அதுபிழைஎன்றீர்சணத்தில் எதுசெப்புகிறீர் தருணத்தில்
அக்காலத்திற்குருமுனிவரைக்கண்டீர்
இக்காலந்தேசிகருரைத்ததுபொய்யென்றீர்
அறிந்தும்வாயிற்புழுத்தள்ளும் தெரிந்ததைப்பிசகென்றீர்நில்லும்
அகஸ்தியர்சுத்தஞானம்ஒன்பதுசுகமுடன்சொன்னேனிப்போது
அப்பாடலிற்கண்டு கொள்ளையிட்டு
செப்பினேன்முன்னூற் றைம்பதாவதுசயிட்டு

## லாவணி.

சங்கத்தார்மதுரையில் சுருதியிற்கனத்தபோர்
சமணர்களைஜெயித்த அப்போது
தானேஎழுதிவைத்த நூல்பலஆராய்ந்து
சல்திஒருப்படுவீர் புவிமீது
பங்கம்பெற்றசமணரைக் கழுவதனில்தண்டித்த
பாண்டியனின்னுந்திருஷ்டாந் திரங்கேளும்
பாங்காய்ச்சாஸ்திரவழி அன்றுசொன்னசபதமும்
பாவலரேநன்று யினிநாளும்
மங்களமாகளத்தைப் சார்த்துத்திதிகருமம்
மானிலத்திற்செய்கின்றுர் வகைசொல்லும்
மாலேதுவேளேது ஆண்பெண்ணும்புணருவது
மனமேதுநாளேது நீர்புல்லும்

## அகவல் விருத்தம்.

அருமையுள்ளஇரவுபகலும் தாணிதனில்மழைவெயிலும்
அவ்விதியில்லாவிடிற்கணமேது செவ்வையாயுரைப்பீர்மீது

அன்றுநாள்பரியந்திரம்நேசா நன்றுடன்சுருதிக்கட்டால்வாசா
அந்நாளிற் சொன்னமொழி நன்னயமாய்ப்பிசகாதவழி
அகஸ்தியர்சுத்தஞானம்ஒன்பதில் மூன்றும்பாட்டு
இகமதில்முன்னூற்றி ஆறுவதுசயிட்டு
அபையோர்கள் நம்பும்படிஐயா புவனமதிற் செப்பிடுவீர்மெய்யா
இகபரமெல்லாருமேதோது ஈசன்செயலென்றுரப்போது
ஈசனில்லாவிடில்மதனுக்கு

ஆதியில்உலகத்தோடு ஒத்துவாழென்றுசொன்ன
ஔவையார்கருத்தையும் உணரலையா
ஆணுமுள்ளமதிற் கள்ளமதைநினைத்து
அவைதனிற்பாட வந்தீரிதுசரியா
நீதியாயன்னை தந்தை தமக்கைதங்கைமகன்
நீங்காமற்சம்போகஞ் செய்வதெதைப்பார்த்து
நீங்களநேகசாஸ்திரங் கற்றதுமெந்தவழி
நிச்சயமாய்ப்பாழ்நரகங் கிடைக்குஞ்சேர்த்து
பாதகரேஇத்தையறி யாமற்சபைமீது
பாடவந்தீரே அண்ணுபலமாக
பகர்ந்ததைத்தன்மனதில் திருப்தியுடனறிந்து
பக்குவமடைகுவீர் ஒருநினைவாக

## அகவல்விருத்தம்.

அருமறையுணர்ந்தோரேஐயா பெருமையுள்ள பாதர்களேமெய்யா
ஆகமப்படிஎடுத்துநயந்து யூகமுடன்தொடுத்தேன் ஆய்ந்து
ஆனந்தமாகக்கேட்கக் கியானமதாயாவர்பார்க்க
அப்போதுரைத்தஞானமதில் செப்பினேன்ஒன்பதுவில்
அண்ணுஅதிலாருவ்துபாட்டு முன்னூற்றிஏழாவதுசயிட்டு
ஆன்சர்களுரைத்தேன்கேளும்தான்பகர்வீரெமக்குமேலும்
இதுகாரணமறிகனவானே எப்போதும்சீஷனைகத்தானே

தென்புடன்நாங்கள்கேட்ட கேள்வியதற்குவிடை
தெரிந்துசபையின்முன்பு சீர்த்திபெறச்
செப்பினதை ஒப்புக்கொண் டிப்போதுதானேயாங்கள்
தெளிவாகவேநீரும் ஆன்சர்தர
அன்புடனே அடியார்க் கடியவனாய்விளங்கும்
ஆசான்பழனிக்குமார் நாவலர்சொல்
ஆனந்தமாகவேகொண் டாடியிச்சபைதனில்
அருமையுடனுரைத்தேன் நற்றமிழால்
சங்கத்தோரறிந்திடச் சாற்றினேன்கனவான்கள்
சகலமுந்தெரியவே சபைமுன்பு
சவாலுமுரைத்ததற்குக் கவனமுடனேபதில்
சாற்றலாமேசரியாய் இதுதெம்பு

## அகவல் விருத்தம்.

அப்புதேயுவாய்வுஆகாயம் செப்பும்பிரிதிகள்ஞாயம்
அதிலெந்தப்பூதம்பேசுதாதிநியாய்த்தொழிலென்னவாதி
ஆழிஜலத்தைமுகில்பருகியன்று நாளிற்பொழியும்பலனின்று
அருத்தமிதுகேட்டேனுனைத் திருத்தமாய்க்கேள்விக்குசவால்தினை
அதிசீக்கிரம்பாட்டாலின்று பதியதனில்வேறுபாடாதேநின்று
ஆதரவாய்ச்சொல்லவேணும்நாளும் வாதிகளேஇதுசமயமீளும்
இன்பமதாகவேநல் யோகபிர்மானந்த (ஈசனுக)

## அகவல் விருத்தம்.

பஞ்சலக்ஷணங்கற்றறிந்த செஞ்சொல்மறையுணர்ந்த
பாதர்களேவாருமின்று நீதியாய்ச்சபையில்நின்று
பலபெயர்களைச்சேர்த்து உலகமதனிலேபார்த்து
பறையடித்துப்பற்காட்டி கெருவமதாய்வாலாட்டி
பலேபலேசிங்கமென்று சலாஞ்செய்துவந்துநின்று

பாடிநீர்புலவோரே நாடிவந்நீரென்னேரே
பாரினிலுட்கார்ந்து வீரியமாய்ப்புகழ்ந்து
படபடப்பாய்ப்புவிமீதே கடகடெனஉளறுதே
பரமன்விழியால்மாரன் எரியவில்லைஎன்றுதீரன்
பாடியசாஸ்திரத்தை நாடியேயிச்சணத்தில்
பட்சமுடன் அனலிற்போடலாமா இட்சணமேசோதிக்கலாமா
பகர்ந்துரைத்தபுராணமின்று அகங்கொண்டுகந்தலென்று
பாடவந்நீரென்னயோக்யம் நாடிநீரின்றுசிலாக்யம்
பலமில்லாக்கவியதனை நலமாகவந்துமுன்னே
படிக்காதீர்கனவான்நீரும் துடிக்காதிதற்குவிடைதாரும்
பகருவேன்கேள்விஒன்று அகலாதீர்ஐயாஇன்று
பரவிவருஞ்சிங்கந்தன்னைச் சரபமெனும்பட்சிமுன்னே
பசிக்கிரையில்லைஎன்று நசுக்கிச்சிங்கத்தைத்தின்று
பாருலகிலேப்பமிட்டுத் தாரணியோர்தனைக்கேட்டு
பங்கப்பட்டசிங்கமதைச் சங்கமதில்ஒடினதை
பண்பாகப்பாடலாமா அன்பாகவிரிக்கலாமா
பாடவும்ஞாயமுண்டா தேடியேவேறுகொண்டா
பைந்தமிழறிந்தநேசன் சந்ததம்யாவர்க்குரியவாசன்
பாருலகில்மதன்கதைக்கதிகாரன் தாரணிலட்மணன்குமாரன்
பழனிக்குமாருவாக்கு பிழையன்றிக்கேட்டுநோக்கு
பாடினேன்தற்கவாதிகட்கு கூறுவீர்மறுமொழியிதற்கு

## கேள்வி லாவணி.

அகப்பட்டுக்கொண்டீரே அகப்பட்டுக்கொண்டீரே-இந்த
அத்வீதச்சபைநேரே கம்பிகள்வாங்கிஅகலாதீர்புலவோரே

வகையுந்திகைதப்பி வாலாட்டிப்பாடாதேகப்பி
வேள்மாரன்-எரியாத ஞாலயொப்பி

ஜெகமதனிற்செப்பி — என்முன்-தீரரேவாயைச்சப்பி
பாடிநீருந்தன்சிரமதிற் — போட்டேன்தொப்பி
அகமாய்ப்பாடிநீரே இந்த அத்வீதச்சபைநேரே-கம்பிகள்
பாடவெட்கமில்லை சபையோர்-பார்த்தால்வெகுதொல்லை
வாயில்வல்லினமு — மெல்லினமில்லை
கூடினுஞ்சல்லை — மேற்கொண்டுகாட்டுநீர்பல்லை
கூறுகின்றீர்ஒர்நிலை — தனில்நில்லே
ஆடவரேகேட்பீரே இந்த அத்வீதச்சபைநேரே (கம்பிகள்)

என்னைத்தான் அசைக்க உமக் — கென்னதெரியும்ஜெயிக்க
வாரமிரண்டுமிக்க — வாய்தாத்தாரேனுரைக்க
இன்றிருந்தோர்நகைக்க — எழுந்தோடாதேசிறக்க
என்னிடம்பாட — வந்தீரேபகைக்க
இன்றறிகவிஞோரே — இந்தஅத்வீதச்சபைநேரே
பங்கமில்லாமல்நோக்கு — ஸாமி-பழனிக்குமாருவாக்கு
ஞானவான்பாடிய — தமிழ்ஸோக்கு
சிங்கக்கொடிநீக்கு — நின்சிந்தையிலிதனைத்தாக்கு
தினமுமேசரபக் — கொடியைத்தூக்கு
அங்கதன்தனலானரே — அத்வீதச்சபைநேரே

## கேள்வி விருத்தம்.

என்பத்துநான்குலட்சம் ஜீவபேதத்திற் கெல்லாம்
இசைந்தபடியமுதளிக்கு மீசன்தன்னை
வம்புடனேபலவாறு தூசனமாயெப்போதும்
வாயாடில்தேகமெல்லாம் புழுத்தள்ளுமையா
துன்பப்பட்டமன்மதனைச் சோதியென்றுரைத்தவர்க்குத்
தொல்லுலகில் நரகமேகிடைக்குமன்றிச்
சன்மார்க்கங்கிடையாது அவர்க்கேநாளும்
தாரணியில்யானுரைத்தேன் சபையில்தானே

நாவலரேன்றபாவலோரே என்றமெட்டு.

கேவலரென்றபுலவோரே இங்கு
கீர்த்திபெறலாமெனக் கெவர்தையாய்வந்தோரே
ஆவலுடன்வெளவால் கத்துமுன்னே-அதற்குள்
ஆன்சர்சொல்லத்தெரியாமல் அபையில்வருவானே (கேவ)

என்னைஜெயித்திட உம்மாலாமா உம்மை
ஈன்றதந்தைவாத்தியார் வந்தாலுமுடியுமா
மன்னவனேஎன்னிடத்தில் வீமா சபையில்
மாட்டேனென்று எழுந்தோடினாலும்விடுவோமா (கேவ)

இப்போதுசொல்கிறேன் கேள்பாங்கு இனி
இச்சபையில்தானேவந்து நீராம்ராம் வாங்கு
மப்புவெறியாலுனக்கிங்கிந்தத்தீங்கு கேடு
வந்ததேநரகக்குழி அதைவிட்டுநீங்கு (கேவல)

கேணவென்றதற்கு மோசந்தான உம்மைக்
கெட்டிக்காரனென்று மதிப்பதுமிங்குதான
கூணைவைப்போல் பாடிடாதேகீண எங்கும்
குலுங்கென்றுகினைப்பார்கள் படித்தாயோஆண (கே)

கேளுங்கள் தற்கவாதிகளே-வீணைக்
கெட்டிடுவீரின்றேடேதான் புலவோர்களே
நாளும்புளியமரங்களைப் பிடித்தால்
நழுவமாட்டார்கள் உறுதிபெரியோர்களே (கே)

ஆண்டவர் தன்னையு மடுத்து-நன்றாய்
அரகராசிவாவெனத் திருநீறடுத்துப்
பாண்டிநகரைத் தொடுத்துத்-திருப்
பழனிக்குமார்நாமத்தைப் பாரினிற்படித்து (கே)

## அகவல் விருத்தம்.

அருமறையுணர்ந்தோரேநீரும் பெருமையுள்ளஇஷ்டர்களேவாரும்
அன்புடன்சபையிலின்று இன்பமுடன்வந்து நின்று
அண்ணுவேஉந்தனையானும் கண்ணுலேகண்டதைத்தானும்
அப்பனேமுகமதுகருத்து இப்போதுஅகமதுவெயர்த்து
ஆணுலுந்தகைப்புடனே வீணுகஇளைப்புடனே
அரன்விழியாலேமாரன் எரியவில்லைஎன்றுதீரன்
அதட்டியேபேசாதே பிதற்றியேகைவீசாதே
எல்லாமறிந்தோமென்று பொல்லாப்படைவதோநன்று
ஆதிவழியறிந்திடாமல் நீதியாய்ப்பாடிடாமல்
ஆணுலென்வார்த்தைகேளும் மானிலத்திலெந்நாளும்
அங்கசவேளெரிந்தசங்கை இங்கிதமாய்ச்சொல்வேனிங்கே
அந்தமுள்ளடேப்பெடுத்து விந்தையாய்ச்சாப்க்கொடுத்து
ஆனந்தமாய்த்துந்தனுமீட்டி கியானமுடன்தமிழைக்காட்டி
அஞ்சாமற்பாரும்நேரே பஞ்சாங்கத்தில்புலவோரே
அறிவித்தேன்காமதகனம் தெரிவித்தேனித்தருணம்
அருமையுள்ளதிவகாரம் பெருமையாய்நூலாசாரம்
அனைவோர்களுக்குந்தொண்டன் கனவானேஞானப்ரசண்டன்
ஆறுற்பழனிக்குமார்ஸாமிவாக்கு நாணுவிதஅமுதமெனத்தாக்கு
அதின்சாரங்கண்டுகொள்வீர் பதியதனிற்புல்வீர்செல்வீர்
ஆறுசாஸ்திரவழிபின்சாரம் பாருலகிற்சொன்னேனிந்நேரம்

## கேள்வி லாவணி.

### கண்ணிகள்.

வந்துஎதிர்த்துப்பாட வாதியைக்காணேமென்றீர்
வந்தேன்காண்புவிமீதே புலவர்களே-வந்தேன்காண்

பைந்தமிழ்க்கற்றவரே  உந்தனுடலாவணி
பகருவீரிப்போதே  சபையின்முன்பு-பகருவீரிப்

தந்தனுடேப்பெடுத்து  வந்து ஆனந்தத்துடன்
சுதியைநன்றுய்ப்பாருங்கள்  அபையின்முன்பு-சுதியை

சந்ததமுமீனுட்சி  சுந்தரர்பாதமதைச்
சரணமென்றேபணியுங்கள்  பாதமதைச்-சரணமென்

வாங்காதேநெடுங்கம்பி  உமக்குத்தானேதிவைத்த
வாத்தியார் நாமமென்ன  அபையின்முன்பு-வாத்தி

பாங்குடன் அன்னை தந்தை  பெயர்கேட்டு ஓடிவந்தே
பக்ஷமுடனே சொல்லு  அபையின்முன்பு-பக்ஷமுட

உன்னைத்தானீன்றவரும்  படித்துத்துத்தான்வைத்தவரும்
ஓதிவைக்கவுமில்லையா  அபையின்முன்பு-ஓதிவை

இன்னுமெரியானென்று  பாடவெட்கமில்லையா
இயம்பாதேபுவிமீதே  அபையின்முன்பு-இயம்

தந்தனுடேப்பெடுத்துச்  சுதிசேர்க்கச்சென்றவரும்
சொல்லாமலொழிந்திட்டாரோ  அபையின்முன்பு-சொல்

வந்து குருவைக்கூட்டி  வருகிறேனென்றவர்க்கு
வழியுந்தெரியவில்லையோ  அபையின்முன்பு-வழியுந்

என்னசொல்லியுந்தானும்  ஏதுமக்குரைத்தாலும்
கந்தன்புத்திதனைப்போல்  அபையின்முன்பு-கந்தன்

மன்னன்பழனிக்குமார்  மதுரவாக்கதால்தானே
வகுத்திட்டேனிதுதகியே  அபையின்முன்பு-வகு

## கேள்வி விருத்தம்.

ஆணவத்தாற்பலபேர்க ளொன்றாய்க்கூடி
அவையதனில்புலவரென அறைந்தீர்நாடி
வீணுக்காய்ச்சங்கரனார் விழியதினாலோடி
வெந்ததில்லைமாரனென்று விளம்புகிறீர்தேடி
தோணும்படியானுரைப்பே னிங்கொருகோடி
சுருதிமுதலாகமங்கள் தொகையாய்ப்பாடி
வேணுமென்றே உங்களுக்குக்கவிகள்சூடி
வித்வானேயான்கொடுப்பேன் அறிவீர்மாதோ

மாரனெரியவில்லையென்று கூறும் பெரியோரே என்றமெட்டு.

ஆகமவேதபுராணம் யூகமாய்க்கற்றவித்வோரே
அண்ணாவே வாரும் வாரும் அந்த
அங்கசன்கதையிற் கேள்வி மங்களமாகக்கேட்டால்
ஆன்சர்கள் தாருந்தாரும்
மோகமன்மதன்தனக்கு ஆகநாமம்எத்தனைநீர்
முழிக்காமற் சொல்லும் சொல்லும் நன்றாய்
மொழிந்திரே மன்மதனைத் தெய்வமென்று பாடினீரே
மூர்க்கரே செல்லும் செல்லும்

### உத்தார்.

வேகலையென்று வெந்தோனைநன்று
நீ கவனியின்று நினைப்பாய்நின்று
ஆகமம் அநேகசாஸ்திரம்பேசுதேளரிந்தானென்று (அ)
மண்டலமெங்கினும் பார்த்தோம்-உந்தனைப்போல்
பதருகள் வாய்த்ததொருவரில்லை இங்கு

வந்தீரேகெருவங்கொண்டு முந்திக்கேவலமடைய
வாசியாததுந் தொல்லை

தண்டுமுண்டாகவேபாடி சாஸ்திரங்களும் பொய்யென்று
சபையின் முன்புவந்தீரே நன்றாய்

தானேகண்ணில்லாதவனைக் கோகனகக் கண்ணனென்று
சாற்றியே நொந்தீரே

உத்தார்.

விண்டுரைமீது மெய்யாகஸாது
கண்டுமிப்போது காரணம்ஓது

அண்டபிண்டசராசரம் ஒன்றாயெடுத்துவிழுங்கும்
அண்ணாவே வாரும் வாரும்

பாதமில்லாதவனையே பரதநாட்டியமாடும்
பாவனையது போலே இந்தப்

பாரிற்சிங்கம்பொரிதென்று காரணஞ்சொன்னீரேமன்று
பலேபேசென்றே இன்றாள்

காதுகேட்காச்செவிடனைப் பாரதமுங் கேட்டானென்று
கவிராயர்களே ஐயா இரு

கரமில்லாதோன் மத்தளங் கஞ்சரிசாலரடித்த
கதையுஞ்சொன் னீரேமெய்யா

உத்தார்.

நீதமாஸோ நினைவும்பேசு
ஓதுசபாசு ஓகோசர்வீசு

ஆதாரவில்லாதபடி மாதர்களழுதாற் போல
அண்ணாவே வாரும் வாரும்

பக்திவழி பஜனைகள் சரித்திரம்லாவணிகள்
பாடுமெங்கும் பிரகாசன் அதைப்
பாரோர்புகழ்ந்துகொண் டாடும்பேரோங்கிடும்
நறகுருவாம் பழனிக்குமாரு நேசன்
இத்தரையில்யானுங்கேட்ட கேள்விக்குப்பயனுஞ்சொல்லா
தினிப்பாடஞாயமேது மிக
இலக்கணம் அகராதி இலக்கியம் நைடதமும்
இசையசையுமிப்போது

உத்தார்.

இத்ததியோது இடர்வராது
எத்தனைசூது இங்குசெல்லாது
அத்தனெற்றிக்கண்ணுலந்த சித்தசனெரிந்தானென்று
அண்ணுவே வாரும் வாரும்

## கேள்வி விருத்தம்.

மன்மதனைத்தெய்வமென்று புவனமதில்வழியுந்தப்பி
வகைதெரியாமானிடர்தன் வாயைச்சப்பி
அன்னையைப்புணரச்செய் தங்கசனுதியென்றீரதுவுமொப்பி
அண்டப்புளுகனைப்போ லறையாதேதகப்பி
இன்னகரில்சித்தசனை எரியானென்றுதிடமாய்ச்செப்பி
என்னிடத்திலியம்பவந்தீ ரெரியாதனால்மெப்பி
உன்னிதமாயாணுவத்தாலிங்கு நாடிநீருமுப்பி
உன்சிரசிற்போட்டேனே யான்பழயதொப்பி.

## க்ஷேமங்கேட்கின்ற அகவல் விருத்தம்.

மண்டலத்திற்கீர்த்திபெறுசிங்கம்தண்டோரா அடித்ததங்கம்
மாரன்சரிதைபாடும்வல்லவரே காரணந்தெரிந்தநல்லவரே

மதுரத்தமிழால்அகவல்பாடி சதுர்மறையறிந்ததங்களைத்தேடி
வந்ததுஎன்னசங்கைநில்லும் சொந்தக்காரியத்தைச்சொல்லும்
மார்க்கமுடன்உபாத்தியாயர் ஏற்கையாய்த்தானேநேயர்
வர்ணமென்னநாமமென்ன பின்னுங்குறைவின்றிமன்ன
வயதென்னநிறமென்ன சுயமானதொழிலென்ன
ஆனதொருஊருகளுங் கியானமுடன்விபரங்களும்
வாதிகளேசட்டாம்பிள்ளையாரு நீதியாயெத்தனைசீடர்கள்கூறு
வாசிக்கின்றார்கள்நாடி யோசியாமலெனைநாடி
வருந்தியேகேட்டேனென்று நிறைந்தசபையதனிலின்று
மனஸ்தாபங்கொள்ளாமல் நினைவுந்தடுமாறாமல்
மன்னனேடேப்பெடுத்து நன்னயமாய்சாப்கொடுத்து
மகிழ்வுடனேதுந்தனுமீட்டிச் சுகமானசரபக்கொடிநாட்டி
மருப்படர்பரங்குன்றுவாழுந்திருப்பழனிக்குமாரைநாளும்
மலர்ப்பாதந்தஞ்சமெனவணங்கி உலகத்தோர்க்குத்தெரிந்திணங்கி
வாத்தியாரெரிந்தகட்சிபாடி நேர்த்தியாயச்சிற்பதித்தாரோநாடி
இதைப்போற்பாடாதேசொல்லும் இதுசரியாஓர்நிலைநில்லும்

## க்ஷேமங்கேட்கின்ற லாவணி.

தண்டமிழ்ச்சக்ரவர்த்தி தாம்தானோ அண்டசரா
சரத்தில்வேறுண்டோ தனவானே

தாங்களெந்தவூரெந்தத்தேசம் எமக்குநன்றாய்த்
தயவாகவேயுரைப்பீர் கனவானே

மண்டலந்தனிலுந்தன் தாய்தந்தைதமயனும்
மகிழுடன்சகோதர ரவர்நாமம்

மற்றபந்துக்களுடன் சற்றுங்குறைவன்றியே
வறைந்துசபையதனிற் சொல்க்ஷேமம்

தண்டோரடித்தசங்கை விண்டுரையாமலண்ட
சராசரத்தில் வேறுண்டோ தனவானே

உந்தன்பேரென்னஉமக் கோதிவைத்த உபாத்தியாயர்
உண்மையாய்வர்ணமென்ன நாமங்கண்டு

உலகத்தில் யாவர்கேட்கக் கலக்கமில்லாமலினி
உற்றசங்கை செப்பிடுவீர்விண்டு

எந்தஇடத்திலுந்தன் வாத்தியார்பாடசாலை
ஏற்படுத்திருக்கின்றா ரெப்போதும்

எத்தனைகுழந்தைகள் வாசிக்கின்றார்சொல்லும்
என்னசம்பளம் பெற்றார்புவிமீது

சந்தோஷமாயென்னிடம் வந்துரையுமே அண்ட
சராசரத்தில்வேறுண்டோதனவானே

அரிமுதலிலக்கணம் அகராதிநால்வேதம்
ஆறுசாஸ்திரங்களுங் கற்றுவைத்தார்

அவர்க்கென்னதெக்ஷிணையும் பாடசாலைக்குநாளும்
அன்றுவாடகைக் கட்டுவான்சுதந்தார்

இரவும்பகலுமிடை விடாமலேநீருங்கற்று
இச்சபைதனில்வந்தீர் வெகுசிலாக்யம்

இவ்விதசங்கைகட்கு கவனமுடனேசவால்
இயம்பிடுங்கனவானே நல்யோக்யம்

சரியாகவேதானே கற்றுணர்ந்தோமென்றே அண்ட
சராசரத்தில்வேறுண்டோதனவானே.

அத்வீதப்பாயெடுத்துச் சுத்தமுடன்விரித்தேன்
அபைசபையோர்களுட னுட்காரும்

அசையிசைமுற்சீர்பிச்சீர் எமகம்ளத்திப்ரகாசம்
அண்ணுவேதவருமல் தான்கூறும்

மத்தளம்டேப்துந்தன கைத்தாளஞ்சாலரோடு
வாத்தியம் ட்ராங்கில்யஞ் சுதைசேர்த்து
மகாராஜாஜாஜந்தாம்சார்ச்சு சக்ரவர்த்திமவுன்ரேட்டில்
மாபழனிக்குமார் லாவணிபார்த்து
சத்விஷயமன்றியே உந்தனுடையவாக்கில்
சராசரத்தில்வே றுண்டோ

## க்ஷேமங்கேட்டதற்குச் சவால் சொல்கிற அகவல்.

அகிலமதிற்பெயர்பெற்றசிங்கம் விகிதமுடன்வந்தெதிர்த்ததங்கம்
அவையதனில்தானேஞாயமாகபுவனமதில்நன்றாய்மேலாக
ஐயனேஎன்னதான்க்ஷேமம் மெய்யாம்சட்டாம்பிள்ளைநாமம்
ஆகையால்பாடகசாலை யூகமாய்க்கேள்முன்னாலே
அவாளிடம்வாசிக்கும்பிள்ளைகள் குவலையத்திற்பேசுங்கிள்ளைகள்
அதைப்போல்பாடும்லாவணி மிதமாயிராதுபஜனைகளுங்கண்மணி
அசைஇசைஇலக்கணமொடு பிசகொன்றுவாராதுநாடு
அகரம்இகரம்சிகரம் நிகரம்பகரம்மகரம்
அகாரமுதல்இகாரம் உகாரமுங்கேள்சாரம்
அருத்தந்தெரியப்படிநல் விருத்தமொடுவெண்பாஅகவல்
அக்குற்றமிக்குற்றமன்றிசொற்குற்றம்பொருட்குற்றம்நன்றி
அண்டமெல்லாங்கிடுகிடென சண்டமாருதம்பொழியுமென
ஆசான்சங்கைசொல்கிறேன்பாரும் பேசாதுசெவியுறநீரும்
அச்சியந்திரசாலையிலோங்கும் மெச்சுநாவலரென்றபாங்கும்
அருமையாய்பதங்களனேகம்பாடி தரணியிற்காலூண்டிநாடி
அடிபேரிகைமுழங்க துடியானவர்பதிகலங்க
எல்லோரும்வாங்கியமுதென்று ஜில்லாவிற்பாடுகிறார்நன்று
அத்தமிழெவ்விடமும்புக்ஷாப்பிலெத்தனைபாடியேவாப்பில்
ஆனபடிசாற்றுகவியுடன் வேணும்படிதெரியுமித்துடன்
ஆசையுடன்நன்றாய்க்கேளும் வாசவன்குலத்தில்நாளும்

அஞ்சாமுண்டார்க்குவண்டன்கெஞ்சினோர்க்குற்றதொண்டன்
அருதியாய்த்தானிருக்குந்தெரி திருப்பழனிக்குமாரென்றறி
ஆசானைக்கண்டுஇணங்கி நேசா அவர்பாதத்துவணங்கி
அபையோர்க்கென்சரணம் புவனமதிலித்தருணம்

## க்ஷேமங்கேட்டதற்குச் சவால்சொல் லாவணி.

தொல்லுலகில்வல்லவ மாகஅபையதனிற்
சூட்டாய்க்கேட்டீரே எங்கள்சுகக்ஷேமம்

சொல்கின்றேனில்லறத்தின் நல்லவரேநீர்கேளும்
துரிதமுடனேஒவ் வொருநாமம்

பல்லுயிர்களையெல்லாம் உள்ளபடிரட்சிக்கும்
பாண்டித்தலம் மீனாட்சிசுந்தரர்தன்

பாதம்பணிந்துசவால் நீதிதவறுமலே
பலேசுகமுடன் சொல்வேன்அறிவீரே.

உத்தார்.

எல்லாஞ்சிவன்செயலென் றறியீரா
இக்ஷணத்தில்தெரிவீர் அண்ணுவேநேராய்

தொல்லையானசங்கதி இங்குவந்துபாடியே
சூட்டாய்க்கேட்டீரே எங்கள்சுகக்ஷேமம் (சொ)

ஐம்பத்தைந்துதேசத்தில் எந்தவிடங்கேட்டாலுமென்
ஆசானுடையநாமஞ் சொல்வார்கள்

அச்சங்கையையறிந்து இக்ஷணமேயாம்சொன்ன
ஆன்சர்களைக்கேளும் நல்லோர்கள்

இன்பமுடனேநேரில் ஜட்ஜிகலெக்ட்டரிடம்
இந்தியன்பின்னல்கோர்ட் டாக்ட்சட்டம்பார்த்து

எரிந்தெரியானென்றதைப் புதுமண்டபங்கருங்கல்லில்
இருந்தசவுக்கைதனில் கச்சிதீர்த்து

உத்தார்.

சம்பந்தர்திருஞான சாமிகள்கூட
தற்கம்பேசிஜட்ஜியும் எல்லோரும்நாட
துன்பங்கள்தெரியாமல் சுகக்ஷேமம் (சொல்கிறேன்)

தென்மதுரைதனிலே உங்கள்குருவின்முன்பு
தீர்ப்புகள்செய்ததுமே தெரியாதா
சிறந்தசபையில்மாப்புக் கேட்டுச்செல்லவில்லையா
தீரரேபாடுகின்றீர் தான்சூதா
அன்புடனேபழனிக்குமார் சட்டாம்பிள்ளைநாமம்
அருமையுள்ள ஸாமிநாதன்முதல்
அண்டபுவனமதில் இராமஸாமியுங்கூட
ஆசானிடத்திற்பத்துக் குழந்தைகள்நல்

உத்தார்.

இன்பமுடன்தெருவி லெண்ணமுடியாது
இசைந்தபஜனை சரித்திரமும் நற்சாது
சொன்மிக்கணியைப்போலே எந்தனிடத்தினில்நீரும்
சூட்டாய்க்கேட்டீரே ஐயாசுகக்ஷேமம்.

## கேள்வி விருத்தம்.

தேசமதிலெண்பத்துநான்குலட்ச ஜீவபேதத்திற்குந்
திருவருளாலவர்களுக்கே இசைந்தபடியமுதளித்த
ஈசனுந்தானல்ல ஈசன்தன்னையிழிவாகப்பாடிநீரே
ஏழுமராமரத்தைஓர்கணையாலெய்தராமனையறியாது

ஆசையுடனீசனுக்குப் பிரணவமோதிவைத்த
அன்பர்கட்கன்பனான திருப்பழனிக்குமாரன்தன்னை
நேசமுடனனுதினமுந்தவறாமல் அர்ச்சித்தாலோநல்
நீணிலத்தில்சாயுக்ஷியபத மடைவீர்தான்மாதோ

## கேள்வி லாவணி.

சங்கம்புகழுங்களிச் சிங்கமெனப் பேர்பெற்ற
தனவானே சபைமுன்புவந்தீரே - எங்கள்
சாமிபழனிக்குமார் நேமியிடத்தில்வந்து
தருணத்திலகப்பட்டு நொந்தீரே
எண்பத்துநான்குலெட்ச ஜீவபேதத்திற்குள்ளே
எதுமுதல்ரண்டு மூன்றுநான்கு - இனி
இதுவன்றிவேறுவழி பதிலுரைத்திடவேண்டாம்
இன்னுஞ்சிலகேள்வி கேட்பேனிங்கு
முட்டையின்பெருமையை அட்டியில்லாமலே
மொழிந்திடவேணுமே இப்போது - அந்த
முட்டைக்குள்மஞ்சட்கரு வெள்ளைக்கருவுங்கூடி
முன்னமேசொல் மஞ்சாடிதப்பாது
பூலோகத்தினுடைய சுற்றுமெத்தனையம்பில்
புகலுவாய்விஸ்தார மதைக்கண்டு - இன்னும்
புண்ணியாகடல்விருக்ஷம் மலைகளெத்தனைஎன்று
போதித்திடுவாயே நீவிண்டு
துந்தனுஉயரமுந் தந்தியின்பெயருடன்
சொகுசுடன் விருடைநிகளமுமே - அங்கு
தூக்கியடிக்கும்டேப் ரவணகணக்கதைச்
சொல்லியேவேறுபாடு இக்ஷணமே

ஆசானும்பெரிதென்று நேசமுடனுரைத்தீர்
ஆகாபலேபேஸ் வெகுமுழக்கம் - உங்கள்
ஆசானுமேயெங்கள் திருப்பழனிக்குமாரின்
அங்கையிலகப்பட்ட வேலடக்கம்
தாங்கள்கேட்டகேள்விக்குச் சரியானஆன்சர்களுந்
தாழ்ந்துஉரைத்தேனே கேள்சிங்கம் - இனித்
தண்டுமுண்டன்றியிந்த மண்டலந்தன்னில்வேறு
தானேபாடுவீர் நல்தங்கம்
ஆராயிருந்தாலும் கேட்டகேள்விக்குவிடை
ஆன்சர்களுஞ் சொல்லவேணுமின்றே - இங்கு
அதட்டியேவாயினாற் பாடிக்கலகஞ்செய்தால்
அவைதனிற் பேடியுமாவார்நன்றே

## கேள்வி விருத்தம்.

சித்தசவேள் சிவன்கண்ணு லெரியானெனச் செப்பலாமா
சிவனைவந்து எப்போதுந் தூசணித்து உளறலாமா
பக்திதருங்கடவுள் தன்னை அனுதினமும் மறக்கலாமா
பாவமது உம்மைவிட்டு எந்நாளும் நீங்கிப்போமா
இத்தரையில்மன்மதனைத் தெய்வமென் றியம்பலாமா
என்னிடத்திற் செல்லாதகாசுதனைச் செலுத்தலாமா
வித்வகனவானேபொய்யதனை இதுதருணம்விரிக்கலாமா
வீணில்மதனெரியானென்றுல்வினைக்கருமம்வருநேமா

## கேள்வி லாவணி.

அந்தரங்கம் பல்ட்டிஉல்ட்டி என்ற மெட்டு.

நெஞ்சந்துணிந்தேசபையிற் கஞ்சம்போட்டுத்துஞ்சலன்றி
தஞ்சமென்றே ஒருகேள்வி கேட்டீர்கேட்டீர்-இந்த

நீணிலத்தில்ஆலிலைமேல் ராமர்பள்ளிகொண்டதையும்
யானுஞ்சொல்லுகிறேன் தமிழ்ப்பாட்டால்பாட்டால்

சங்கையிலங்கசன்கதை சிங்கமேபாடும்போதெல்லாம்
இங்குவந்தென்னையும்விடை கேட்ககேட்க-யான்

தாரணியிற்சீருடனு தாரணமாயானறிய
நேரினிலுரைப்பேன்யாவர் பார்க்கபார்க்க

ஆதியில்யுகப்பிரளய காலத்தில்விஷ்ணுவானவர்
அழிந்திடாமல்ஜலத்தின் மீதுமீது-அந்த

ஆலிலைமேல்சிசுவடிவ மாகத்துஞ்சினுரையா
அறிந்துகொள்ளுவாய் நல்லஸாதுஸாது

ஆலிலைமேற்பள்ளிகொண்டால் பூவிலைதாங்குமோவென்று
அருத்தந்தெரியாதவர் போலேபோலே-இனி

ஆயனுடசங்கதிகள் மாயனெனத்தெரியாதா
அவைபயிற்படித்திரென் முன்னாலேனாலே

பிண்டத்திற்புல்பூண்டுமுதல் நன்றுடனேதானழிந்து
போய்விட்டதுகனவானே முன்புமுன்பு-நல்ல

பிர்மாவுஞ்ஜெனனித்தது ராமர்உந்திக்கமலத்தில்
பேசுமறைவழியதை நம்புநம்பு

மற்றவஸ்துக்களென்பத்து நான்குலெட்சஜீவனெல்லாம்
மலரவன்சிருஷ்டித்தாரே கேளும்கேளும்-ஆதி

மாயன்பத்தவதாரமும் ஞாயமாயெடுத்ததையும்
வந்துகேட்டாலுமுரைப்பேன் நாளும் நாளும்

தாங்கள்கேட்டகேள்விக்கிது சரியானஆன்சர்தானு
சபையில்சரியெனவே சொல்லுஞ் சொல்லும்-வேத

சாஸ்திரங்கள் தவறினல் பூர்த்தியாயெந்தனே நீங்கள்
தரணியோர்பார்த்திடவே வெல்லும்வெல்லும்

பஞ்சலட்சணத்துடனே செஞ்சொல்மறையுணர்ந்தும்
அஞ்சிச்சலாஞ்செய்வதற்குத்தொண்டன் தொண்டன்

பாரதனிலேயெப்போதும் வீரசிம்மமென்றுவந்து
பாட்டுப்பாடுமுண்டர்கட்கு வண்டன் வண்டன்

கல்விக்களஞ்சியனைச் செல்வனென்றேபேரோங்கிடுங்
கடல்மடைதிறந்திட்டாற் போலே போலே-அக்

காமனெரிந்திடானென்ற பாமரர்களைஜெயித்துக்
கவிபாடும்வேதாந்தத்தி னலே னலே

தேங்கமழ் சோலைகள்சூழுந் தென்மதுரைத் தெற்குமாசித்
தெய்வேந்திரன் சிந்தில்வந்த யூகன் யூகன்

மாங்குயில்கூவிடும்பஜார் ஓங்கிடும் நல்லதெருவில்
வசிக்கும்பழனிக்குமார் யோகன் யோகன்

## பூலோகத்தின் சதுர்மயில்விஸ்தீரணச்சுத்தைக் கேட்டதற்கு சவால் சொன்ன அகவல் விருத்தம்.

அவனிதனில் மேலவர்கள் சங்கமதி லின்று
கவனமுடனிக்ஷணத்தில் தானே நன்று

ஆலோசனையாகவே தன்மனதில் யோசித்து நீரும்
பூலோகஉற்பவந்தன்னைக் கேட்டீர்வாரும்

அண்ணுவே எண்ணிறந்த அண்டங்களிலுங் காணக்
கண்ணுலே கண்டு புகழப்படாத தாயும்நாண

ஆனசர்வலோகங்களிலும் நாளுமையா
ஞானமுடனிறைந்துள்ள தாகவுமெய்யா

அருவாயும் உருவாயும் அருவுருவாயும்
தருணமதிற் பின்தேவராயு மனிதராயும்

ஆணாகியும் பெண்ணாகியும் அலியுமாகியும்பின்
காணாதவிலங்காகியும் ஊர்வனநடப்பன

அப்போதுநீர்வாழ்வன தாவரமுமாகியுமென
தப்பாமலிவையனைத்தும் அல்லனவாகியும்

ஆனந்தமயமாகவே நடத்தும்
மோனசர்வப்ரகாசனையவ்விடத்தில்

அருமையாய்மனோவாக்குக் கோசரனையேகமாக
இருக்கின்றான்கடவுளென்றசிவனும்அன்பாக

அதினின்றுதித்த மூலப்பிரகிருதிகளும்
நிதியானசத்துவரசோதமோதகுணங்களும்

ஆகாயம் வாய்வு அக்கினி அப்புபிரிதியா
வாகானபஞ்சபூதங்களும் ஞானேந்திரியங்களும்

அபானாதிபஞ்சவாய்வுக்களும்ஸ்தூலபஞ்சபூதந்தானே
சபாசெனஉண்டானமற்றசத்துவங்கள்யானொருவனே

அப்பூமண்டலம்பத்தொன்பது கோடிஎழுபதுலட்சம்
இப்போதுரைத்தேன் சதுர்மயில் விஸ்தீரணகச்சம்

அப்பனேஉள்ளதாயும் சம்புத்தீவுபிலக்ஷத்தீவு
செப்பினேன்சான்மலத்தீவு குசைத்தீவு

அய்யனேபுஷ்கரத்தீவு சாகத்தீவு
மெய்யனேகிரௌஞ்சத்தீவு மெனுமேழுதீவு

அதிற்பிரிக்கப்பட்ட உட்பிரிவுகள்
நீதியாய்உவர்நீர்க்கடல் கருப்பஞ்சாற்றுக்கடல்

அத்துடன்தேன்கடல் நெய்க்கடல்தயிர்க்கடல்
சுத்தமுள்ளபாற்கடல் நன்னீர்க்கடல்

ஆகசத்தசமுத்திரங்களால் சூழப்பட்டிருக்கிறது
ஏகயிவற்றுள்சம்புத்தீவு எத்தீவுக்கும்நடுவிலுள்ளது

அதின்நடுவிற்பொன்மயமான மேருபர்வதம்பூமியின்
பதினயிரம்யோசனைவேருன்றி எண்பத்திநான்காயிரம்

அதனுள்ளசிகரமுப்பத்தி ரண்டாயிரந்தூரம்
விதமான தியானத்தால் அகலமுடையதுவேஸ்திரம்

அம்மேருமலையானதுபூமியாகிய தாமரைமலருக்கும்
செம்மையாயோர்மொட்டுப் போல்விளங்கிருக்கும்

அன்றுமுதலின் றுவரை ஹிமாசலம் ஏமகூடம்நிஷதம்
தென்திசையில் நீலம் சிரிங்கி சுவேதம்

அவ்வடதிசையிலும் பாரதம்கிம்புருஷங்கண்டு
செவ்வையாய்ஹரிவருட மெனமூன் றுவருடமுண்டு

அறிந்தேதனைவ்வொன்றும்பதினயிரயோசனைவிஸ்தீரணம்
தெரிந்துகேள்கீழ்ப்பக்க மந்தரந்தெற்கில்கந்தமாதனம்

அம்மேற்கில்விபுலம்வடக்கில் சுபாசவம்எனநான்குபுறமும்
செம்மராய்ப்பருவதங்களும் அனேககிரிகளுமிருக்கும்

அச்சம்புவிருக்ஷமிரண்டாயிரயோசனையுயரமுள்ளததினல்
நிச்சயமாய்ப்பரதகண்டத்தை நாவலந்தீவெனப்பாண்டியரால்

ஆதியிற்சொல்லப்பட்டதுபின்பிர்மன்வலதுபுயத்திலுதித்த
நீதியாய்ச்சாம்புவனெனும் அரசனதுபுத்திரனய்ஜனித்த

அங்கததீரனலரசாளப்பட்ட ஜம்புத்தீவையவன்மகன்
மங்களமாய்ப்பரதனென்பவனண்டுவந்ததினல்சுகம்

அதனுடையநாமம் பரதகண்டமென்று சொல்லப்படுகிறது
பதினாயிரம்யோசனைமேருவி னுச்சிவிஸ்தீரணமானது
அஷ்டதிக்குப்பாலர்களின்லோகங்க ளிருக்கிறது
வெற்றியானசந்திரமண்டலம் பிரகாசித்திருக்கிறது
அரிபாதத்திலுண்டாகிய கங்கையானதுஅவ்விடத்தில்
சரியானசீதையென்றும் அலகந்தாவெனநலத்தில்
ஆனசுகச்சரசுஎன்றும் பத்ராவென்றுநான்குபுறமுண்டு
கானகத்திற் பூலோகசுவர்க்கமென அதற்குப்பெயருண்டு
ஐந்திலட்சணம்வாய்ந்த மீனாட்சிசுந்தரர்க்குச்சீஷன்
நயந்துயாவர்க்கும்அடியவனைவிளங்கும்ஞானப்ரகாசன்
அகம்பேசுவோர்க்குக்காலனைய் முண்டர்க்குவண்டன்
சகலகலையறிந்தபொருள்கட் குள்ளடங்குந்தொண்டன்
அதிமதுரதிருவாலவாய்க்ஷேத்திரத்தில் வசிக்குங்கண்டன்
பதியிற்சண்டமாருதக்கவி பொழியுஞ்சண்டப்ரசண்டன்
அருப்பமாய்ச்சபையிற் கேட்பவர்க்குத்திவால்
திருப்பழனிக்குமரர்பாதம் பணிந்துரைத்தேன்சவால்.

நூதன வர்ணமெட்டு.

## கேள்வி லாவணி.

அந்தமுடனிந்தச்சபை வந்துகந்தவேள்கதையை
இந்தநேரம் பாடும்போதுதானே-தாங்கள்
ஆலோசனைகளுஞ்செய்து பூலோகவிஸ்தாரச்சுத்தை
சாலூரமாகக்கேட்டீர் சீமானே
அந்தரமாயாளிருந்து புந்திதனிலேகினைந்து
பந்தியுடன்சொல்லுகிறேன் கேளும்-இதை

அருமையதாயறிந்து பெருமைவழிதெரிந்து
தருணத்திலான்சர் தாரும்நாளும்

நீந்தனையெண்ணுதுநீரும் எந்தக்ஷணம் வந்தபோதும்
சந்ததமும் ஆகமத்தைஎடுத்து-இனி

நேராகவுந்தன் கரத்திற் பூராகவேயானிப்போது
மாறுமற்பார்க்கும்படியே கொடுத்து

சிந்தித்தலாகவேயெண்ணி எந்திரமாய்நினைக்காமல்
மந்திரந்தந்திரமுஞ் செல்லாது-பல

சிந்துகள்பாடாமலிங்கு மந்தமாகவேயோர்சித்துச்
சந்தித்தல் செய்யவந்தா லாகாது

உத்தார்.

விந்தையாகவேகனவானேகதை வேடிக்கையாயினவானே
விடுத்தாயே தொடுத்தாயே

அந்தராயஞ்சந்தேகமாய் முந்திப்போட்டுப்பாடினுற்போ
லெந்தனையசைக்க வந்தீர்தானே-தாங்கள்

சங்கமதில்அகவலும் இங்குமேமுப்பத்தாறடி
உங்கள்முன்பு சாற்றினேனே அல்லவா-மீதஞ்

சாற்றுகிறேன்காத்திருந்து ஏற்றுக்கொள்வீர்மாற்றிடாமல்
நேர்த்தியான சவாலிது பலேபா

சங்கமதாயிங்கொன்றெண்ணி வங்கணமேநாமிப்போதே
தங்கமாய்ப் படித்திடுவோமின்று-நாளும்

தர்மஞ்செய்தோர்பூலோகத்தில் நற்சுகமனுபவிப்பார்
கர்மஞ்செய்தோ ரடையார்களென்று

துங்கமாய்க்கிம்புருசாதி மங்காமலெட்டுவருடம்
வங்கத்தில்வசிப்பவர்க்கு மெய்யா-கோபங்

துக்கம் ஆயாசந்துவேசஞ் சிக்கம்பசிநரகமுந்
தக்கபயஞ்சோம்ப லிரா தையயா

சிங்கலன் றிவசிப்போர்கள் அங்குநவரத்தினங்கள்
பங்கமன்றிவிளைந்திடும் ஆனதால்-வெகு

சீக்கிரமதைப்பரித்து நோக்கியேகாலக்ஷேமங்கள்
போக்கியேகொண்டு வாழ்வார்களாதலால்

உத்தார்.

வங்கையரே அறியாதாலே யான்
வழுத்துகிறேனுங்கள் முன்னாலே
வழியாகத் - தெளிவாக

அங்கமற்றகவிகளால் சிங்கம்பெரிதென்றதைப்போல்
எங்களெதிர் செப்பிடாதீர்தானே தாங்கள்

திட்டமாய்த்தெக்ஷணத்தினுள் பட்டணம்பாரதவருடம்
இஷ்டமாகவே ஒன்பதினாயிரம்-அந்தத்

தேசம்விஸ்தாரமதையே நேசநவகண்டங்களாய்
வாசமாகப்பிரித்த துவே ஸ்திரம்

கட்டுவாகயிந்திரத்னந் தெட்டுகத்தாம்பிரபரணம்
வட்டுகமஸ்திமான் நாகதீபம்-சுகா

கந்தர்வம்சௌமியத்திபம் விந்தையாகவருணம்
அந்தித்தலாக இருக்குலாபம்

புட்டமாகவொன்பதான மட்டும்பரதகண்டம்
பட்டுவாயானது அதின்சிலாக்யம்-நல்ல

பூமியில்சமுத்திரத்தால் க்ஷேமமாகச் சூழப்பட்டு
க்ஷேமமாய்வடக்கில்தெற்கில் யோக்யம்

பெட்டனுடனே ஆபிரஞ் சட்டமாயோசனையது
கஷ்டமன்றியே விஸ்தாரமுள்ளது அதின்
பின்கீழ்ப்புறங்கிராதகர்மம் அன்பாகவேமேல்புறத்தில்
நன்மையாயவர்களுமே நல்லது

உத்தார்.

மட்டில்லாத்தெற்கில் ஆந்திரரும் கிறிஸ்து
வடக்கிலிருக்கின்ருர்களிவரும்
மத்தியதனிற் சுத்தமாக
அட்டியன்றியேமுப்பது இஷ்டமாய்வகைஎதேஷ்டமாய்
இருக்குதங்குதானே தாங்கள்

## அகவல் விருத்தம்.

ஆதியில்பிராமண க்ஷத்திரியர் வைசியர்கள்
நீதியாய் சூத்திரரெனும் நான்குவருணத்தார்கள்
ஆமஸமாய்வசிக்கின்ருர் விந்திய கோதாபுரி
பீமநதிதாம்பரபரணி கிருஷ்ணு காவேரி
அப்புண்ணியதீர்த்தமாடி மோட்சமடைகின்ருர்திடம்
செப்பியே ஏழாவதுதீவாகிய புஷ்கரந்தாசிகண்டம்
ஆசையுடன்மகாவீதம் நியக்ரோதம் தேவரசுரர்களால்
பூஜிக்கப்பட்டவராய்ப் பிர்மதேவர் எழுந்தருளினர்
அதுசுத்த நீர்க்கடலால் சூழப்பட்டிருக்கும்
இதுசமுத்திரங்களால் ஆலோசனை பண்ணச்சிறக்கும்
ஆகசப்ததீவுகளால் கடல்ஜலங்களில் சந்திரனது
ஏகவிர்த்தியாகையால் அவன்குறைபிற்குறைந்து
ஆழிலுள்ளவடவாமுகா அக்கினிஜலம் பருகிவிடும்
மாழைசுதநீர்க் கடலுக்கப்புறம்போம் உலகங்களும்

அங்குபிராணிகளுமில்லை பொன்னிறமான பூமியானது
பங்கமில்லாததற்குச் சரிவிரிவாக ஆயிரயோசனையிது

அவ்விடத்திற்கப்புறம் அண்டச்சுவருள்ளது
செவ்வையாயது வரைதான் ஜெகமிருக்கின்றது

ஐம்பதுகோடியோசனை விஸ்தீரணம்
நம்புவாயிந்த சப்ததீவுகளுஞ்சேர்ந்து உதாரணம்

அதுவேயெல்லாப்பிராணிகளுக்கும் ஆதாரமாகும்
ததியிற்காரணமாக விளங்கிடும் ஞாயமாகும்

அகிலமதில்தாங்கள் கேட்டகேள்விக்கின்று
விகிதமுடன் கவனிப்பாய்ச் சபையில்நன்று

அறிந்துகொண்டு கவனமாகயானும்
தெரிந்துரைத்தேன் யோசித்துத்தானும்

அருமையாய்க் கேள்விஒன்று கேட்குகின்றேன்
பெருமையுடன் தெரிவிப்பாய் நீயும்நின்றே

அதுதவிர வேறுவழி பாடாமல்ஐயா
ததியிற்சபையோர்கள் கேட்கவே மெய்யா

அம்மாய்கையின்உற்பவ மெந்தநாளது
நன்மையார்வயிற்றில் ஜெனித்தது

அதற்குமுன்உதித்ததாரு அவாள்தந்தைபேரும்
கெதியாகச்செப்பிடுவீர் பதில்நீரும்

அங்கசனதற்குமுன்னுபின்னு பிர்மத்தின்ருபமென்னு
இங்குமீள்வாயிபபோ... ணுபெண்ணு

ஆகையாலதின்முன்னிருந்ததெது ஜெனனிததநாளும்
வேகமுடனுரைப்பாய் நீளமுயரம்வாலும்

அடவுடன்வாலுண்டு மனிதர்போல் சிரசுமுண்டு
உடலில்லைகரமுண்டுகாலில்லைகைசைகையாற்பேசுவார்கண்டு

## லாவணி.

சண்டத்திற்கேட்டகேள்விக்குப் பண்டுபேசிடாமலின்று
விண்டுவிண்டு உரைத்திடும் அண்ணு வேறு

சங்கையொன்றுபேசவேண்டாம் மங்களமாகஇப்போது
சிங்கக்கொடி நாட்டவந்தீர்மன்னு

வண்டர்களேடேப்பின்சுத்துந் தண்டிகளேகணக்கென்ன
கண்டதனையும் புகழ்வாய்சரியாய் கரம்

வாங்கிமீட்டுந்துந்தனுவின் பாங்குடனுயரமென்னு
ஈங்குவந்தென்முன்பாக நீதெரிவாய்

அண்டத்திற்சந்திரர்துலங்க தண்டோராஎங்குமமுழங்க
கண்டஞ்செய்தோர்கள்தன் பதிகலங்க மிக

அஞ்சாதகல்விப்ரசங்கம் தஞ்சமென்றோர்கட்குப்பங்கம்
மிஞ்சிவராதபடியே இலங்க

மண்டலந்தனிலேஎன்றுஞ் சண்டமாருதக்கவிகள்
கொண்டுபொழியும் ஞானப்ரகாசன் வேத

மறைவழியுமுணர்ந்த நிறைதவருத செல்வன்
வரைந்தேன்பழனிக்குமார் நேசன்

உத்தரா.

கண்டுதுந்தனுடேப்பை எடுத்து - இங்கு
கரத்தினு ...ப்பதைக் கொடுத்து
கணக்காக இணக்கமாக

அண்டர்களேஎந்தன்முன்பு தண்டுமுண்டாகவே பாடி
அண்டையிற்பாடிடாதே நீர்தானே தாங்கள்

## கேள்வி லாவணி.

சகலவேதாந்த சித்தாந்த சமரசத்தின் என்ற மெட்டு.

வேதாந்தத்தமிழ்க்கடல் தனைக்குடித்தேப்பமிட்ட
வித்வானேநீர்வாரும் வந்துஉட்காரும் லாவணிபாரும்
விளம்பியேஎன் கேள்விக்குவிடைதாரும்

ஆதாரமானசற்குருவினுட சன்னதியானவிடமுமெங்கே
சாகாக்காலெங்கே வேகாச்சிரசெங்கே
முப்பொருளும்ஓர் பொருளானதுமெங்கே

நாதாந்தகமலமாயிரத்தெட்டிதழும் நாடியமுனைஎங்கே
உருவமெங்கே முகமுமெங்கே
நாலுகையொரு பாதமானதுமெங்கே

ஏதாகிலுமிதற்குக்குறைவில்லாம லுரைப்பீரித்ததினில்
இங்கே ஆகாயமெங்கே உயரமெங்கே
அவ்விடந்தனி லிடித்த சப்தமுமெங்கே

உத்தார்.

தோதாகவேயுரைப்பீரிங்கே நன்றாய்ச்
சொல்வீர்கணக்கினுடசங்கை வேதாந்த

நகைபிறந்தவிடமுங் கோபமுமேயந்நாளில்
நகரமேழானதெங்கே நக்ஷத்திரமெங்கே-இக்ஷணமிங்கே
நன்றாகவே நவிலுவீரிது சங்கை

திகைத்துமறந்தவிடமெங்கே நினைவுமெங்கேதீராக்குறையு
மெங்கே ஞானக்கண்ணெங்கே ஆனதுமெங்கே
ஞானவழியாலுரைத்திடுவீ ரிங்கே

பகைத்தவிடமுமெங்கே ஒழுக்கமுமெங்கே நாளும்பரா
சத்தியாளதெங்கே வேதமுமெங்கே புராணமெங்கே
பதினன்குலோகமானதுஞ் சொல்லிங்கே

அகமதுமகிழவேசத்திசிவனும் பிரியாதவிடமுமெங்கே
ஓங்காரமெங்கே முக்கோணமெங்கே
பூமியையாதிசேடன் சுமந்ததெங்கே

உத்தார்.

ஜெகமதில்தெரியவே நில்லும் ஆதி
சேடனுக்காதாரம் புல்லும்
விகசிதமுடன்யாங் கேட்டகேள்விக்குப்-பயன்
வித்வானேநீர் சொல்லும்

இருள்பிறந்தவிடமுமெது வொடுக்கமுமெதுஇப்போ
துரையுமுன்னல் சந்தோஷமின்னுள்-மந்திரமென்ன
இரண்டுதிருச்சங்கு நிறைந்ததென்ன

அருள்பிறந்துபாடியேநின்ற விடமதனில்-அறுத்தடைத்த
வாசலொன்று கண்டதுமொன்று நன்றுடனின்று
ஆனந்தமாகச்சொல்வீர் முயன்று

திருபிறந்தவிடமும் எழுகிணறுனதுவும்-செப்பிடுவீர்
நாளும் பொறுத்தெக்காலும் இசையாய்மேலும்
திருக்கிணற்றை இறக்கியேத்த மீளும்

அருக்கண்மதியில்வட்ட மிருப்பதும்அளவென்ன
அருத்தமுடனேஓது வீர்களிப்போது, இப்புவிமீது
அகலமொடுநிகளங்கண்டுரை சாது

உத்தார்

தருணத்தில்தனவானே சீராய்-தமிழ்
சாற்றிடுவீர்சபை நேராய்
விருதுபெற்றவரே பெருமையுடனேபாடி (வித்வானே)

சிங்கந்தங்கைக்குநரி மங்கிலியம்தரித்த-சேதிதனைக்
கண்டு எந்தனுக்கின்று உரைப்பீர்நின்று
தெளிந்தவரே செப்பிடுவீர் விண்டு

சிங்கந்தனைச்சரபம் பங்கப்படவேயடித்துஎப்பமிட்டதைப்
போலே எவாக்குமமுன்னாலே புவியின்மேலே
சபையோர்கள்கேட்கத் தெளியச்சொல்லிப்பாலே

மங்களமாகவேநன்றாய்ப் பழனிக்கு-மாருதமிழைப்
பாடி அருந்தந்தேடி கேட்டேனேநாடி
மனமகிழ்ந்து-வகுத்துரைகொண் டாடி

இங்கிதமாய்ச்சபையிலுந்தனையும் யான்கேள்வி-இப்போது
கேட்டேனென்று மனஸ்தாபமொன்று கொள்ளாம
லின்று - தயவுடனியற்றிடவேணும் நன்று

உத்தார்.

சங்கத்தாரொப்பிடத் தானே-சவால்
தருவீரிக்ஷணம்புண்ய வானே
இந்துவேறுலாவணி எங்கள்முன்பாடாதே (வித்வானே)

## கேள்வி லாவணி.

பஞ்சலட்சணத்தி லொரு பங்குவாங்கிக் கோண்ட
என்ற மெட்டு.

பஞ்சலட்சணமுங்கற்ற அஞ்சாதகல்விச்சிங்கமே
வாருங்காண் யான் பகருங்கேள்விக்குவிடைதாருங்காண்

செஞ்சொல்ஆகமத்தின்வழி திறமையுடனெடுத்துச்
செப்புங்காண்-நன்ருய்த் தெளிவுடன்சொன்னதையேஒப்புங்காண்

உத்தார்.

மிஞ்சியேசிங்கமென்றீரே என்றீரே-சவால்
வேதாந்தவழியுரைப்பீரே சபைநேரே
பஞ்சாங்கம் பாரதங்களை அஞ்சிடாமற்பார்த்தசிங்கம்வாருங்காண்
பேர்பெற்றஇரணியனரசாட்சி செய்யுங்காலமதுமேலே
பாலன்பிரகலாதனுக்கு முன்னாலே
யார்சினந்துநரசிம்மமாக வந்திரணியாசூரனையே
அதம்செய்தது புகலுவீரினியே

## அகவல் விருத்தம்.

அப்பனேராமாவதாரம் எப்போதெடுத்ததுசாரம்
அறிந்துநீர்சொல்வீர்தானே தெரிந்ததுவரைசீமானே
ஆதிசிவன்விஷ்ணுவுக்காரு நீதியுடன்எடுத்ததுகூறு
மூவருக்கும்முதல்வனாரு பூவிலவனுக்கென்னபேரு
ஆதிமூலம்என்றநாமம் ஏதெவனுக்கேற்றநேமம்
ஆகமம்பார்க்காமலேநீரும் வேகமாய்வந்தீரிங்கேவாரும்
மண்டலமெங்கும்புகழும் தண்டராஅடித்தமலர்வாசன்
சுக-மன்னன் பழனிக்குமார்நேசன்
கண்டவர்பதிகலங்க அண்டபகிரெண்டக்கொடிநாட்டி
மிகக்-கருத்துடன் கெண்டாமணிகுட்டி

உத்தார்.

தண்டமிழினைநாளும் வாழ்த்தி நாளும்வாழ்த்தி-குரு
சன்னிதிபாதமதைப்போற்றி யானும்போற்றி
பண்டகத்திலேசிறந்த அஞ்சிடாக்கல்விச்சிங்கமே வாருங்காண்

## கொட்டக்கழிக்குச் சவால் அகவல் விருத்தம்.

பாவலரேவாருமையா மாவுலகிலுட்காருமையா
பதருதீர்கவிவல்லோரே அதட்டியேகைவீசாதீர்நேரே
பாரதனிற்பெயர்பெற்றசிங்கம் வீரரைப்போல்வெற்றியானதங்கம்
பலேபாதரென்றுமதித்தேன் சிலேடைபோற்கேள்விவிதித்தேன்
பஷ்டாய்க்கேட்டீர்திருத்தம் நட்டகாமனுக்கருத்தம்
பகர்கொட்டக்கழியஸ்திபாரம் வகுத்தேன்வலாரதுசரீரம்
பக்குவமாய்க்கேளுமின்று வைக்கல்பிரிநரம்பென்று
பார்குலாலதுவேயிரத்தம் டால்கொடியானசுத்தம்
பஷ்டானகொட்டைமுட்டை எலும்புத்துண்டு
முட்டுப்பலகைசித்தர்வீடுபண்டு
பசுந்துகேள்மானதன்மகனும் ருசிகொடுக்கும்மன்மதனும்
பரமன்கண்ணாலெரிந்ததுண்டு ரதியாள்மனங்கலங்கிநின்று
பரதவித்துச்சிவனிடத்தில் அரகராவென அட்சணத்தில்
பங்கமில்லாப்புவிமீது சங்கரனெழுப்பும்போது
பாடினீர்விஷ்ணுகலையேது நாடியேஎனக்கிங்கோது
படைமதன் தூலஞ்சென்றதாலே விடைபெற்றுலிங்கமாகமேலே
பாங்காயனங்கனுக்கங்கே தேங்காய்பழமொச்சையிங்கே
பார்முன்னேரொழுங்குமீதே ஏற்பட்டதைப்பழிக்காதே
பாரினில்நட்டகாமன் நேரினில்எட்டுச்சாணும்
பதினாறும்நாள்போஸ்து ததியாற்சொன்னேன்சேர்த்து
பகர்ந்ததைஅறிந்துகொள்ளும் சுகமுடன்கேட்டுநில்லும்
பழமொழிவேதாந்தபோதம் கலக்கமில்லாஅத்வீதம்
பாட்டினாலுரைத்தேனீரும் கேட்டறிந்திடுவீர்பாரும்
பஞ்சங்களைரட்சித்தகர்த்தன் ரஞ்சிதமீனாட்சிசுந்தரமுத்தன்
பதியதனிற்கேளுமுசார் மதுரைநகர்தென்மாசிபஜார்
பண்பாய்வாசவன்வம்ஸம் அன்புள்ளராஜஅம்ஸம்

பட்சமுடனெவர்க்குஞ்சிறந்த லட்சுமணன் தவத்தில்வந்த
பைந்தமிழறிந்தவாசன் சந்ததம்அடியர்க்குநேசன்
பதினெட்டுவாத்யமுழங்க நிதியாகயாவர்துலங்க
பக்தியில்அனைவருங்கேட்கவெற்றிபெறுசபையோர்பார்க்க
பகர்ந்தேன்சிறுபாலனின்று சுகமாகக்கண்டுகொள்நன்று
பாருமையாசவிஸ்தாரம் கூறுகின்றேனிந்நேரம்

## சவால் லாவணி.

பிறந்துஜெனனமெடுத்தெண்சாணுடலில்விடை
பேசுகின்றேன் பெருநூலில் ஆன்சர் ஆன்சர்

பேசாதிரதட்டிநீரும் சரீரம்மோர்தேர்போல்நேரும்
பேரின்பச்சபையிற்சொன்னேன் நேசர் நேசர்

மறந்திடாமற்கேளுங்கள் மாரன்கரத்திற்பிடித்த
மாகன்னல்வில்லதைப்பிசகென்றீர் என்றீர்

மாதர்மேலிச்சையானது பேய்க்கரும்புவில்லென்றேனே
மானிடர்துற்புத்திநாணி வண்டு வண்டு

சிங்காரவேள்மாரனெய்த பஞ்சபாணஞ்சிவன்மேலே
சென்றிடவேமாட்டாதையா சிங்கம் சிங்கம்

தியங்குறீர்புஷ்பபாணம் அயப்பில்லாப்பஞ்சபூதம்
ஸ்திரீகாயாப்பெண்படைபோற்றுந் தங்கம் தங்கம்

மங்களமாயிரவினில் குயில்கூவாதென்றுரைத்தீர்
மாவல்லோரே இதுமென்ன பித்தம் பித்தம்

மதிபெற்றமன்னரேநீர் செவியுற்றுக்கேட்டிடுவீர்
மாஞ்சோலைதன்னிற்குயில் சத்தம் சத்தம்

அம்மாவாசைதனில்நிலா இல்லையென்றால்சந்திரக்குடை
அனங்கனுக்கேதென்றீரே விண்டு விண்டு

அறிவேகுடையாகுமே தெரியாமற்பேசவந்தீர்
ஆகாஇஃதென்னபுத்தி பண்டு பண்டு

## அகவல் விருத்தம்.

மச்சக்கொடிவைத்தால்கோனே நிச்சயமாயழியுந்தானே
மானிடரேமகரம்நேத்ரமாகும் ஞானிகளே அறிவீர்யூகம்
வந்துகவிமுழங்குதுநன்றே கந்தருப்பனெரிந்தானென்றே
வாதுகள்பேசாதீரெணநாடி காதைஇருகரத்தால்மூடி

## லாவணி.

அப்போதுசெவியைப்பார்த்தால் கடல்முரசென்றசங்கை
ஆராய்ந்துகேளோசைதருங் குணம் குணம்

அவனுக்குக்கிளி பொருந்ாதென்றீரே முன்தந்தது
அழகுக்குத்தகுந்தவா கனம் கனம்

நரம்புகொடுமில்லாறு ஞானவெட்டிநவிலுதே
நன்றுமெருமுட்டைதசை நேரு நேரு

டிச்சட்டமுனிஎடுத்திருக்கின்றார்கொட்டக்கழி
நாவினலுரைத்தேன் அஸ்தி பாரும் பாரும்

வன்னியதுநெருப்பாகும் பேய்க்கரும்புவைக்கல்பிரி
வகுத்திட்டேன்கேளும்ரோமம் ஐயா ஐயா

வழுத்தினேன் காமமேடை அத்வீதத்தினலேநன்ருய்
மாவுலகுதனிற்சொன்னேன் மெய்யா மெய்யா

பாரும்மூலாதாரப் பீடமதிற் சிவனெரித்தது
பாவலரே புலால்ரத்த மென்று என்று

பாம்பாட்டிச்சித்தருஞ்சொன்ன பாடலையறிந்துநீரும்
பாராமலேபேசவந்தீர் இன்றுஇன்று

## அகவல் விருத்தம்.

பக்தியுடன்இராமதேவர் முத்திகாண்டத்துநேரில்
பக்தனேபாரிந்தஆண்டில் இரத்தம்ஜலமலமூன்றில்
பகலிரவிரண்டுபோனல் சுகமுடையபங்கொன்ருனல்
பங்குஉதிரம்ஒன்று தங்குமதிலேழுபிரிவுமுண்டு
பாருலகிலந்தப்பங்காறுதுண்டு தேருமஸ்திரோமமிதுகள்சென்று
பட்சமுடனுரைத்தேனிங்கு மிச்சங்கேளொருபங்கு
பார்உச்சிநடுமத்தியிலே நேர்வைத்ததென்ன அமிர்தகலை
பலனூலாராய்ந்துரைத்தேன் கலையுணர்ந்தோரெனமதித்தேன்

## லாவணி.

ஜெகதலமும்புகழும் மதுரைநகராண்டிடும்
தேவன்மீனட்சிசுந்தரர் பாதம்பாதம்

சித்தத்தில்மறவாமல் சுத்தமாயர்ச்சனைசெய்
சிறியன்பழனிக்குமார் நீதம்நீதம்

மகிமையுடனே நன்றாய் மகரக்கொடியதனை
வந்துமாரன் மேடையில் நாட்டிநாட்டி
மாசபையோரைப்பூஜித்து வந்தானந்தத்துடனினி
மங்காதகெண்டாமணி சூட்டிசூட்டி

## மன்மதன் பிறந்த அகவல் விருத்தம்.

மாவுலகிற்கீர்த்தியுளசிங்கம் பாவலராய்வந்தொத்ததங்கம்
மானிடரேஇச்சங்கமதில் ஞானிகளேஎன்னிடத்தில்
மகாவல்லபத்துடனே விகாதமன்றிநலத்துடனே
மன்மதன்ஜெனனித்தமார்க்கம் தன்மையாய்க்கேட்டீர்சிலாக்யம்
வகுத்துரைப்பேன்சபையோர்கேட்க மகத்துவமுள்ளோர்பார்க்க
மன்மதவருடம்ஆதி நன்மையாய்க்கேளும்நீதி
வருடம்பொருளறிவீராகத் தெரிவித்தேன்பாரன்பாக
அழகுமன்மதவருடமொக்கும் எழில்மிகவாய்ச்சிறக்கும்
அன்னதோர்ஆண்டில்மாசி சொன்னதோர்அம்மாவாசி
அதற்குப்பின்மூன்றுநாளில்விதமாய்ஜன்மித்தபிறவிகேளீர்
மாரவேளுதித்தநாளே பூரணமாய்ச்சொல்வேன்மேலே
மூதனுக்கிமையாம்வாகனம் இதந்தரும்ஆலாவிருக்ஷம்
ஆண்டிடுமாரோக்யபுரம் ஈன்றதுதெற்குவாசல்திரம்
அன்றுநலங்கயற்றிமாதர் நன்றுநாள்மதம்ராஜிசிம்மம்
வருக்கனாளுரையுள்ளோருதித்து பிரியமாயறிந்துகொள்கவனித்து
ஆன்சர்கள்கேட்டீரிப்போதே யானுரைத்தேன்சபையின்மீதே

## மன்மதன்பிறந்த லாவணி

பரம்பொருளேஎ ஓம்விநாயகா என்ற மெட்டு.

### லாவணி.

ஜெகதலம்புகழ்கவிச்சிங்கமே சங்கமதில்
தெளிவாகஎன்னிடத்தில் நீரும்நீரும்
சித்தசன்வரலாற்றை இத்ததியிற்கேட்டீரே
செப்புகிறேனிதோ தேரும்தேரும்
சுகமுடனேபிர்மகிரணச்சித்திற் சிற்சித்தி
தோன்றிநன்ருயுண்டா ஐயாஐயா
தெளிந்தமாய்கையில்மாரன் பிறந்தானெனவேதேவர்
சுத்தமாய்மூவரருளால் மெய்யாமெய்யா
சகலஎண்பத்துநான்கு லக்ஷஜீவர்ஜெனித்தார்
தார்மீகவனம்வாழு மாரன்மாரன்
தானேஅவன்பிறந்தது எந்தவருடமெனவே
சாற்றக்கேட்டீரேநானுந் தீரன்தீரன்
மிகவுஞ்சனகாதியர்க் காகவீசனுமன்றே
மேருகிரிக்கருகா மயில்மயில்
மோகவனமீதிருந்து யோகம்புரிந்ததினை
முன்பாகமேகமண்டலந் தனில்தனில்

உத்தார்.

மகிமையாயமரர்க்கு உகந்துமேயாவராலே
மதிகுடையையணிந்தோனெவனோஅவனேமேலே

புகழ்ந்து அமரேசனும் நாடியழைக்குங்காலே
போற்றியோடியேபின்னால்மாரனும்வந்ததாலே
அரனிடத்தனுப்பினர் கேளும்கேளும் (சித்தசன்)

மாரவேளுஞ்சிவன்மேல் மலர்க்கணைதொடுத்ததால்
மாண்டுமேசாம்பலானன் வாடிவாடி
வாகுடன்திரிபுரமெ ரித்தவன்தன்மீதினில்
மதன்சொரிந்தெரிந்ததை நாடிநாடி
சீருடனேதான்கண்டு சங்கைசொன்னேனிப்போது
திரேதாயுகந்தனிலே கேளும்கேளும்
சித்தசனெரிந்தது எந்தவருடமென்று
சீக்கிரமெனைக்கேட்டீர் நாளும்நாளும்
பாருமன்மதஆண்டில் காமதகனமென்று
பக்ஷமுடனுரைத்தேன் ஜெயம்ஜெயம்
தாரணியில்மதவே ளெரிந்ததுமாசியெனச்
சாற்றுவார்கற்றுணர்ந்த பேர்கள்பேர்கள்
சங்கத்தார்கட்குஒப்பும் படியாகயானுமின்று
சாற்றினேன்சரியாய்நிதி யோர்கள்யோர்கள்

உத்தார்.

மாரவேளெரிந்தது வெள்ளியங்கிரியிலே
மங்கைரதியின்மனங் கலங்கியழுதுமேலே
பூரணமாகஈசனிடம் முறையிட்டதாலே
பூவையும்புருடனைவேண்டிக்கேட்டதினாலே
தேருதல்சொல்லிச்சிவன் பாரும்பாரும் (சித்தசன்)

பாவைரதிக்குமட்டும் முன்போன்றுருபியாகப்
படைமதனையெழுப்பித் தந்தார்தந்தார்

பட்சமுடனேகேட்ட சனகாதியர்க்காயோகம்
பாங்காய்க்காட்டின விடமிந்தாஇந்தா

ஆவலுடனேசொன்ன அருணாசலப்புராணம்
அண்ணுதிருவவதாரச் சர்க்கம்சர்க்கம்

ஆதிசிவனும்யோகஞ் செய்கையிற்உலகுள்ளோர்
அனைவர்மூச்சொடுங்கினர்சுருக்கம்சுருக்கம்

தேவர்கள்மற்றுமுள்ளோர் எழுந்தழைத்தகாரணஞ்
செய்தியதனைக்கேட்டீர் ஞாயம்ஞாயம்

சிவனார்தவமிருந்தால் வானவர்தம்செயல்
சீக்கிரங்குறைந்திடும் மாயம்மாயம்

மாவுலகினிலொரு ஆகமஞ்சொன்னதினால்
மாகனவானேகேட்டு இன்றுஇன்று

வாசிட்டம்பாகவதம் அங்கநூலையெடுத்து
வழுத்துகின்றேனிதோ நன்றுநன்று

உத்தார்.

நாவினாலுரைக்கிறேன் திருமாலுங்காக்கலாகும்
நன்றாகவேபிரம ணலேகற்பிக்கலாகும்
பாவலரேயெத்தையும் அழிக்கருத்ரனாலாகும்
படைமதனால்கெற்ப முண்டாகச்செய்யலாகும்
ஜீவகாருண்யரே நீரும்நீரும் (சித்தசன்)

சிங்கத்தைச்சரபந்தான் வெல்லுதல்தெரியாதா
சீக்கிரமிதற்குநீர் சொல்லும்சொல்லும்

சிவனையிழிவாய்ச்சொன்ன லவர்க்குக்கருமம்வரும்
தீரர்களே அப்புறஞ் செல்லும்செல்லும்

மங்களமாகவே யுகமும்வருடமதும்
மதனெரிந்தமாதமும் சொன்னேன்சொன்னேன்

மாதுரதியும்ஆதி சிவனிடமுறையிட்டு
மதனை எழுப்பினதும் பின்னேபின்னே

சிங்கமேவேள்மாரன் ஜெனனித்ததுமுரைத்தேன்
ஜெகம்படைத்த செயலுங்கேட்டுகேட்டு

சிவன்நிஷ்டைகலைந்துபின் மேருகிரிசென்றதும்
சிந்தையடக்கினதும் நாட்டுநாட்டு

தங்கள்மனந்திருப்தி யாகஆதியந்தமாய்ச்
சாற்றினேனிந்தக்ஷணம் நன்றாய்நன்றாய்

சாஸ்திரம்வேதாகம புராணங்கலைக்யானமும்
தானேயறிந்துகொள்வீ ரின்றேஇன்றே

உத்தார்.

எங்கேயந்தச்சுருதி எடுத்துநீகாட்டு
இந்தட்சணமதனை நெருப்பதிற்போட்டு
சங்கத்தோரறியவே சோதிப்போங்கேட்டு
தற்கஞ்செய்யாமலினிச் சார்வாயென்கூட்டு
சங்கைகளதுங்கெள்ளாதீர் நீரும்நீரும் (சித்தசன்)

பஞ்சவர்ணக்கிள்ளைகள் கொஞ்சுங்குயில்மயில்கிரே
பாஸ்லோட்டன்லக்கா மகிழ்ந்தாடஆட

பத்திபத்தியாய்த்தென்னை கொலுமிச்சைகதலிமா
பலாநெல்லிமாதுளை யுங் கூடகூட

பஞ்சங்களைத்தாங்கி அஞ்சாதுபூலோகத்தைப்
பாதுகாத்திடும்ஜெக நீசன்ஈசன்

பரமனென்றமீனாட்சி சுந்தரேஸ்பரரையும்
பணிந்துஅர்ச்சனை செய்யும்நேசன்நேசன்

மஞ்சுவாய்த்தெற்குமாசித் தேரோடும்வீதிபஜார்
வாசவன்குலமதில் வாழும்வாழும்

மறைவழியறிந்தநற் பெரியோர்களைவணங்கும்
மறவர்களில்தோன்றி நாளும்நாளும்

செஞ்சொல்மதுரக்கவி ரஞ்சிதமாகத்தமிழ்
செப்பும்பழனிக்குமார் வாக்குவாக்கு

தின்னத்தெவிட்டிடாதக் கன்னல்ரஸமதுரத்
தேனமுதக்கற்கண்டு நோக்குநோக்கு

உத்தார்.

நஞ்சுண்டோனைப்போற்றிடுங் கல்விக்களஞ்சியமே
நற்றமிழைப்பாடிடும் நற்குணரஞ்சிதமே
அஞ்சிடாமுத்தமிழும் அழகாயமைத்திடுமே
ஆதிசேடன்பிர்மாவும் அதிகசபாஸ்நயமே
செஞ்சுடரைப்பணிவீர் நீரும்நீரும் (சித்தசன்)

## கேள்வி விருத்தம்.

சீராருஞ்சித்தாந்த திவ்யரஸத் தமிழ்க்கடலை
ஜெகமதனில்திரட்டி நன்ருய்ச் சிறப்புடனே
பேராருங்கரத்தில்வைத்துக் கசக்கிச்சாருய்ப்
பிரபல்யக்கொடிநாட்டி எங்குந்தானும்
தாராரும்உலகறியப் புசித்தேஅன்று
தவம்புரியும்பெரி யோர்க்குமுத்திதந்த
காராரும்ரிஷபவாகன மீதேறுந்திருக்
கர்த்தன்மீனுட்சிசுந்தரர் பதஞ்சேர்மாதோ

## கேள்வி லாவணி.

தாரணிதனிலேவேள் மாரன்கதைதன்னைப்பாடிச்
சங்கமதில்வந்த புலவோரேநீரே

காரணமதாகஉங்கள் வடிவதைப்போல்நானெங்குங்
கண்டதில்லையே சபையில்நேரேநேரே

சூரியர்சந்திரர்களை அறிந்தவர்போலநீங்கள்
தொல்லுலகிலனேகங்கள் பேசிபேசி
சுத்தவீரத்தனமாய்க்கை வீசிவீசி

மன்மதனுக்கைந்துகணை மகரக்கொடியுங்கிளி
வாகனந்தென்றல்தேர்வந்த தேது ஏது

மின்மதிக்குடையுங்கடல் முரசம்பெண்கள்படையும்
வேளுக்குக்கொடுத்தாரோ ஓது ஓது

## கேள்வி விருத்தம்.

அந்தமதன்பிர்மமென்றும் தன்னுக்குள்ளே
ஆறுவீடிருக்குதென்றும் அதிலிருக்கும்
விந்தையுள்ளகடவுளடி போற்றிடாமல்
வீண்கல்லைக்கும்பிடுதல் நலமோவென்றீர்
முந்தஉள்ளசிலபாட்டைப் படித்துக்கொண்டு
மூன்றுகாலமுந் தெரிந்த ஞானிபோல
எந்தன்முன்பு பாடவந்த கல்விராயா
எடுத்துரைப்பேன் மொழியாமினிக்கேள்மாதோ

## லாவணி.

மண்டலத்திற்கொண்டுயருத் தண்டமிழ்சண்டமாருதம்
விண்டுமொழி என்டிச் சரைக்கண்டால்கண்டால்

மார்க்கமல்ல ஏற்கையின்றி மூர்க்கர்களே தீர்க்கமதாய்
நோக்கிடுவீர்வந்தவழி சென்டாசென்டா

அந்தர்பந்தர்பஸ்கிசாண்டோ விந்தையாம்தஸ்திகுஸ்திகள்
பந்தாய்வந்தாலுங்கொடுப்பேன் முண்டாமுண்டா

ஆயிரம்பேரிருந்தாலும் ஞாயமாயான்சர்சொல்லியென்
ஆசான்கிருபையால்விரட்ட ரண்டாரண்டா

## கேள்வி விருத்தம்.

ஆலயங்கள்தொழுவதுதான் மிகநன்றென்றே
ஔவைசொன்னாள் அகஸ்தியருஞ்சொல்லிவைத்தார்
மேலவர்க்கும்அதிகமாய்க் கற்றஞான
வித்தகரென்றுமையாங்க ளறிந்திடோமே
கோலெடுத்துநடக்கின்ற குருடன்கண்ணைக்
கோகனகக்கண்ணனென்று கூறல்போலும்
காலெடுத்துமுததமிட்ட முயலைப்போலும்
கந்தருப்பன்பெரிதெனவே கதைசொன்னீரே

வித்வத்தன்மையிலுமக்குத் தத்வவழிபத்தாததால்
நித்தியம்போதித்துவைப்பேன் கேளும்கேளும்
வேடிக்கையாகவேகண் மூடிப்பாட்டுகள்பாடிநீர்
ஜோடியெனக்கீடில்லையே நாளும்நாளும்
திருப்பழனிக்குமாரு செங்கைவடிவேலெடுத்துச்
சித்தசனெரியானென்ற நம்மைநம்மை
சீக்கிரந்தெண்டிப்பாரே சாக்ரதையாயிருங்கள்
செய்கைஅறியச்சொன்னேன் உண்மைஉண்மை

## இந்தியன் பின்னல்கோர்ட் சட்டவிருத்தம்.

தொல்லுலகில்வல்வாட் டெல்லிங்சபைநேரே
சுத்தமுடன்வெறிகிளாட்டாய்க் கவிசொல்வீரே
அல்லும்பகலுங்கிங் மன்மதாபர்ன்ட்
அறியாமலேஇவ்ப்நாட் எக்ரியூகெட்டவுட்

வல்லபமாய்ப்பாடுகின்ற வழக்கம்விட்டு
மாசபையோர்கள்முன் மகிழ்ந்துமின்றே
சொல்லுவீர்சம்பந்தர் ஜட்ஜிமுன்பு
சுத்தமாய்ப்புராணவழி சூட்டுவீரே

அருமறையுணர்ந்தபுலவோரே ஆக்ட்சட்டமுறைப்பேன்சபைநேரே
செருவங்கொண்டிகமிதனிலின்று கேள்விகள்கேட்டுவந்தீர்நன்று
தெரிந்தவர்போலேபற்கடித்து-என்முன்புசெப்பினீர் துடிதுடித்து
பொருளிலாக்கவியதனைப்பாடிப் புலம்பவந்தீரேசபைநாடி

உத்தார்.

தரணிதனில்நன்று சல்தியாய்ஆன்சரொன்று
விரைவாய்ச்சொல்லாதின்று வெறிகிளாட்டாய்க்
கவிசொல்புலவோரே (ஆக்கிட்)

உண்மையறியாதுமாரனெரியானென உலகமதிற்பாடினதாலின்று
ஒன்தவ்ஷன்எயிட்டன்றடன்சிக்ஸ்டி உயர்ந்தபோட்டிவின்கஷ்டி
இந்தியன்பினல்கோர்ட்டாக்டாம்போர்ரன்றடன்பாட்டிஎயிட்டாம்
பைவன்றடன்ஷெக்ஸன்படிதானே பாரினிற்கேளுங்கனவானே

உத்தார்.

இந்நகரில்தானே இசைந்த குணவானே
அன்பாகச்சபை முன்னே
அசைஇசையாய்ப்பாடும் புலவோரே (ஆக்ட்)

தூசணமாகப்பாடாதே பபனுறச்சொல்லுவிரிப்போதே
நேசரேமுந்நூற்றைம்பத்திரண்டாம் ஷக்ஸனில்நேமித்தகுற்றமாம்
ஈ-பி நூற்றிநாற்பத்தேழிலே கல்கமதுசெய்தாலினிமேலே
கூசாமலிரண்டுவருடந்தண்டிப்பார் பிரிவின்படி
கோர்ட்டார்கள் செய்வார்

உத்தார்.

ஆசையுடனேஐயா அன்பர்களேநல்மெய்யா
ஈசன்விழியால்துய்யாமதன் எரிந்ததாய்ப்
பாடும்புல வோரே (ஆக்)
நிறைந்தவல்வாட்டெல்லிங்சபைநேரே
டுடேவெறிகிளாட்டாய்க்கவிசொல்வீரே
டெல்மீ வாட்டீஸ் யுவர்நேம்சார்
வாட்வாஸ் தி டீச்சர்தட்தாட்யூ
வாட்டீஸ் யுவர் கியாஸ்டு
டுடே அந்திவாக்கிங் திரோட் கோ
கிங்மன்மதாபர்ண்ட் இவ்ப்நாட் எக்ரியூகெட்டவுட்

உத்தார்,

ஜட்ஜிகளுங்கூடி சம்மந்தசாமிநாடி
கட்சியில்லைஎன்றேடி காமனெரிந்தானெனப்பாடி
சங்கம்புகழ்மதுரையிற் பிரகாசன்
தமிழெல்லாம்படித்தவர்க் குல்லாசன்
சிங்கக்கொடியறுத்த குணநேசன்
நிரன்மீனாட்சிசுந்தரம் சீஷன்
எங்கள்குருபழனிக்குமார் சாமி
இயற்றியலாவணிதனையிப் பூமி
உங்களுடசமாவதற்குத் தானே
உறுதியாய்நோட்டீஸ் தந்தேனே

உத்தார்.

இங்கிதமாய்ப்பாட எவருமே கொண்டாட
பங்கப்பட்டுநீரோடப் பகருவேன்கேளும்புலவோரே (ஆ)

சாதுசற்சனர்களேப்போதும்வசித்திருக்கும் என்ற மெட்டு.

## மங்கள லாவணி.

### கண்ணிகள்.

மன்மதராஜேந்த்ரனுக்கும் மங்கைரதிதேவியர்க்கும்
ஜெயமங்களம் நித்ய சுபமங்களம்

ஐங்கரகணபதிக்கும் ஆறுமுகவேலவர்க்கும்
ஜெயமங்களம் நித்ய சுபமங்களம்

மானதன்பிர்விர்த்திக்கும் மகாவிஷ்ணுலட்சுமிக்கும்
ஜெயமங்களம் நித்ய சுபமங்களம்

சுந்தரிசிவனுக்கும் சபையோர்கேட்போருக்கும்
ஜெயமங்களம் நித்ய சுபமங்களம்

சற்குருமீனுட்சுந்தரர்க்கும் சார்ந்தபுலவர்கட்கும்
ஜெயமங்களம் நித்ய சுபமங்களம்

பழனிக்குமாருக்கும் பாரிலனைவருக்கும்
ஜெயமங்களம் நித்ய சுபமங்களம்

மன்மதன் எரிந்தகட்சி லாவணிகள்
முற்றிற்று.

[வ]ந்து விட்டது! [வ]ந்து விட்டது!!

[த]மிழ் நாடெங்கும் புகழ்பெற்றுள்ள, கன்னிச்சமீன் சரபம்,

உடுமலை முத்துசாமிக் கவிராயரவர்களியற்றிய

# இராமாயண நவீன நாடகம்.

ஏழுகாண்டங்களும் சம்பூர்ணமாக அடங்கப்பெற்றுள்ளது.

மூந்துங்கள்! புத்தகத்திற்கு மூந்துங்கள்!!

இகபர சாதனங்களுக்கு இன்றியமையாததும், இஷ்டகாமியார்த்த சித்திபெறச் செய்வதும், ஆகிய இராமாயண காவியத்தை முற்காலத்துக் கவிவல்லோர்கள் பலவித காவியங்களாகச்செய்து, உலகத்தை இன்புறச் செய்திருக்கிறார்கள் எனினும், இவை "தற்கால நாகரிகத்திற்கு அநுகூலமானவையல்ல" என்பது நன்கறிந்த நண்பர் பலரும் விரும்பியவண்ணம் பற்பல அற்புத வர்ணமெட்டுகளாலியற்றப்பெற்ற பாடல்களாலும், படிப்பவர்களுக்குப் பிரத்தியக்ஷமாக நடைபெறுவது போலத் தோற்றும் நாவல்கள் போன்ற சிறந்த செந்தமிழ் வசனங்களாலும் இயற்றப்பெற்று உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு, ஆப்டோன் என்ற சித்திரப்படங்களால் அலங்கரித்துச சொற்பக்காப்பிகளே தயாரித்திருக்கிறோம்.

இதில் அமைந்துள்ள வர்ணமெட்டுகளின் இனிமையும், பாடலின் பெருமையும், வசனசாதுர்யங்களின் அருமையும் நவரசபூர்த்தியாகவேயிருக்கும். விலை ரூ 2.

## சிறந்த செந்தமிழ் நாவல்கள்.

| | | | |
|---|---|---|---|
| அன்பின் களஞ்சியம் 1-ம் பாகம் | 1 | 8 | 0 |
| ௸ 2 ம் பாகம் | 1 | 8 | 0 |
| ௸ 3-ம் பாகம் | 1 | 8 | 0 |
| ஜெயசீலன் (அல்லது) அடாதுசெய்பவர் படாதுபடுவர் | 1 | 0 | 0 |
| ஆனந்தமனோகரன் (அல்லது) முயற்சி திருவினை ஆக்கும் | 1 | 0 | 0 |
| அமிர்தசாகரன் (அல்லது) கோடீசுரனுடையகுமாரன் | 1 | 0 | 0 |
| ம[த]னகாந்தி | 1 | 0 | 0 |
| [ஸௌ]மதி கோகிலமானது | 0 | 12 | 0 |
| [ஜெ]ற்றேமட | 0 | 14 | 0 |

மகா-ா-ா-ஸ்ரீ உடையா[ர்]பிள்ளையவர்களியற்றிய,

| | | | |
|---|---|---|---|
| கோவலன் சரித்திரம் 1, 2 பாகங்கள் | 0 | 4 | 0 |
| அல்லியரசாணி சரித்திரம் 1, 2 பாகங்கள் | 0 | 4 | 0 |

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

புத்தக வியாபாரம், புதுமண்டபம், மதுரை.

மதுரைத் தமிழ்வித்வான்

ஸ்ரீ: நா. கிருஷ்ணசாமி நாயுடவர்கள் எழுதிய

# சாவித்ரி சத்யவான்.

## ஓர் இனிய தமிழ் நாடகம்.

இதில் அமைந்துள்ள வர்ணமெட்டுகளின் இனிமையும், பாடலின் பெருமையும், வசன சாதுர்யங்களின் அருமையும் நவரச பூர்த்தியாகவே இருக்கும்.

| | | |
|---|---|---|
| 1, 2 பாகம் | விலை அணா | 0—4—0 |
| ஸ்ரீகிருஷ்ணலீலா | ,, | 0—4—0 |
| நல்லதங்காள் சரித்திரம் 1, 2 பாகங்கள் | ,, | 0—4—0 |
| ஷை காந்தி தியானம் சிங்காரப்பாட்டுகளுடன். | . | 0—1—0 |
| ஷை இராமாயணத் திருப்புகழ்காவடிச்சிந்து, | | 0—2—0 |

முத்தமிழ் க்ஷேத்திர மதுர பாஸ்கரதாஸவர்களியற்றிய

| | | |
|---|---|---|
| இந்து தேசாபிமானிகள் செந்தமிழ்த் திலகம் 1, 2 பாகங்கள் | விலை அணா | 0—6—0 |
| புதிய பெரிய பக்திரஸக் கீர்த்தனங்கள் | ,, | 0—5—0 |
| ஷை இரண்டாம் பாகம் | ,, | 0—5—0 |
| லலிதாங்கிசரித்திரம் ஷையாரியற்றியது | ,, | 0—8—0 |
| வள்ளியம்மை சரித்திரம் ஷை | ,, | 0—6—0 |
| அதிரூப அமராவதி ஷை | ,, | 0—6—0 |
| சகுந்தலா 1, 2 பாகங்கள் ஷை | ,, | 0—8—0 |

உடுமலை முத்துசாமிக் கவிராயரவர்களியற்றிய

| | | |
|---|---|---|
| இராமநாடகம் (படங்களுடன்) | விலை ரூ. | 2—0—0 |
| பக்திரஸக் கீர்த்தனங்கள் | | 0—5—0 |
| ஷை இரண்டாம்பாகம் | | 0—5—0 |

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,

புத்தகவியாபாரம், புதுமண்டபம், மதுரை.